# வாலைவாகடம்

சரஸ்வதி மகால் நூலகம்
தஞ்சாவூர்

தஞ்சாவூர் சரசுவதி மகால்

வெளியீட்டு எண். 481

# வாலைவாகடம்

பதிப்பாசிரியர்

டாக்டர் ச. அரங்கராசன் பி.ஐ.எம்.

மாவட்ட சித்த மருத்துவ அலுவலர்

கும்பகோணம்

தஞ்சாவூர் மகாராஜா

சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்

2005 விலை ரூ. 10

# நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

... ★ ...


| | | |
|---|---|---|
| நூற் பெயர் | : | **வாலைவாகடம்** |
| பதிப்பாசிரியர் | : | **ச. அரங்கராசன்** |
| வெளியிடுபவர் | : | இயக்குநர், சரசுவதி மகால் நூலகம் |
| வெளியீடு எண் | : | 481 |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதல் பதிப்பு |
| வெளியீட்டு நாள் | : | டிசம்பர், 2005 |
| தாள் | : | 18.0 கிலோ தமிழ்நாடு |
| நூல்அளவு | : | 21 × 14 செ.மீ. |
| பக்கங்கள் | : | 248 |
| படிகள் | : | 500 |
| எழுத்து | : | 10 புள்ளி |
| அச்சிட்டோர் | : | **ஸ்ரீ வேலன் பிரஸ்,** 5, S.P. கோயில் தெரு. சிதம்பரம். ☎ 220118 |
| புத்தகக் கட்டு | : | அட்டைக் கட்டு |
| பொருள் | : | மருத்துவம் |
| விலை | : | **100–00** |

# வெளியீட்டாளர் முகவுரை

**வாலைவாகடம்** என்னும் இம்மருத்துவ நூல் சரசுவதி மகாலில் உள்ள தமிழ் ஏட்டுச் சுவடியில் இருந்து பதிப்பிக்கப் பெற்றதாகும். மகப்பேறு மருத்துவம் குறித்த இந்நூல் பொதுக்காண்டம், மகவிலாக்காண்டம், கர்ப்ப உற்பத்திக்காண்டம், பாலவாகடம், அலகைக்காண்டம் என பகுதிகளாகப் பகுக்கப்பெற்று தெளிவான மருத்துவ முறைகள் பற்றி பாடல்கள் வடிவில் விளக்குகின்றது.

மாவட்ட சித்த மருத்துவராக விளங்கும் டாக்டர் **அரங்கராசன்**, இந்நூலினை உரையுடன் செம்மையுற பதிப்பித்துள்ளார். அவரது பணி பாராட்டுக்குரிய தாகும். முதற்பதிப்பாக வெளிவரும் இந்நூல் மருத்துவர் களுக்கு மட்டுமின்றி பொதுமக்களுக்கும் மிகுந்த பயனளிப்பதாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

இந்நூலை மிகச்சிறப்பாகப் பதிப்பித்து வெளியிடத் துணைநின்ற சரசுவதி மகால் நூலக நிர்வாக அலுவலர் திரு. **இரா. சுப்பிரமணியன்**, வெளியீட்டு மேலாளர் டாக்டர். குடவாயில் **பாலசுப்பிரமணியன்** ஆகியோருக்கும், நூலினை அச்சிட்ட **சிதம்பரம் ஸ்ரீ வேலன்** அச்சகத்தாருக்கும் என் பாராட்டுக்கள்.

இந்நூலினை அச்சிட நிதியுதவி நல்கிய நடுவண் அரசுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மா. வீர சண்முகமணி, இ.ஆ.ப.,**
மாவட்ட ஆட்சித்தலைவர்
மற்றும் இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்
8 - 12 - 2005

# முன்னுரை

'வாலை வாகடம்' என்ற சுவடி (எண் 174) சரசுவதிமகால் நூலகத்தில் உள்ளது. இந்தச்சுவடியில் தாய் - சேய் பற்றிய மருத்துவக் கருத்துக்கள் இடம் பெறுகின்றன. நூலின் அமைப்பு பலவேறு பிரிவுகளாக உள்ளது - பொதுக்காண்டம், மகவிலாக் காண்டம், கர்ப்ப உற்பத்திக் காண்டம், அலகைக் காண்டம், வியாதிக் காண்டம். பாடல்களில் பல ஏனைய சித்தர்களின் நூல்களில் இடம் பெற்றுள்ளன, அவைகளை ஒப்பு நோக்கி, பாடபேதம், பிரதி பேதம், மூல பாட பேதம் என்பன உரையுடன் இங்கே எடுத்துக் கூறப்பட்டுள்ளது. உரையானது மூல நூலில் இல்லை; எனவே உரையானது சிறப்புப் பதிப்பாசிரியரால் எழுதப்பட்டுள்ளது.

'வாலை' என்பதற்கு பெண், திராவகம் வடிக்கும் கலம் என்பதாக அகராதியில் பொருள் உள்ளது. பழந்தமிழ் நாட்டில ஆண் பருவங்கள்,

பெண் பருவங்கள் ஏழாகப் பாட்டியல் நூல்கள் கூறி உள்ளன. பெண் பாற்பருவம் ஏழில், 'வாலை' என்பது இடம் பெறவில்லை. ஆயின் பிங்கலம் என்ற நிகண்டு 'வாலை, தருணி', பிரலிடை, விருத்தை' என்ற நான்கு வித பெண்ணின் பருவங்களை எடுத்துக்கூறுகின்றது. இது வடமொழியில் கூறப்பட்ட பெண் பால் பருவங் கள்; தமிழில் உள்ள பருவங்களுக்கான வயது, பாட்டியல் நூல்களில் கூறப்பட்டது போல, வடமொழி யில் உள்ள பெண் பருவத்திற்கான வயது கணிக்கப் பட வில்லை. வடமொழியின் இலக்கணப்படியே இங்கு 'வாலை' என்பது சித்தரால் இந்நூலுக்குச் சூட்டப் பட்டுள்ளது. சித்தர்கள் வாலை என்ற பெண் கடவுளைப் போற்றி வழிபட்டு வந்தார்கள். 'வாலைப் பெண்', வாலைக்குமரி என்றும் அவர்தம் பாக்களில், இச்சொல்லாட்சியானது உள்ளது

'வாலை' என்ற தீராவகக் கலத்தில் மருந்தை வடிகட்டிப் பயன்படுத்துவது போல, மருத்துவக் கருத்துகளை தொகுத்து, வடிகட்டி நூலாக வழங்குவ தால் வாலை எனப்பெயர் சூட்டப்பட்டிருக்கலாம். வாலை என்ற பெண்ணுக்கு மகப்பேறு, சேய்நலம் போன்றவற்றை எடுத்துக்கூறும் முகமாக, இது 'வாலை வாகடம்' என்றும் பெயரிடப்பட்டிருத்தல் கூடும்.

மிகப்பழங்காலந்தொட்டே தமிழர்கள் தாய் - சேய் நலம், கருவளர்ச்சி, மகப்பேறு போன்ற பொருட்களை உணர்ந்திருந்தனர். இலிங்க வழிபாடு போன்றே பெண் தெய்வ வழிபாடும், யோனி வழிபாடும் இடம் பெற்றிருந்தன. 'காடுகிழாள்' என்ற கொற்றவை வழிபாடு பாலை நிலத்திற்கு உரியதாக பழந்தமிழ் நூல்களில் கூறப்பட்டுள்ளன. மகப்பேறு பற்றிய பல செய்திகள், சங்க இலக்கியத்தில் காணப்படுகிறது. மகப்பேறு தெய்வத்தால் ஏற்படுகிறது என்பதை ஐங்குறுநூறு கூறும்.

"குன்றக் குறவன் கடவுட்பேணி
இரந்தனன் பெற்ற வெள்வளை குறுமக"

பெண்கள் மாதவிடாய் காலத்து வீட்டில் உள்ள பொருட்களைத் தொடமாட்டார்கள். எனவே இவர்கள் 'கலந்தொடாமகளிர்' எனப்பட்டனர். இவர்கள் செவ்வாடை அணிந்து, தங்கள் நிலையை மற்றவர்களுக்குத் தெரிவித்தனர். இதனைப் பரிபாடல் 'சிவப்புற நாளணித்துவங்கும் சுணங்கறை' என்று கூறும் மகப்பேறு பற்றியும், தடுப்பு மருத்துவம் பற்றியும் பெண்கள் அறிந்திருந்தனர். மகப்பேறு, 'புனிறு' என்றழைக்கப்பட்டது. மகப்பேறு நிகழ்ந்த பின்னர், நீராட்டானது, சிறப்பாக முதுபெண்களால் நிகழ்தப்பட்டது. குழந்தைகளுக்கு நோய்வராமல்

தடுக்க 'ஐம்படைத்தாலி' என்ற காப்பு அணிவிக்கப் பட்டது. உணவு உண்ணும் காலம் வரை, இக்காப் பானது குழந்தைகளுக்குப் போடப்பட்டது. வேம்பும், ஐயலி என்ற வெண் கடுகையும் சேர்த்துப் புகையிட்டு' நோய்களிலிருந்து காத்து வந்தனர்.

பேய் என்ற அலகையிலிருந்து புண்பட்டவீரர் களைப் பெண்கள் காத்து வந்தனர். இது பற்றி நெடு நல்வாடையானது.

"வேம்பு தலையாத்த நோன்காழ் எஃகம் எனக்கூறும் இன்னும் சகடப்பதலின் மூக்கின் கண்ணே, வேப்பிலை மிடைந்த, மகடூஉ இருந்து தூரப்ப"

என்று பெரும்பாணாற்றுப் படையில் கூறப்படு கின்றது. மகப்பேறு பெற்ற உமணப்பெண், தன் குழந்தையுடன், வண்டியில் செல்கின்றாள். பேய்கள் வந்து துன்பந்தராமலிருத்தல் பொருட்டு, வேம்பின் இலையையும் கொண்டு செல்லுகின்றாள். இது இக்காலத்தும் நடைபெறும் நிகழ்ச்சியாகும்.

'பேய்' என்ற சொல் சங்க இலக்கியத்தில் பரவலாகக் கையாளப்பட்ட சொல்லாகும். சங்கப் புலவர்கள் பேய் என்ற பெயரைக் கொண்டு வந்து உள்ளனர். பேயார், பேய் மகள் எழினி போன்ற பெயர்களைச் சான்றாகக் கூறலாம். பேய் என்பதற்கு

அச்சம் தரும் தோற்றம் உடையவர்கள், அச்சம் தரும் புண் 'பேய்ப்புண்' எனப்பட்டது.

" இன்னிசை மனைவி பேஎய் புண்ணோண் "
(புறம் 19)

மிகவும் பிற்காலத்தில் பேயாழ்வார் என்றும், பேய் நிலையில் காரைக்கால் அம்மையார் என்றும் கூறப் பட்டிருத்தல் காண்க. கலிங்கத்துப் பரணியில் பேயின் செயல்கள் நகைச்சுவையுடன் கூறப்பட்டுள்ளன. அலகை என்பதை இநூலில் நோயாக கூறப்படடு உள்ளது குழந்தைகளின் அழகைக்கெடுத்து, அனை வரையும் அச்சப்படுத்துவதாலும், குழந்தைகளின் எழில் நலம் சிதையக்காரணமாவதாலும் அலகைக் காண்டம் எனப்பெயரிடப்பட்டுள்ளது. இக்காண்டத்தில் மகப்பேறு ஏற்பட்ட உடனே குழந்தைகளுக்கு ஏற்படும் நோய்கள், நாள்தோறும் வரும் நோய்கள், மாதந் தோறும் வரும் நோய்கள், வயது தோறும் வரும் நோய்கள் என்று பலவாறு நோய்கள் கூறப்பட்டு உள்ளன. நோய்களின் பெயர்கள் வேறு மருத்துவ நூல்களில் காணப்படாதவைகளாகும். மலட்டுரோகம் தோன்றக்காரணங்கள் யாவும் 'மகவிலாக்காண்டத்தில்' உள்ளன. குழந்தை பேறு பற்றியவைகள், கர்ப்ப உற்பத்தி காண்டத்தில் கூறப் படுகின்றன. குழந்தைகளுக்கு வரும் நோய்கள்

வியாதிக்காண்டம், அலகைக்காண்டங்களில் உள்ளன. ஓராண்டு முதல் 13 வயது வரை உள்ள நோய்கள் அனைத்தும் இந்நூலில் கூறப்பட்டுள்ளது.

சரபேந்திரர் 'கர்ப்பிணி - பாலரோக சிகிச்சை' என்ற நூலில் உள்ள பாடல்களும், பாலவாகடம் என்ற நூலில் உள்ள பாடல்களும், இந்நூலில் உள்ளன. அப்பாடல்கள் அனைத்தும், பதிப்பாசிரியரால கண்டறியப்பட்டு ஒப்புநோக்கப்பட்டுள்ளன.

அலகைக்காண்டம் போன்றே வேறு பல குழந்தை வாகட நூல்கள் பதிப்பாகி உள்ளன. எனினும் அலகைக் காண்டம் வாலை வாகடத்தில் உள்ளது. இதுவரை பதிப்பிக்கப்படவில்லை. ஏனைய பாலவாகட நூல்களில் கூறப்பட்ட நோய்களின் பெயர்கள் பட்டியலிடப்பட்டுள்ளது. இது சித்த மருத்துவ ஆய்வாளர்களுக்குப் பயன்படும். மருத்துவம் தவிர ஏனையவைகளுக்கான உரை தவிர்க்கப்பட்டது இந்நூலில் உள்ள மருந்துகளின் பயன்பாட்டை சித்த மருத்துவர்கள் அறிதல் வேண்டும். பாலவாகடம் அனைத்தும் ஒன்றாகத் தொகுத்து வெளிவருதல் வேண்டும்.

இந்நூல் பதிப்பிக்கக் காரணமான தஞ்சை மாவட்ட ஆட்சியர் மற்றும் சரசுவதி மகால் நூலக இயக்குநர் திரு **ம. வீரசண்முகமணி** இ அ. ப. அவர்களுக்கும் நிர்வாக அலுவலர் திரு. **இரா. சுப்ரமணியன் M.A.,** அவர்களுக்கும் **நூலக** வெளியீட்டு மேலாளர் முனைவர் குடவாயில் **பாலசுப்ரமணியன்** அவர்களுக்கும் செம்மையுற தக்கபடி திருத்தங்கள் கூறிய டாக்டர். பிரேமா எம் டி (சித்தா) தலைவர் சித்த மருத்துவத்துறை தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர் அவர்களுக்கும் சிறப்புற அச்சேற்றித்தந்துள்ள **சிதம்பரம் ஸ்ரீ வேலன்** அச்சகத்தாருக்கும் என் மனமார்ந்த நன்றி.

வழக்கம் போல 'வாலை வாகடம்' என்ற சித்த மருத்துவ நூலை, சித்த மருத்துவர்கள், சித்த மருத்துவ ஆர்வலர்கள் வாங்கி, ஆதரவு நல்கக் கேட்டுக்கொள்கிறேன்.

**சு. ரங்கராசன்**, பி.ஐ.எம்.,
உதவி மருத்துவ அலுவலர் (தேர்வு நிலை)
அரசினர் ஆரம்ப சுகாதார நிலையம்
மெலட்டூர்

# வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள், அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும், பனையோலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவை, பல்வேறு இடங்களில் முடங்கி உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்கு முன் சரசுவதி மகாலுக்கு அன்பளிப்பாகக் கொடுத்து உதவினால் அவை மக்களுக்குப் பயன்படும்.

மகாலுக்குக் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப் புகழை, பெருமைசால் சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாகி வருமாயின் சுவடி தந்தவர் பெயர் இடம் பெறுவதோடு, அப்பதிப்பில் ஐந்து பிரதிகளும் பெறுவர்.

எனவே "நாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம்" என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளைச் சரசுவதி மகாலுக்குத் தந்து உதவ வேண்டுகிறேன்.

ம. வீரசண்முகமணி, இ.அ.ப.,
மாவட்ட ஆட்சியர் மற்றும் இயக்குநர்
சரசுவதி மகால் நூலகம்

தஞ்சாவூர்
1—9—2005

# வாலைவாகடம்

## பொதுக்காண்டம்

### காப்புச்செய்யுள்

வையகந்தன்னில் வாலையின் வாகடம்
நொய்ய செந்தமிழால் சொல் நாள்தோறும்
செய்து காத்தளிக்கும் திரு நாயகன்
துய்ய தாமரை சேவடி சூட்டுவாம் 1

சீர் நிறைத்த கருணையின் தேவனே
பார் நிறைந்த உதரம் படைத்தவர்
பேர் நிறைந்த மெய்யன் உடைவல்லவர்
கூர் நிறைந்த சொல்லொன்று அது கூறுவாய் 2

**உரை:**

உலகத்தில் உள்ள மக்கள்வாழ, 'வாலை வாகடம்' என்ற மருத்துவநூலை, தமிழில் இயற்றியுள்ளேன். காக்கும் இறைவனாகிய திருமாலின் திருவடிகளுக்கு, இதனை மலராகச் சூட்டி வணங்குகிறேன்.

அருள் கொண்ட இறைவன், இவ்வுலகில் உள்ள உயிர்களைப்படைத்தார். உயிர்களிடத்தில் அன்பு கொண்டவர் ஆவார்.

*கூறும் வையகந்தன்னிலே குழந்தைகள்*
*ஊறும் நன்கருவின்றி ஒளித்ததும்... ... —*
*ஏறுபோல் செனிப்பது மீறிலா ... ... —*
*வேறு வியாதி விளைவதேன்* 3

உரை:

உலகில் குழந்தைகள் அரிமா போலப் பிறப்பதும் சில குழந்தைகளுக்கு நோய்கள் ஏற்படுவதும், மேலும் சில குழந்தைகள் கருவிலே நல்லபடி அமையாமல் இருப்பது மாகிய காரணங்களை எடுத்து இந்நூலில் விரமாகக் கூறுகின்றேன்.

*விளைந்த பேய்கள் புன்தோடம் மெய்யிலே*
*இளந்தையற்கு வருவது எப்படி*
*வளர்ந்தபித்தம், கபமுடன் வாதமும்*
*உளற்தெளிய பிரித்துரை உற்றதே* 4

உரை:

பறவைகள், பட்சிகளால் குழந்தைகளுக்கு நோய் உண்டாகும். இதற்கு பட்சி தோடம் என்று பெயர். தாயின் உடலில் நோய்கள் வரும் காரணம், பித்தம் தன்னளவான ½ மாத்திரையிலிருந்து மிகுந்து, கபம், வாதம் போன்றவற்றுடன் கூடி, நோயை உண்டாக்கும் இவைகளை மனதில் உள்ள அறியாமை நீங்கும்படி இந்நூலில் கூறுகின்றேன்.

*உத்தமத்தில் உயர்ந்த செவ்வாய் மின்னே*
*நத்தி நீயும் வினாவுதல் நன்றதே*
*பத்தியாக மனது பதித்து நீ*
*சித்தமென மொழித்தன்னிடம் சேர்ந்திடே* 5

உரை:

தூண்டி, இந்நூலைப் பற்றி நீங்கள் கேள்விகள் தொடுப்பது நல்லது. விளக்கமாக நான் தரும் கருத்துகளை மனதில் ஒழுங்காகப் பதியவைக்க வேண்டும்; மனதில் இவற்றைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

*சேர்த்தி டென்று சிரித்தும், மகிழ்ந்துதான்*
*வார்த்தை இங்கிதமாக விளம்புவார்*
*ஊத்தையான சடலத்துக்கொரு*
*ஏற்றமும் குறைவால் மகவில்லை கேள்* 6

உரை:

தன் மனைவியைத் தொடுதலால், சிரித்தும் மகிழ்ந்தும் இருப்பார்கள்; சொற்களை அழகுடன் உரையாடுவார்கள். கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து உற்று அறியும் தன்மையால் மகிழ்ச்சி என்றார் நூலாசிரியார். எண்வகை மலமுள்ள இவ்வுடல் உயர்ந்தும் தாழ்ந்தும் காணப்படும். மக்கள் பேற்றை அடைவதால் உயர்ந்த நிலையும், மகப்பேறு இல்லா முறையால் தாழ்மையும், உடலுக்குத் தோன்றும் இவ்வகையில் உடலுக்கு உயர்வு தாழ்வு கூறுகின்றார்.

*கேள், சுரோணிதம் சுக்கிலம் கூடியே*
*நாள்ஐந்து புனித்துளி போல் அவிழ*
*ஆளு பாலில் மோர் விழுந்தா மென*
*நீன் வயிற்றினில், நின்றது உண்மையே* 7

**உரை:**

**ஆணின் விந்துவும், பெண்ணின் நாதமும் சேர்ந்து ஐந்து நாளில் பனித்துளிபோல் கரு ஏற்படும். காய்ச்சிய பாலில், மோர்த்துளியை விட்டால், தயிர் உண்டாவது போல், பெருவயிற்றில் கரு உண்டாவது உண்மையாகும்.**

*உண்டதால் வரும் கர்ப்பத்தி(ன்) நோய்கள் தான்*
*கண்டதால் வரும் பிள்ளை வகை குணம்*
*பண்டு தாயை, சிறந்தது பாரில்*
*ஈன்ற பிள்ளையைச் சேர்ந்திது கேள்மின்னே* 8

**உரை:**

**உணவுப் பொருட்களை மகப்பேறு காலத்தில் உண்பதால், தாய்க்கு வரும் நோய்கள், காண்பதாலும் தீண்டுவதாலும், குழந்தைகளுக்கு நோய்கள் ஏற்படும். தாயின் மூலம் குழந்தைகளுக்கு வரும் நோய்கள், இயல்புகள் என்பன குழந்தையை அடையும். இது பற்றி நான் கூறக்கேட்பாயாக.**

*மின்னி நுண்ணிடை மென்கொடி வஞ்சியே*
*முன்னும் வாதபித்தம் கபம் மூன்றுக்கும்*
*சன்னி வாய்வதும் சேர்ந்தது பலவிதம்*
*மன்னி ஓங்கி வளர்ந்திடு மெய்யிலே* 9

**உரை:**

வாத பித்த கபம் என்ற மூன்று விதமான அளவுகள் தன்னளவில் மிகுந்து இருக்க, சன்னி என்ற முக்குற்ற நோய் பிறக்கும். இது பல காரணங்களால் ஏற்படும். இது உடலில் வளரும்.

*மெய்தாய் நின்ற வேத முதற்பொருள்*
*அய்யனே, அறிவின் மயமான கையால்*
*செய்ய வெங்கதிர் தோன்ற திரண்டிருள்*
*நய்ய ஓடுவதுபோலுரை நண்பனே* 10

**உரை:**

அறிவு என்ற வன்மையான ஒளிக்கற்றை தோன்றவும், திரண்ட இருள் விலகும். அறியாமை என்ற நிலை, மருத்துவ நூலறிவு கொண்டோரால் விலகியே ஓடும். இதை, நன்றாக உலகத்தோர்க்கு எடுத்துக் கூறுவாயாக.

*நண்பனே, குழந்தைப் பிணி நாடியே*
*திண்புவிக்குள், விளைந்தது செய்வதும்*
*பண் படைத்திடு பெரும்பல சாந்தியும்*
*விண்புகழ்ந்திட ஓதிடும், என்றனள்* 11

**உரை:**

நண்பனே, குழந்தைகளுக்கு வரும் நோய்கள் அதற்கான மருந்துகள் மற்றும் ஏனையவற்றை தெரிந்து கொள்ளவும். இது வானமளவுக்கு மருத்து வருக்கு புகழைத்தரும் என்று கூறுவாள்.

*என்றபோது, மகிழ்ந்த களிப்பினால்*
*வென்றவாள், விழி மெல்லியரே, மனம்*
*நின்றுகேள், என வேதம் இயம்பவே*
*ஆண்டிலா மனம் மகிழ்ந்தவர் ஓதினார்* 12

**உரை:**

இவ்வாறு தாய்மார்கள், கூறியதைக் கேட்ட மருத்துவர், குழந்தைகளின் நோய்கள் அதற்கான மருத்துவ முறைகளைக் கூறுகின்றேன் கேட்கவும். மகிழ்ச்சியுடன் மருத்துவர் தாய்மார்கள் கேட்க இந் நூலைப்பற்றி விளக்கமாகக் கூறுகின்றார். மகிழ்ச்சி களிப்பு என்று இரண்டு முறை வலியுறுத்திக் கூறுகின்றார் நூலாசிரியர்.

# மகவிலாக்காண்டம்

*ஓதியா மா மகவல்லது நீதியுரைத்திட*
*மேன் மேலும்[1]*
*தாதுக்கு அல்குலிலே மலருண்டது*
*தானிடையே புரளில்*
*நீதியதாய் விழுமாம் இரதம்புக நின்றிடுமே ஒதுங்கி*
*வேதம் இப்படியே உரையானது[2] மென்கொடி*
*நீ அறியே*

**உரை:**

ஆணின் விந்து, அல்குல் மூலம் சூல்களுடன் கலந்தால் கரு ஏற்படும். கருப்பையானது தன் அமைப்பில் மாறுப்பட்டிருந்தால் கருப்பைக் குழாய் அடைப்பு, கருப்பை வளர்ச்சி அடையாதிருத்தல் என்பன போன்றவற்றால் கரு ஏற்படாத நிலை உண்டாகும்.

---

**பாட பேதம்:**

**கர்ப்பிணி பாலரோக சிகிச்சை**

1. திருவே
2. உரையாடிடு

*நீயறி மாமலர் தானதில். வாயு உரின் நேயமதாம்*
*அமுதம்*
*தாயகமாகிய மாபலன் அற்ற தின்*
*சாரமெல்லாம் ஒழுகி*
*சீயென நீரெனவே அதுபோய்*
*வளர்தேகமெல்லாம் ஒழுகி*
*ஓயும் விதங்கள் இதாகும், மகிழ்ந்து கொள்*
*ஒண்தொடி இன்புறவே* 2

உரை:

கருப்பையில் வாயு இருந்தால், விந்தின் அணுக்கள் கருப்பையில் சேராமல், சீழ் போலவும், தண்ணீர் போலவும் வெளியாகும். பலன் ஏற்படாது. இதனை அறிந்து கொண்டு தக்க மருத்துவம் செய்தால், மகப்பேறு ஏற்படும்; தாய்மார்கள் மகிழச்சி அடைவார்கள்.

*இன்புறு மாமலர் தன்னிலுமே சதை*
*ஏகமாய் வளர*
*அன்புருகும் பொழுதே விழுமாம்*
*அமிர்தம்சளி போலும் உருகி*
*அன்புப்படி உறையாது கலங்கி*
*வளத்திடுமே வெளியில்*
*மென்பத நூலிடைக் கஞ்ச மதாமென்முலை*
*மென் குழல் மெல்லியளே* 3

உரை:

கருப்பையில் சதை வளர்ந்திருந்தால், ஆணின் விந்தணுக்கள், கருப்பையில் சேராமல் தடைப்படும். இது சளிபோல உருகி, உறையாமல், கலங்கி வழிந்து, வெளியே வரும். இதனால் மகப்பேறு ஏற்படாது.

*மெல்லிதழ் பூவினில் வல்வலி உட்டிண*
*மேன் மேலுண்டாகில்*
*நல்லிதமாய் விழுமென்ன அமிர்தம் தணல்*
*நாடின வெண்ணையதாம்*
*கொல்லத்தில் நின்று மிகுந்து வெதும்பி*
*கொழு முகமாம் வழியே*
*சொல்லி முடித்துரை போய்விடு மாமறை*
*சூத்திரம் இப்படியே* 4

உரை:

கருப்பையில், வெப்பம் அதிகமாக இருந்தால், விந்தணுக்கள் வெதும்பி, வெளியேறும், தீயில் போட்ட வெண்ணை உருகுவது போல உருகி, வெளியேறும் என்று அறிய வேண்டும்.

*இப்படி பூவினில் சீதளமே உறில்*
*இன்ப மதாம் வேளை*
*செப்பிய மாக அமிர்தம் விழ நின்று*
*தெளிந்து முறிந்துடனே*
*அப்புளனப் பழுதாகி நனைந்த*
*அயலோடி அழிந்து விடும்*
*அப்படியும் குழல் செப்பிள மென்முலை*
*வல்லி தன், வான் நுதலே* 5

உரை:

கருப்பையில், நீர் இருக்குமாயின் விந்தணுக்கள், சேர்ந்து, முறிந்து விடும். இதனால் மகப்பேறு ஏற்படாது என்று அறியவும்.

வான நீ யோனியிலே மலர்மீதினில்
மாப்புழுவே இருந்தால்[1]
ஊனிய மாஅமிர்தம் தனை எய்து
உண்டு களித்துமிக
ஆணவமாகி, பெருத்து[2] வளர்ந்திடு
மாயையினால் பிண்டம்[3]
காணலை என்று கரைந்திடுவாரிது
கண்ட காரிகையே 6

உரை:

கருப்பையில் புழு இருந்தால், விந்தணுக்களை அடைந்து, உட்கொள்ளும். பெரிய உருவத்தைப் பெற்று, வளரும். கருவானது மறைந்து, கரைந்து போகும்.

காரிகையின் குறிப்புவினிலே[4] இரும்
காற்றென சங்கை யுரில்
விரியமே விழும் போதினில் எய்து[5]
வீழ்வது முன்பாக
சாரமெல்லாம் கொண்டு போய்விடுமேயிது
சத்தியமே உரைத்தேன்
வாரணி கொங்கை நல்லாய் மிக
வேயறி மாமறை நூல் முறையே 7

---

பாடபேதம்: கர்ப்பிணி பாலரோக சிகிச்சை

1. புழுவங் குறிலோ
2. நிலைத்து
3. மாகையினான் மகவை
4. குறிமாமலர்
5. அது

உரை:

பெண்களின் கருப்பையில் காற்று இருந்தால் விந்தணுக்கள் சேரும் முன்பே, கலைத்து, சத்துக்களை கொண்டு போய்விடும். சத்துக்கள் வீணாகப் போய் விடுவதால் மகப்பேறு ஏற்படாது போகும். இதை உண்மையாக உனக்குக் கூறினேன்.

*நூலாலிடையாள் குறியா நிறமதாகவும் 1*
*நுன் கொழுநன் குறிதான்*
*சீலமுடன் சரி நீளமில்லாவிடில்*
*தெய்வதினால் அமிர்தம்*
*பாலெனவே உறையாமல் உடம்பில்*
*பறந்து கலந்துவிடும்*
*வேலெனும் ஆய விழியாயிது*
*கண்டறிவதன் விதிப்படியே* 8

உரை: **(நிறம் - இயல்பு)**

பெண்ணின் கருப்பை இயல்புடனும், ஆணின் உறுப்பு சரியான படி இல்லாமலும் இருக்க, மகப்பேறு ஏற்படாது. இங்கு நீளம் என்பது விரைப்புத் தன்மைமைக்குறிக்கும். மேலும் சிலருக்கு பெண் இடத்தில் இன்பம் துய்ப்பதற்கு முன்பே, விந்து வெளி யாகும் நிலை உண்டு. இது 'Premature Ejaculation' எனப்படும். இக்காரணங்களால் மகப்பேறு ஏற்பாடமல் இருக்கும்.

---

பாடபேதம்: 6. ஆழமதாக

*வேதன் விதித்த இலிங்கமும் நீள*
*மிகுந்திடில் வேதனையால்*
*ஓதிய மாலமுதம் விழவெய்து ஊன்*
*இருந்திடு தன்*
*ஏதுவில்லாமல் உடைத்து மென்மேவி[1]*
*எழும்பிரு விந்துவிடு[2]*
*மாதன்மென் குழலின் பவழம் செறி*
*வாயுடைய மங்கையரே* 9

**உரை:**

ஆணின் உறுப்பு நீண்டு, விரைப்பு அதிகமானால் பெண்ணுக்கு துன்பம் ஏற்படும். ஆணின் விந்தணுக்கள் தக்க காப்பு இன்றி, தசைகளில் மோதி உடையும் இதன் காரணமாக மகப்பேறு ஏற்படாத நிலை உண்டாகும்.

*மங்கையர் ஆகிலும் ஆடவராகிலும்*
*மாவினையால் அவிழ்தம்*
*சங்கையில்லாம் அருந்தியகால், உடல்*
*இயங்கிய உட்டினத்தால்[3]*
*பொங்கிய மா அமிர்தம் சலமாகி*
*இருந்து[4] பொழிந்து விடும்*
*இங்கிது நீதி அறிந்திடும் வேதம்*
*இசைத்த இளங்கொடியே* 10

---

**பாடபேதம்:**

1. மென்மேலி
2. நலிந்து விடும்
3. தங்கிய வெப்பமதால்
4. மிகுந்து

**உரை:**

எவ்விதமான பயமும் இல்லாமல் மருந்துகளை பெண்கள், ஆண்கள் உண்ணுதலாகிய செயலைச் செய்கின்றனர். இதன் காரணமாக, உடலில் வெப்பம் மிகுந்து விந்து, நாதம் இவற்றின் இயல்பான தன்மை கெடும். இவற்றால் தண்ணீர்போல வெளியாகும். கரு ஏற்பாடமல் போகும். இப்பாடலில் மருந்துகளால் ஏற்படும் பக்க விளைவுகள், எதிர் விளைவுகளால் பற்றி நூலாசிரியர் கூறுகின்றார். சில மருந்துகள் மலட்டுத் தன்மை ஏற்படும் நிலையை விளக்குகின்றார்.

மருந்துகள் மட்டுமன்றி, அன்னாசிப்பழம் போன்ற பழவகைகளும், எள் போன்ற தானிய வகைகளும், கடுகு எண்ணெய் போன்ற எண்ணை வகைகளும் கருவை வெளியாக்கும் தன்மை கொண்டவைகளாகும்.

*இளங்கொடி எய்தினால் மகவில்லை*
*இதற்கு மருந்தினிலும்*
*வளஞ்செறி தந்திர மந்திர இயந்திர*
*மாபிரமன் விதியும்*
*உளங்களி கொண்டிடு பூர்வ புண்ணிய*
*ஒத்து நடந்ததினால்*
*விளங்கிய பிள்ளை களாகும் விதத்தை*
*விளிம்பு வன்மெல்லினியே* ||

உரை:

மகப்பேறு அடைய, மருந்து, (சந்தான கோபால) மந்திரம், இராமேச்சரம் போன்ற புனித இடங்களில் நீராடுதல், (புத்திர காமேட்டி) வேள்வி செய்தல், பழவினைகளால் பிரம்மதேவன் படைத்த விதிகளாலும், முற்பிறவியில் செய்த நற்செய்கைகளாலும் மகப்பேறு ஏற்படும். மன்னர்கள் மகப்பேறு ஏற்பட 'புத்திர காமேட்டி' என்ற வேள்வியைச் செய்ததாக தமிழ் இலக்கியங்களில் சான்றுகள் உள்ளன. சான்று பதிற்றுபத்தில் (85-ஆம் பாடல்) அரசில் கிழார் சேரன் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இளம் பொறையைப் பாடியது.

*மேலினி மங்கையர் மாதவிடாய் எனும்*
*விலகிய நாலாம் நாள்,*
*வாலிப ஆடவர் கூடிய போதினில்*
*மங்கை விலாவதுதான்*
*மேலிடு புண்ணெனவே வலியுண்டெனின்[1]*
*மென்பகமாய் மலரும்*
*கோலமில்லாமல் புரண்டது வேண்டஇதைக்*
*கூறுவேன், அவுடமதே[2]* 12

---

பாடபேதம்:

1. வேலிடு 2. என்றறி

உரை:

பெண்களுக்கு மாதவிலக்கு உண்டான 4ம் நாளில் கணவனுடன் சேரவும். பெண்ணின் விலாப்புறத்தில் வலி ஏற்பட்டால், கருப்பையானது மாறியுள்ளது என்று அறியவும். இதற்கான மருத்துவத்தைக் கூறுவேன்.

*கூறியதோர் பருத்திப் பருப்போடு*
*குலாவிய பெண் கோழி*
*வீரிய பிச்சுது இரண்டும் அரைத்தது*
*மேலிய பஞ்சூட்டி*
*ஊறிய யோனியிலே இது வைத்து*
*தொரு நாட் முழுவதும் சென்று*
*மாறி மாறி முக்காலும் புணர்*
*மைந்தனும் உண்டாமே* 13

உரை:

பருத்திக்கொட்டை, பெண் கோழியின் பித்து இரண்டையும் அரைத்து, பெண் உறுப்பில் பூசவும் பின்னர் கணவனுடன் சேர, மகப்பேறு ஏற்படும்.

*உண்டாமே திரண்டிரு நாளினில்*
*ஒண் கணவன் புணர*
*தண்டாம் திரேகமெல்லாம் வலி என்றிடில்*
*தாங்கிய மலரில்*[1]
*பண்டார் வாயு உறைந்தது என்றறி.*
*பகர்வேன் சீஷையது*[2]
*கொண்டார் இந்திராட்சைக்கனி இருநிட்கம்*[3]
*கூட்டிய நல்லெண்ணையே* **14**

**உரை:**

**மாதலிடாய் வந்த 4ம் நாளில் கணவனுடன் சேர, உடலில் வலி ஏற்பட்டால், கருப்பையில் வாயு என்று அறியவும். இதற்கு மருந்து திராட்சைகக்னி இரு நிட்கம் நல்லெண்ணையில் சேர்த்தரைத்துக் கொள்ளவும். பிறப்பு உறுப்பில் பஞ்சால் தடவ, நோய் தீரும்.**

*எண்ணையில் கூட்டி அரைத்தது பஞ்சினில்*
*ஏத்திய அல்குலிலே*
*நின்னையமாக முக்காலும் வைத்தாலது*
*நீங்கிடு, மார்பதிலே*
*கண்ணை வலிக்கும் என்றால் மலர்தானதில்*
*கண்டது சீதளமென்*
*எண்ணி மருந்துகள் செய்திடு செப்புவ*
*நேர் குழலேந்திளையே* **15**

---

**பாடபேதம்:** 1. பகரில்

2. **கடைசி மூன்று அடிகள், கர்ப்பிணிபால ரோக சிகிச்சையில் காணப்படவில்லை.**
3. நிட்கம் - 1 பலம் (3.5 கிராம்)

உரை:

கணவனுடன் சேர்ந்தபோது கண்ணில் வலி, நெஞ்சில் வலி என்று கூறினால், கருப்பையில் குளிர்ச்சியால் ஏற்பட்ட குற்றம் என்று அறியவும். இதற்கு மருந்துகள் உண்ணவும்.

*ஏந்திய காக்கரட்டான் மலர், கோட்டம்*
*இசைந்திடும் கருஞ்சீரி*
*பாந்தமதாம் சிறு அரத்தையும் சரிஎடை*
*பகர் எள்ளெண்ணையிலே*
*நேந்திட அரைதது பஞ்சிலே ஊட்டி*
*நிகல அல்குலில் வைத்து*
*சேர்ந்திட சீதளமே வாங்கிடும் நூன்முறை*
*தேர்ந்தறிதேன் மொழியே* 16

உரை:

காக்கரட்டான்பூ, கோட்டம், கருஞ்சீரகம், சிற்றரத்தை சரிஎடை எடுத்துக்கொள்ளவும் பொடி செய்து கொண்டு, சலித்துக்கொள்ளவும். நல்லெண்ணையிலே அரைத்துக் கொள்ளவும். பஞ்சாலே பெண் குறியில் வைத்து எடுக்கவும். குளிர்ச்சித்தன்மை நீங்கும் என்று மருந்துவநூல்களில் கூறப்படும். இம் முறையை தேர்ந்து அறிந்தேன்.

தேன் மொழியே உணர்[1] போதினிலே
தொடை சேர்ந்து
வலிக்குது என்றால்
மான் மலர்தான் உட்டிணம் என்றறி
மாட்டின் விலா என்பு
காணுரை காக்கரட்டான் மலர் நல்லெண்ணெய்
கண்டு கொள் மூவகையும்
தான் மிகவே, அரை பஞ்சினிலூட்டி
சாற்றிடும் அல்குலிலே 17

**உரை:**

கணவனுடன் சேரும் பொழுது, தொடையில் வலி ஏற்பட்டால், வெப்பம் காரணம் என்று அறியவும். இதற்கு மருத்துவம்: மாட்டின் விலா என்பு, காக்கரட்டான்பூ, இவற்றை இடித்துப் பொடிசெய்து நல்லெண்ணையால் அரைக்கவும். பஞ்சில் தோய்த்து பெண் உறுப்பில் வைத்து எடுக்க, வெப்பம் நீங்கி, மகப்பேறு உண்டாகும்.

சாற்றிட உட்டிணம் நீங்கும், இடுப்புதான்
வலிகண்டு என்றால்
காத்திர அல்குலிலே சதை என்றறி
களி அடிப்பின், அனேகமும்
எத்திய சீரக ஆவின் நெய்யாம் இவை
சேர்ந்தரை அவ்வகையும்
நேத்தியதாகவே பஞ்சினிலூட்டி
நிதம்பம் அதனில் வையே 18

---

**பாட பேதம்:** 1. புணர்

பாடல் எண் 17 கடைசி 4 வரிகள் மகால் பதிப்பில் காணப்படவில்லை.

**உரை:**

சேர்க்கையின்போது, பெண் இடுப்புவலிப் பதாகக் கூறினால், அதற்கு கருப்பையில் சதை வளர்ச்சியே காரணமாகும். சீரகப்பொடியை பசுநெய்யில் அரைத்து பஞ்சில் தோய்த்து பிறப்பு உறுப்பில் வைக்கவும். சதையானது கரையும் சதை வளர்ச்சி, குறைந்தவுடன், கணவனுடன் கூட மகப்பேறு ஏற்படும்.

*வைத்திடலே சதைதீர்ந்திடவும் பெண்ணே*
*மருவிடு நெய்தனிலே*
*சித்த மருட்சி கொள்ளாமலே மையல்*
*தீரலை என்றுரைத்தால்*
*வித்தக அல்குலிலே புழுவந்தேறின் மேவிய*
*செலிட்டு 1மண்ணீர்*
*முற்றிய மிசிரி, பருத்திப்பருப்போடு*
*மோதிய கடுக்காயே* 19

**உரை:**

கலவியில் போதிய இன்பம் கிடைக்க வில்லை என பெண் கூறினால், அதற்கு கருப்பையில் உள்ளபுழுவே காரணமாகும். இதற்கு மருத்துவம்: சாலா மிசிரி, பருத்திவிதை, கடுக்காய் இவற்றை நீர்விட்டு அரைக்கவும். பஞ்சால் தோய்த்து, பிறப்பு உறுப்பில் வைக்கவும் புழுக்கள் நீங்கி, மகப்பேறு ஏற்படும்.

---

குறிப்பு: 1. செலிட்டுமண் என்பது விளங்கவில்லை.
சவட்டு மண் என்ற உவர்மண்ணாதல் கூடும்

*காய் இவை எல்லாம் அரைத்திடு பஞ்சினில்*
*கலந்து பொட்டலம் செய்து*
*பாயக அலகுலில் வைத்திட பூச்சி*
*வறந்திடும் சத்தியமே*
*நாயலிதனையே சேர், குதிகால்*
*நரம்பு இழுத்திடும் என்றால்*
*தீய சங்கை களாம் என்றறி*
*சேயறி விழிமாதே* 20

**உரை:**

மனைவியுடன் சேரும் பொழுது, குதிகால் நரம்பு இழுக்கிறது என்று சொன்னால், அதற்குக்காரணம், கணுக்காலில் ஏற்பட்ட நோய் என்று அறியவும்.

*மாது நல்லாய் இது மந்திர செபதபம்*
*வைத்திட தீர்ந்திடும்*
*ஓதிய மருந்துகள் பொட்டலம் செய்து, இவை*
*யோணியில் வை, ' பகலில்*
*நீதி சேர் இரவினில் மூன்று தரம் புணர்*
*நித்தமும் இப்படி மூன்று*
*தேதியும் நடத்திட விந்துவும் தரித்திடும்*
*செகத்தினில் உள்ளோர்க்கே* 21

**உரை:**

கணுக்காலில் ஏற்பட்ட நோய்க்கு மந்திரம், வழிபாடு, அருள் வேட்டல் என்பனவற்றால் தீரும். முன் சொன்ன மருத்துவமுறைகளை, கையாண்டு, வரவும். இரவில் மனைவியுடன் மூன்று முறை சேரவும். மூன்று நாட்கள் தொடர்ந்து பின் பற்ற, மகப்பேறு ஏற்படும்.

*செகத்தினில் இவ்வகை பலபல விதமாம்*
*செய்யரி விழி மாதே*
*இகத்தினில் பூர்வ புண்ணிய விதியாம்*
*இசைந்திடும் குழவிகள் தான்*
*வகைத் திறமாகச் சொன்ன உற்பத்தி*
*வழியினைத் தனியாக*
*தொகுத்துரை செய்யவே நூனுயர் வேதத்தின்*
*சூட்சம் இப்படியாமே* 22

**உரை:**

உலகில், மகப்பேறு ஏற்படபற்பல முறைகள் கையாளப்படுகின்றன. முற்பிறவியில் ஏற்பட்ட விதிகளின்படி ஆண், பெண், என்று குழந்தைகள் ஏற்படும். குழந்தைகளின் பிறப்பு பற்றி, முறையாக நுட்பத்துடன், தனி நூலாக நான் தொகுத்துக் கூறுகின்றேன். உயர்வான மருத்துவ நூல்களில் கூறப்பட்ட நுட்பம் பற்றி எடுத்துக் கூறுகின்றேன்.

# கர்ப்ப உற்பத்திக் காண்டம்

*கருவுற்றிடு நாள் முதல் கன்னியாம்*
*மருவும் கர்ப்பத்தின் வந்திடும் நோயோடு*
*பிரிவதான சனைத்தின் பின்பிலும்*
*விரிவதாய் வரும் வியாதி விளம்புவாம்* 1

**உரை:**

மகப்பேறு அடைந்த நாள் முதலாக, வரும் நோய்களையும், குழந்தை பெற்றபின் வரும் நோய் களின் தன்மைகளையும், விரிவாக எடுத்துக் கூறுகின்றேன்.

*விளம்புகிறேன் திங்கள் மூன்றினில் வெவ்வியே*
*களங்கமான கறி சுவை உண்டியால்*
*விளங்கு மென கருக்கன்றி வெதும்பியே*
*தளர்ந்த இரத்தமாய் விழுந்ததையலே* 2

**உரை:**

மூன்று மாதத்தில், தாய் குறைபாடுகள் உள்ள மருத்துவ நூல்களில் கூறப்பட்ட ஒவ்வா உணவுகள் கறி இவற்றை உண்பதால், கருவானது வெதும்பி சிதைந்து இரத்தமயக வெளியேறும்.

*தையலே எள் சர்க்கரை கொள்ளுநீர்*
*துய்ய கொப்பரை முள்ளங்கி சோர்விலா*
*வெய்ய வச்சிரவல்லி மிகுந்த தோர்*
*செய்ய கோழிக்கறி இவை தின்றிலே* 3

**உரை:**

எள், சாக்கரை, கொள்ளு, கொப்பரைத் தேங்காய், முள்ளங்கி, பிரண்டை, கோழிக்கறி இவற்றை உண்ண, கருவானது கலையும்.

*தீண்டொண்ணா இவை தீங்கருவுக்குப்*
*பூண்ட காலிமண் சாம்பல் புசித்திடில்*
*பாண்டு பித்தாய் பகர் கர்ப்பத்தில்*
*மூண் டெழும் பிள்ளை முளைத்ததே* 4

**உரை:**

மசக்கை காலத்தில் தாய், காலிமண், சாம்பல் என்பன உண்ண, பிள்ளைக்கு வெளுப்பு நோய், பித்த நோய் என்பன கருவிலேயே ஏற்படும்.

*முளைத்தபின் அன்னை முதிர்ந்தோனாய்*
*வளர்ந்த பிள்ளை சூழ்ந்து வளர்ந்திடும்*
*கிளைத்த சர்க்கரை வள்ளிக் கிழங்குடன்*
*புளித்த மாங்கனி தெங்கு பலாவுக்கே* 5

*பலமதாம் கட்டுப்பால் சுரை பீர்க்கங்காய்*
*உலவும் வாழை, அவரை, துவரையும்*
*நலமில்லா தொரு கீரைத்தண்டின் கறி*
*குலவுமாம் கடலைதனைக் கொள்ளவே* 6

*கொள்ளவே செம்பிலி. தகர் கோழி, மீன்*
*எள்ளல் பன்றிக்கறி பலமாமிசம்*[1]
*உள்ளுக் கெண்ணெய் நிதம்நிதம் உண்டாக்கால்*
*பிள்ளைக்கு பல மாந்தம் பெருகுமே* 7

**உரை:**

சர்க்கரை வள்ளிக்கிழங்கு, மாம்பழம், தேங்காய், பலாப்பழம், திரட்டுப்பால், சுரை, பீர்க்கங்காய், வாழை அவரை, துவரை, கீரைத்தண்டுக்குறி, கடலை, செம்பிலி ஆடு, கோழி, மீன், பன்றிக்கறி, நெய் தினமும் அருந்துதல் போன்றவைகளை குழந்தையை பெற்றதாய் உண்பதால், குழந்தைகளுக்கு பலவகை யான மாந்தங்கள் ஏற்படும், எனவே இப்பொருட்களை குழந்தையைப் பெற்ற தாயர் உண்ணக் கூடாது.

*பெரும் கொ.. ...பிருங்கு பெருங்கம்பு*
*வரகு காருடன் வாழையின் காயோடு*
*உரை கொள்ள பாகல் கெளுத்தி மீன்*
*உண்டாக்கால்*
*விரிவதாம் கரப்பானும்... ...குந்ததே,*

**உரை:**

கம்பு, வரகு, வாழைக்காய், பாகற்காய், கெளுத்தி மீன், என்பனவற்றை தாய் உண்ண, குழந்தைக்கு கரப்பான் நோய் ஏற்படும்.

---

**பாடபேதம்: 1. பல் இறைச்சி**

*மிகுந்தவாளை விராட்டுமீன் கெண்டை மீன்*
*பகர்ந்த கோழி சிவப்பூத்தக்காய் பலா*
*மகிழ்ந்த தேங்குடன் மாங்காய் அறிந்திடில்*
*சுகந்தமாக சுழிக்கணம் தோன்றுமே* 9

**உரை:**

வாளைமீன் வராட்டுமீன் கெண்டைமீன் கோழி பலாப்பழம், தேங்காய், மாம்பழம், எனபன தாய் உண்ண, குழந்தைக்கு சுழிக்கணம் ஏற்படும்.

*கொள்ளும் ஐய பதார்த்தம் தண்ணீர்*[1] *பகை*
*வேன்று*[2] *தாகம் பசிகள் மிகுந்திடில்*
*மீண்டும் மீண்டு விசனங்களாகுதல்*[3]
*ஆன்றசெய்க்கும் கணங்களாகுமே* 10

**உரை:**

நீர் பொருட்களாகிய உணவுகளாலும், குடிக்கும் நீர், நீர்வேட்கை, பசி, என்பன அதிகமாக தாயைப் பீடித்தால், கவலையைத்தரும் கணம் என்ற நோய் ஏற்படும்.

---

**பாடபேதம்:**

1. தோய
2. ஊன்று
3. என்ற துன்பமெலாம் வந்து சூழ்தலால்

ஆகும் நவ்வல் ரம்பைக் கனியோடு
ஏகுமே இத்தயிருடன் சுருள்ளி
பாகமாம் வெள்ளரிப்பழம் உண்டாக்கால்
தேகமெங்கும் சுரங்கள் செனிக்குமே 11

உரை:

நாவற்பழம், வாழைக்கனி, தயிர். பூண்டு, வெள்ளரிப்பழம், என்பன வற்றைத் தாய் உண்ண, குழந்தைக்குச் சுரநோய் ஏற்படும்.

செனிக்கும் பேதிகளாகும் வகை செப்பக்கேள்
இனித்தபால் கட்டருந்திட இன்பமாய்
கனத்த மந்தங்களாகும் கஞ்சியும்
முளைத்த வாயு. மிகுந்திடில் முற்றுமே 12

உரை:

குழந்தைகளுக்கு பேதி வரும் வகையைக் கேட்பாயாக. சர்க்கரை கலந்த பாலை, தாய் குடிக்க மந்தம் ஏற்படும். கஞ்சி உணவால் உண்டான வாயுவால் பேதியானது உண்டாகும்.

முற்றுகின்ற பழத்தின் விரையோடு
சத்துவான நெய், பால், கஞ்சி சாதம்
முற்றின இலைக்கறி தேங்குடன் வாழைக்காய்
வெற்றியாம் மிகுந்து வளருமே 13

**உரை :**

பழத்தின் விரை, சத்துள்ளநெய், பால், கஞ்சி சோறு, முற்றியகாயின்கறி, தேங்காய், வாழைக்காய் என்பனவற்றைத் தாய் உண்பதால் கழிச்சல் நோய் ஏற்படும்.

*வளரும் கர்ப்பத்தில் வாய்த்தப்புணருதல்*
*அரை சலத்தினில் ஆடி அருந்துதல்*
*விளையும் வேகம் நதிராய மிகுந்து உண்டிடில்*
*களையும் கன்மம் சத காமாலையுற்றதே* **14**

**உரை :**

மகப்பேறு அடைந்த காலத்தில் கணவனைச் சேருதல், ஆற்றில் நீராடி, ஆற்றின் நீரைக் குடித்தல் அதிக அளவு உண்ணுதல், என்ற ஒவ்வாச் செயல் களால் குழந்தைக்குக் காமாலை ஏற்படும்.

குறிப்பு: Pathological Jaundice என்ற காமாலை நோய் குழந்தை பிறந்த 3ஆம்நாள் ஏற்படும் இதற்கு மருத்துவம் தேவை இல்லை.

*உற்றதோர் மலக்கட்டுதல் உண்மையாய்*
*குற்றிலைக்கறி நித்தமும் கூட்டுதல்*
*பெற்ற தாயுடன் பிள்ளை யோடாகிலும்*
*சித்தமாய் கீரிப்பூச்சி சேருமே* **15**

உரை:

கீரிப்பூச்சி உண்டாகக்காரணம் மலக்கட்டு, இலைக் கறியை நாள் தோறும் தாய் உண்ணல், என்பன.

*சேரும் பால் பழம் செய் பழஞ்சோறுமே*
*மோருடன் தயிர் நெய்[1] புளிப்புண்டியால்*
*சாருமே பல நீரினில் நற்தனங்கள்*
*காருங் கோமழையீர், கக்குவான் என்பதே 16*

உரை:

பால், பழம், பழஞ்சோறு மோர், தயிர், நெய் புளித்த உணவு நீர் என்ற காரணங்களால் கக்குவான் நோய் உண்டாகும்.

குறிப்பு: தற்காலத்தில் கக்குவான் நோய்க்கு ஒரு வகையான நச்சு உயிரியே காரணம் என்று அறிந்துள்ளனர். முத்தடுப்பு ஊசிமூலம் இது தடுக்கப்பட்டுள்ளது.

*என்புதன்னை மிதித்திடில்லே வெல்லிட்*
*இன்புகுந்தல் மெய்எட்சையைப் பார்த்திடில்*
*வன்பிலிம மிதித்ததல் பிசாசினம்*
*அன்பு சேரில் அலகை மிஞ்சுமே 17*

---

பாட பேதம்: 1. மொய்

**உரை:**

எலும்பைத் தாய்மிதித்தல், வெல் பறவையைப் பார்த்தல் போன்ற காரணங்களால் மனநோய் தாய்க்கு ஏற்படும்.

*மிஞ்சுகின்ற அந்திவேளையில் பட்சிகள்*
*அஞ்சியோடு சமயத்தைப்பார்த்தல்*
*அஞ்சிராவழி வாடி நடத்தல் ...*
*சஞ்சல முற்றிலும் தோடங்கள் சேருமே* 18

**உரை:**

மாலையில் பறவைகள் கூடு செல்லுவதைத் தாய் காணுதல், இரவில் பயத்துடன் வழிச்செல்லுதல் கவலை கொள்ளுதல் போன்ற காரணங்களால் குழந்தைகளுக்கு தோடங்கள் என்ற மனநோயானது ஏற்படும்.

*சேருகின்ற கறிவகை, சேர்நிலம்*
*ஊறுகின்ற வ்யாதி புள் தோடங்கள்*
*ஆரும் தாய்க்கு அடுத்தது பிள்ளை பிள்ளைக்கே*
*சாரும் நோய்க்குணம் சாற்றுவன் பாரிலே* 19

**உரை:**

**உண்ணும் கறிவகைகள், உண்வு, இருக்கும் வீடு என்பன வற்றால் நோய்கள் ஏற்படும். பட்சி தோடம், பறவை தோடம் என்பன முதலில் தாயையும், பின்னர் குழந்தையையும் பற்றும். இத்தகைய நோய்களின் தன்மைகளை, உலகத்தில் உள்ளமக்களுக்கு எடுத்து விளக்குவேன்.**

# பாலவாகடம்

பார் செனித்தவுடனேயே குழந்தை குரலின்றி
பார்வை ஒளி
வேறதாய் சாறும் மாமிடறுகட்டி மாமலசலங்
களின்றி
வளரத் தன்னுடல் சீரிய தாக அசைவற்றுக்கிலது
செங்கிரந்தி என உன்னியே சோர்விலாத
பரிகாரமானது தொகுத்துரைத்திடுவேன்
நாமமே

**உரை:**

உலகத்தினில் குழந்தை பிறந்தவுடனே குரல் ஒலி எழுப்பாமல், கண்ணில் ஒளி இல்லாமல் காணப் படும். தொண்டை கட்டுதல், சிறுநீர், மலம் கழிக்காமல் காணப்படுதல், உடல் அசைவற்றநிலையில் இருத்தல் என்ற குறிகுணங்கள் இருந்தால் குழந்தைக்கு வந்துள்ளது ''செங்கிரந்தி'' என்ற நோயாகும். இதனை நீக்கும் மருத்துவமுறைகளை. விளக்கமாக எடுத்துக் கூறுகின்றேன்.

அன்னமே, பரு முருக்கிலை, ஆனவள்ளி
கற்பூர இலை
முன்னும் மூணுவகைச்சாறு வேறு முலைப்பாலில்
ஒன்றுபடவே கலந்துண்ணு மாறி, கோரோ
சனைப்பொடி
உகந்துரைத்து உள் அருந்தியே
பின்னுமாறி செம்முள்ளி நீர்எரி, பிறந்த
பிள்ளை உடலில் வார்த்திடவே

உரை:

பெண்ணே! பெரிய முருங்கை இலை, கற்பூரவல்லி இலை, வள்ளி இலை இவற்றின் சாறுகளைத் தாய் பாலில் கலந்துத்தரவும். இத்துடன். கோரோசனையைப் பொடி செய்து. இழைத்து உள்ளுக்குப் புகட்டவும். செம்முள்ளியை நீரில் போட்டுக் காய்ச்சி அதன் நீரால் குழந்தையை நீராட்டவும்.

*வார்த்தையும் குன்றி, மெத்தவே அழுது*
*வெம்பு மாமுலை அறிந்திடா*
*தூர்த்தமாக, வயிறூதி மேனியும் வெதும்பியே*
*உடல் முறுக்கி நின்*
*நாற்றமாய் விழி முழித்திடாமலும்*
*நாசி மெய்யில் கறுப்பாகினால்*
*பூர்த்தியாகிய கருங்கிராந்தியெனவே*
*மருந்துகள் புகட்டிடே* 3

உரை:

பேச்சு இல்லாமல், உணவு உண்ணாமல் இருக்கும்; வயிறு ஊதி, உடல் சூடாக இருத்தல், உடலை முறுக்கல், கண்ணை விழிக்காமல் இருத்தல், உடல், மூக்கு கறுப்புவண்ணமாதல் - கருங்கிரந்தி நோய்க் காணவை ஆகும்.

புகட்டு நெய்யுடன் நல்லெண்ணெய் ஏர்
புகழா ஆமணக் கெண்ணெ பொருந்தவே
வகுத்த சங்கினொடு சாறுமே சமனதாக
விட்டெரி வடித்தபின்
பகுத்த காசிடை அருந்த மேலுமது
பூச நோய் படிந்து போம்
மிகுந்த செம்முள்ளி, கிரந்திநாயகம்
இரண்டும் வேதுகள் பிடித்திடே 4

உரை:

இதற்கு மருத்துவம், நல்லெண்ணெய் ஆமணக் கெண்ணெய், சங்கங்குப்பிச்சாறு சம அளவு கலந்து கொண்டு, அடுப்பி லேற்றிக் காய்ச்சவும். பதத்தில் இறக்கி, வடிகட்டவும், காசெடை குழந்தைக்கு உள்ளுக்குத் தர, குணமாகும். வெளியினும் தடவவும், செம்முள்ளி, கிரந்திநாயகம் ஆகியவற்றால் வேது பிடிக்கவும்.

பிடிக்குள்ளே மிக அடங்கிடாமல் இளநீரெனப்
பெரிய கொங்கையாய்
தடித்தமென் குலையினங் குழந்தை
தலை மேலும் உடல்கடன்னிலும்
வெடித்திடாமலது கட்டியாகி வளர் மேலும் மேலும்
வர வீங்கினால்
அடுத்தமேனியிர் செல்லாப்புக் கட்டியெனவே
அறிந்து, அவுடதம் செய்யே 5

உரை:

செல்வாம்புகட்டி என்ற நோயானது குழந்தைகளுக்குவரும். தலை, உடலில் கட்டியாக காணப்படும். கட்டியானது உடையாமல் வளரும். வீக்கம் மேலும் மேலும் அதிகரிக்கும் இதற்கான மருத்துவத்தைக் கூறுகின்றேன்.

*செய்ய ஊசியை வெதுப்பி நீள்பெரிய கட்டி*
*தன்னிலது ஒத்தியே*
*துய்ய மஞ்சளது சுட்ட பற்பமதை*
*ஆமணக்கெண்ணை தொடக்குழை*
*அய்ய மின்றிய தன்மேலில் இட்டிட வழுத்தி*
*ஆறுமது அன்றியே*
*வெய்ய சூதம் இதனால் முலாமது விதிப்படி*
*செய்து மேலிடே* 6

உரை:

ஊசியை தீயில் காட்டி கட்டியின் மேல் பட ஒத்தவேண்டும். இது சுட்டிகை எனப்படும் அறுவை முறைகளில் ஒன்றாகும். மஞ்சளின் கரியை ஆமணக் கெண்ணையில் குழப்பி மேலிடவும். இல்லாவிடில் இரச கலப்புள்ள களிம்புகளைத் தடவத்நீரும்.

*மேலும் நெஞ்சுள் அடைத்து வீங்கி உயர்*
*மேற் சுவாசமது வாங்கி*
*தூலமேனி, நிறபேதமாகி வளர்ந்தொன்றை*
*கட்டியுடல் நொந்துநின்*
*ஆலமா இருமல் கண்டு சிற்றொனிகளாகவே*
*அழுது கம்மினால்*
*பாலும் நேர் மொழியினாய் அக்கிரந்திக்*
*கரப்பானை*
*சிகிச்சை பண்ணிடே* 7

**உரை:**

**கரப்பானின் குறிகுணங்கள்: நெஞ்சு அடைத்தல், வீங்குதல், மூச்சு வாங்குதல், உடல்நிறம் மாறுபடுதல் இருமல், கட்டி, குரல் கம்மல் என்புனவாகும். இது கிரந்திக் கரப்பான் எனப்படும். இதற்குத் தக்கபடி மருத்துவம் செய்யவும்.**

*பண்ணும் பூவரசம்பால் கறுப்பு நொச்சிச்சாறு*
*இரண்டு பலமதாகவே*
*தன்னில் கடழ்போடுமே கருஞ்சிறீ ஓர்பலம்*
*வசம்பு கால்*
*என்னுமாதி கோரோசனை ஒருநிட்கம்*
*ஆமணக் கெண்ணெய் சேர்*
*திண்ண மாகவே வழத்தோர் காசெடை புகட்டி*
*? நாயது தெரிக்குமே* 8

**உரை:**

பூவரசம்பால், கருநொச்சிச்சாறு வகைக்கு 2 பலம் கருஞ்சீரகம் 1 பலம், வசம்பு ¼ பலம் சோரோசனை ஒரு நிட்கம் (1 பலம்) ஆமணக்கெண்ணெய் 1 சேர்.

கடை சரக்குகளைப்பொடி செய்து, சலித்து, ஆமணக் கெண்ணெயுடன் கூட்டி, அடுப்பேற்றிக் காய்ச்சவும். பதத்தில் வடிகட்டி, எடுத்துக் கொண்டு உள்ளுக்குத்தரவும். அளவு: காசெடை

*தெறிக்கும் வீங்குமுடல் எங்குமே திமிர்*
*கடுப்பதாகிய*
*அமுந்தேகிம் மேற்*
*பொறி பறந்தெனவே புண்ணாகியதிலே வெடித்து*
*அதிகப் பொங்கமாய்*
*முறுக்கியே சுரமாதால் நாவது வரண்டு*
*நோயது முதிர்ந்திடில்*
*வெறிக் கருங்குழலின் மாது கரப்பானென*
*சிகிச்சை மேலிடே* 9

**உரை:**

உடலில் வீக்கம், வலி, கடுப்பு உடலில் பொரி பொரியாகச்சிறு கொப்பளங்கள் ஏற்பட்டு புண் உண்டாதல், சுரம், நாவறட்சி என குறிகுணங்கள் கரப்பான் நோயால் உண்டாகும். இதற்கு மருத்துவம் கூறுகின்றேன்.

---

9-ஆம் பாடல் பக்க எண் 248 பாலவாகடத்தில் இடம் பெற்றுள்ளது.

மேவு மாவிலங்கைத்தோல் இலைக்கள்ளி விரித்த
வாதகரப்பான் பட்டை
தாவும் கும்மட்டியின் காயும் மேனி இலை
சாய்ந்தோர் திருகுகள்ளியும்
வரவு,நீலி இலை ஏழுமோர்
வகையுழக்குச்சாறென
வகுத்து நீ
மாவிளக்கெண்ணையில் விட்டெரித்து வடித்தோர்
கா செடை கொடுத்திடே 10

உரை:

மாவிலங்கைப்பட்டை, இலைக்கள்ளி, வாதகரப்பான் பட்டை, கும்மட்டிக்காய், குப்பைமேனி இலை திருகுகள்ளி. அவுரி-இவற்றின் சாறு உழக்கு வீதம் விளக்கெண்ணையில் கலந்து கொள்ளவும். அடுப்பேற்றி காய்ச்சிப்பதத்தில் இறக்கி வடிகட்டவும். பின்னர் குழந்தைகளுக்கு உட்கொள்ளத்தரவும். அளவு: காசெடை.

---

10-ஆம் பாடல் பக்கம் 248 பாலவாகடத்தில் இடம் பெற்றுள்ளது,

கொடுமையான சிரநோவினோடு சொரி
கூறுஉட்டிணமும், வாந்தியும்
கடுமையான சுர, மெய் சிவந்து முதல்
கண்பசந்து தொனிமுந்தியே
தடைகளாக மலபந்தமாகிவிடில் சார்ந்த
பித்தகரப்பானென்றே
விடமும் நேர் அமுதமும் அஞ்சமான்விழி
வெண்நகை தீர[1] மருத்திடே 11

உரை:

தலைவலி, சொறி,வெப்பம், வாந்தி, சுரம், உடல் சிவந்திருத்தல், கண்பச்சைநிறமாதல், குரல் மாறுதல் மலக்கட்டு என்பன பித்த கரப்பானின் குணங்களாகும்.

மருந்துண்டு[2] நீசுருநொச்சியோடு நீதுய்வளர்
கழற்சியிலை மன்னுமே[3]
கிரந்தி நாயகமுடன் தனி சுரசமே உழக்கு
வளர்கின்ற ஊழ்
புரிந்த வெண்தகரி நேர்புழுக்கையது பொடி
இரண்டு பலம் நீதியாய்
விரிந்த[4] ஆமணக்கெண்ணை சேரோடு எரித்தோர்
காசெடை இசைத்திடே 12

---

11-ஆம் இப்பாடல் பக்கம் 249 பா. வா.உள்ளது.
12-ஆம் இப்பாடல் பக்கம் 249 பா.வா.பாடல் 8

பாடபேதம்: 1. திரு 3. மன்னுசீர்
2. மருந்து குன்றி 4. இருந்த

**உரை:**

கருநொச்சி, கழற்சி இலை, கிரந்தி நாயகம் இவற்றை இடித்துக்கொள்ளயும். உழக்குச்சாறு பிழிந்து எடுக்கவும். வடிகட்டி குடிக்கதீரும். வெள்ளைத்தகரி, புனுகு 2பலம் வீதம் எடுத்து, ஆமணக்கெண்ணையில் கலந்துகாய்ச்சி பதத்தில் இறக்கி வடிகட்டி1காசெடை வீதம் குடிக்கவும். பித்தகரப்பான் தீரும்.

*இசையும் நெஞ்சுகள் அடைத்துள்யே*
*இரணமாகிய தலைவலித்திடும்*
*அசையும் வாய்தனில் வெந்துமே திரட்சி*
*ஆகியே கடுகடுத்திடில்*
*விசைய சேத்துமக்கரப்பான் எனச்சிகிச்சை*
*மேவுசெல்வரி பரந்தநீள்*
*வசி பொருந்தும் விழிமலை திரண்ட முலை*
*வனிதையே அவுடதங்களே ¹* 13

**உரை:**

நெஞ்சடைத்தல், இரணம், தலைவலி, வாயில்புண் கடுகடுத்தல் இவை சேத்துமகரப்பானின் குணங்களாகும்.

---

1. *வசை பொருந்தும் விழிகலை திரண்ட முக வனிதையே அவுதடங்கேள்*

*தங்கு மாதி நன்னாரியொடு*
*வேம்பாடம் பட்டை சரியதாக்கியே*
*புங்கம் பூவுடன் நிலக்கடம்பு வகையோடு*
*சாறுகால் சேரதகய்*
*மங்கை கம்பிப்பிசின் கத்தூரி எனு மஞ்சளும்*
*வகையரைப்பலம்*
*பொங்கு ஆமணக்கெண்ணை சேரோடு புகட்டியே*
*எரித்து உண்ணிடே* 14

**உரை:**

இதற்கு மருத்துவம். நன்னாரி, வேம்பாடம்பட்டை சரிஎடை, புங்கப்பூ, நிலக்கடம்பு - சாறு ¼ சேர். கம்பிப்பிசின், கஸ்தூரி மஞ்சள் ½ பலம் சேர்க்கவும். ஆமணக்கெண்ணையில் கலந்து காய்ச்சி, பதத்தில் வடிகட்டி, உட்கொள்ள சேத்துமகரப்பான் தீரும்.

*உள்ளும் மேலும் தளிர் காய்ச்சலாகி*
*உடம்பெங்கும் புண்ணென்றும் அழன்றுவாய்*
*கள்நாறி உடல் தனிலே கழலை*
*கண்டு பூதமென வீங்கியே*
*எள்ளு மாமலர்கள் போது மூக்கு*
*அரித்து நின்றழுது ஓங்கிரால்*
*பள்ளமான செறிய அல்குலாய் கொடிய*
*தோடமான கரப்பான் இதே* 15

---

**பாடல் எண் 14**

பா. வா. பாடல் எண் 10 பக் 249-இல் உள்ளது.

**பாடல் எண் 15**

பா. வா. பாடல் 36 பக் 254-இல் உள்ளது.

**உரை:**

மேலும், உள்ளும் குளிர்காய்ச்சல், உடலில்புண்கள், கள்போன்ற நாற்றம், உடலில் கழலைகள் ஏற்படுதல் வீக்கம், எள்மலர் போன்று மூக்கில் சொறி, அரிப்பு என்பன தோடக் கரப்பானின் குணங்களாகும்.

## திருகுகள்ளி எண்ணெய்

*பானங் கொடிய திருகுகள்ளியொடு*
*மேவும் பூதகரப்பான்பட்டை*
*காணில் வேப்பந்தோல் சங்கங்குப்பி*
*நிலக்கடம்புடன் கறுப்பு நொச்சியும்*
*வானமாம் குறிஞ்சா இலையுடன்*
*வகைக்குச்சாறு, சேர்காலதாய்*
*ஆனதோர் விளக்கெண்ணை சேர்விட்டு*
*அடுப்பில் இட்டெரித்து உள்ளிடே* 16

**உரை:**

திருகுகள்ளி, கரப்பான்பட்டை, வேப்பந் தோல் சங்கங் கும்பி நிலக்கடம்பு, கரு நொச்சி குறிஞ்சி இலை வகைக்கு சாறு ¼ சேர். விளக்கெண்ணைய் சேர் கூட்டி, அடுப்பேற்றிக் காய்ச்சி, பதத்தில் எடுத்து வடிகட்டவும். உள்ளுக்குத்தரவும்.

---

பாடல் எண். 16

பாலவாகடம் பக்க எண். 255 பாடல் எண். 37 இல் உள்ளது.

இடை சிறுத்த வன்முலை பெருத்த மொழி
இன்தமான அதரத்தினாய்
துடை இடைக்குள் வெகு இரணம்ரகியதில்
சூழ் சலங்களும் மிகுந்துநோய்
புடையு நீள் தசை கரைந்து நாட்பட இருந்து
பூதவுடல் லாடியே
வடிவு சொரிக் கரப்பானிது அறிந்து
தான் தைலம் ஊட்டிடே 17

**உரை:**

தொடைகளின் இடுக்குகளில் ஏற்படும்புண், சீழ்வைத்து இருத்தல், என்பன சொரிக் கரப்பானின் குணங்கள் ஆகும். இதன் காரணமாக உடல் மெலிவு உண்டாகும். இதற்கான தைலம்.

முட்டுவாய் வசைபத்திரி கழுதைலத்தி
மொய்த்த கரு நொச்சிலும்
கூட்டுவாய் அதில் சங்கம் குப்பியோடு
கொடிய சாறு கால் சேரதாய்
நாட்டுவாய் கரு சீரியோர் பலம்
நலின்ற ஆமணக்கெண்ணையும்
வாட்டமாய் அரைச்சேர் விட்டெறி
வடித்தருந்திட மாறுமே 18

---

17, 18, மூலபாடபேதமாக உள்ளன. இப்பாடல் பாலவாகடத்தில் இல்லை.

உரை:

விதிப்பத்திரி, கருநொச்சி, சங்கங்குப்பி சாறு $\frac{1}{4}$ சேர் கருஞ்சீரகம், ஒருபலம். ஆமணக்கெண்ணெய் $\frac{1}{2}$ சேர். அடுப்பேற்றிக் காய்ச்சி பதத்தில் இறக்கி வடிகட்டி, உள்ளுக்குக் குடிக்கத் தீரும்.

*மாறு மாறென வடித்த வாயென*
*உடற்குள்ளே தடிப்பாகியே*
*ஏறுமே சிவந்தோடி கனத்து*
*எங்குமே வடித்துள்ளுமே*
*நீறுபோல் அனல் குளிர்ச்சியாகி உழல*
*நாஉலர்ந்து நெஞ்சு நொந்திடில்1*
*ஆறிடா பொரி கரப்பான் என*
*அறிந்து பண்டித அமர்ந்திடே2* 19

உரை:

பொரி கரப்பானின் குறி குணங்களாவன: உடலில் தடிப்புண்டாகி, மாறுபட்டிருத்தல், வாயில் நீர்வடிதல், நாக்கு உலர்ந்து போதல், தேங்காய்நீர் போல வெடிப்பில் வடிதல், நெஞ்சுவலி என்பன பொரி கரப்பானின் குணங்களாகும்.

---

19 ஆம் இப்பாடல் பக்கம் 252 பா. வா. பாடல் 23

பாடபேதம்: 1. நெறி தாழ்ந்திடில்
2. தொகுத்திடே

*அமர்ந்து[1] புங்கொடு கிரந்திநாயகம்*
*அறிந்த[2] சங்கினொடு குப்பியும்*
*அமர்ந்து சின்னியொடு செங்கதாரி*
*கொத்தானுமே செருப்படியுடன்*
*அமர்த்து[4] தூதுளை கழற்சியொடு*
*பெருவாயன்சாணி[5]*
*அரைக்கால் நிறை*
*அமர்த்து[6] முத்தெண்ணெய் முக்கால் நிறைக்குள்*
*வடித்தாதிகா உள்ளிடே* 20

**உரை:**

புங்கு, கிரந்தி நாயகம், சங்கங்குப்பி, சின்னி செங்கதாரி, முடக்கொத்தான், சிறு செருப்படி, தூது வளை, கழற்சி - $\frac{1}{8}$ பங்கு; ஆமணக் கெண்ணெய் $\frac{3}{4}$ பங்கு; சாணப்பால் கூட்டிக் காய்ச்சி, வடித்து. எடுத்துக் கொள்ளவும். இதனை பொரி கரப்பானுக்கு பூசத்தீரும்.

*கால் கரங்களொடு சந்து வலிக்கு ஆளாகியே*
*கடி விடங்கள் போல்*
*மேல் தடித்ததில் ஊனீர் பரிந்தும் கன்[7]*
*மெய்யொடுங்கி திரணங்களாய்*

---

20-ஆம் இப்படால் பக்கம் 252 பா. வா. பாடல் 24
21-ஆம் இப்பாடல் பச்கம் 255 பா. வா. உள்ளது.

**பாடபேதம்:**

1. தொகுத்து
2. சூழும்
3. செகுத்த
4. பகுத்த
5. ஆவினது சாணப்பால்
6. வகுத்த
7. மகள்

*மூல நாவினுடன்[1] தொண்டையோடு*
*விரணங்களாதி*
*முதிர் வெப்பமாம்*
*வாலையான கரப்பான் என்ற அவுடங்களும்[2]*
*சேர்த்து[3] வைத்திடே* 21

**உரை:**

கை, கால்களில்வலி, மூட்டுகளில்வலி, நஞ்சுண்டது போன்று உடலில் தடிப்புகள் தோன்றுதல், புண்களில் ஊன் நீர் வழிதல், நாக்கு, தொண்டை, ஆசனவாய் என்ற உறுப்புகளில் புண்கள், சுரம் என்பன வாலைக் கரப்பானின் குறி குணங்களாகும். இதற்கான மருத்துவம்.

*செறிய நீர்முள்ளிக் கிரந்தி நாயகம் சிறந்த*
*தூதுவளை இண்டையும்*
*மறைவில் குக்குடத்தவரை கற்பூரவள்ளி*
*இலையோடு*
*மகிழ்ந்து தான்*

---

21-ஆம் இப்பாடல் பக்கம் 55 பா. வா. உள்ளது

**பாடபேதம்**

1. நாளினுள்.
2. இனி தென்ற அவிழ்தங்களும்
3. சிறிது.

*அறிவில்லாதொரு கழுதை விட்டையின்[1]*
*சாறுசேர்*
*இலை உழக்கதாய்*
*முறிலில் ஆமணக்கெண்ணையைய் சேரோடு*
*முகர்ந்து[2]*
*காய்ச்சி உள்ளிடே* 22

**உரை:**

நீர்முள்ளி, கிரந்தி நாயகம், தூதுவளை இண்டஞ் செடி, கோழி அவரை, கற்பூரவல்லி இலை இவற்றின் சாற்றுடன், ஆமணக்கு நெய் உழக்கு. கழுதை லத்தியுடன் சேர்த்துக்காய்ச்சி பதத்தில் இறக்கவும். வடிகட்டிக் கொண்டு, வெளிப்பூச வாலை கரப்பான் தீரும்.

*காய்ச்சலொடு கடுப்பாகி ஊசி உடல்*
*கண்[3] இமை மெத்தவும் அழன்று[4] போய்*
*மேய்ச்சலான தினவால் மெத்தவும்[5]*
*வியர்க் குருகள் மிகுந்துதான்*
*பாச்சலான முகமும் கறுத்து உடல்*
*பரிந்து தானது சிவந்திடில்*
*சூட்சமாகி வளர் செங்கரப்பான் என*
*தோன்றியே அவிழ்தம்[6] செய்யே* 23

---

பா. வா. பக்கம் 256, பாடல் 40 உள்ளது.

**பாடபேதம்:**

1. லத்தி 2. மூறையில் 3. கன்றி
4. உழன்று 5. தோன்றியே 6. அவுடதம்.

உரை:

சுரம், உடலில் வலி, உடலில் வீக்கம், உடல், கண் இமைகள் என்பன சோர்ந்து போதல், உடலில் அரிப்பு, வியர்க்குரு தோன்றுதல், முகம் கறுத்தல் உடல் சிவப்புநிறமாதல் இவை செங்கரப்பானின் குறி குணங்களாகும். இதற்கு மருத்துவம்.

*செய்ய பூவரசு செங்கதாரி வேம்பாடம்*
*பட்டையொடு சடைச்சியும்*
*நய்யவே சுரசமே ஆழாக்கு இவையில்*
*நாட்டுக்கம்பிப்பிசின் கூட்டியே*
*வெய்யதான் கருஞ்சீரி மூன்று நிட்கமே*
*ஆமணக்கெண்ணைய் சேர்*
*பையவே வடித்துக் கொள் செங்கரப்பானுமே*
*பறந்தோடுமே... — ... ...* 2

உரை:

பூவரசு, செங்கதாரி, வேப்பாடம்பட்டை, சுடைச்சி இவைகளை அரைத்துச்சாறு ஆழாக்கு அளவு, கம்பிப்பிசின், கருஞ்சீரகம் - 3 நிட்கம்! ஆமணக்கெண்ணைய் சேர். இவைகளைக்காய்ச்சி, பதத்தில் வடித்துப் பயன்படுத்தவும். வெளியில் தடவ, செங்கரப்பான் தீரும்.

---

பக்கம் 254, பால வாகடத்தில் பாடல் 33. ஒரு வரி குறைவாக பாடல் 24ல் உள்ளது.

ஓடு[1] மண்டைதனிலே புண்ணாகி
உயர்காதில் சீழ் விழுந்தாறியே
நாடியே தலை வலித்து மூக்கினில்
நயந்து நீர் பரிந்திடும்
ஊடு மெய்யதனில்[2] வெப்புமாகி
வளர்தொண்டையில்[3] தினவுமாகினால்
கூடுமண்டைக் கரப்பான் என சிகிச்சை[4]
கொடியதாக[5] இனிக் கூறுவேன் 25

**உரை:**

மண்டையில் புண், காதில் சீழ், தலைவலி உடலில் சூடு, பீனிசம், தொண்டையில் அரிப்பு இவை மண்டைக்கரப்பானின் குறி குணங்களாகும். இதற்கான மருத்துவத்தைக் கூறுகிறேன்.

கூறும் வேளை கருநொச்சி பூவரசு
கொடிய வேம்புட நுணாவுமே
தேறிய சுரசமே ஆழாக்கு இவை
திரண்ட முத்தெண்ணை ஒரு சேரிலே
ஊறவிட்டெரி அருந்து காசெடை
உகந்து காதினில் ஊற்றினால்
நாறு மண்டைக்கரப்பான் அருத்திடில்
நியாயம் அல்லவென எண்ணுமே 26

---

பாடல் 25 பா. வா. பாடல் 21 பக் 252-இல்உள்ளது.
பாடல் 26 253-இல் பா. வா. பாடல் 22 பக் உள்ளது.

**பாட பேதம்:** 1. ஓடி 4. பரிகார
2. வாடிமெய்யாகவும் 5 மேல்
3. குரல் வளையில்

உரை:

வேளை, கருநொச்சி, பூவரசு, வேம்பு நுணா இவற்றை இடித்துச்சாறு எடுக்கவும். 1 சேர் விளக்கெண்ணையுடன் சேர்த்து அடுப்பிலேற்றி, காய்ச்சி பதத்தில் இறக்கி வடிகட்டவும். உள்ளுக்கு காசெடை வீதம் குடித்தால் மண்டைக் கரப்பான் தீரும். காதிலும் ஊற்றலாம்.

*எண்ணுகின்றதொரு, கீலிலே வலிகள் அனேகம்*
*ஆக்கியது கட்டியே*
*வண்ணமெய் நரம்பெங்குமே இசிவு குத்தலாகி*
*மல பந்தமாய்*
*தன்னியே[1] தினவுமாய் துண்டி[2] உட்லில் நாடி*
*வீக்கமும் மிகுந்திடில்*
*கன்னியோடு[3] கரப்பான் இது என்று முறை கண்டு*
*கொள்ளடி கருத்திலே* 27

உரை:

மூட்டுப்பொருத்துகளில்வலி, நரம்புகளில் வலியுடன் இசிவு, குத்தல், மலக்கட்டு, அரிப்பு, வீக்கம் அதிகமானல் இவை ஒரு கரப்பானின் குணங்கள் என்று அறியவும்.

---

27-ஆம் இப்பாடல் பக்கம் 253, பா.வா. பாடல் 28 ஆக உள்ளது.

பாடபேதம்: 1. கண்ணியே 2. தடித்து
3. கண்ணி

*கருததில் எண்ணுகிற பேர்[1] மருந்தில் இலை[2]*
**காட்டில் வாழ்குவன் வன்மப்பட்டையும்*
*திருத்தமான எலி ஆமணக்கினோடு*
*சேர்ந்த வேம்பினுட பட்டையும்*
*பெருத்த கோசலமும் விட்டெரித்து உடலில்-*
*பேணி வேது பிடித்திடில்*
*வருத்தியோடு கரப்பான் இருந்திடவழக்கு*
*இல்லையடி[3] மங்கையே* 28

**உரை:**

பெருமருந்து இலை, எலி ஆமணக்கு வேப்பமரப் பட்டை, கோசலம் சேர்த்து அடுப்பிலேற்றிக் காய்ச்சி இறக்கி வடிகட்டி, வேது பிடிக்கவும். ஓடு கரப்பானால் உண்டான குத்தல், வலி, என்பன தீரும்.

*மங்கை கீல்வலிகள்[4] கள்ளிப்பூவென*
*மகிழ்ந்து வாரி இடுமெய்யில்*
*பொங்கு நீர் பணிகள் போல் வீழ்ந்து*
*புகழ்[5] வெப்பாகி மலம் சிக்கியே*
*துங்கமான சிரநோவுமாகி வளர்*
*தூய வன்மையது[6] துவேடமாம்*
*தங்கு சட்டைக் கரப்பான் என சிகிச்சைதான்*
*உனக்கு[7] விரித்தோதுவாம்* 29

---

பாடல் 28 பக் 253 பா.வா. பாடல் 28 ஆக உள்ளது.
பாடல் 29 பக் 252 பா.வா. பாடல் 25 ஆக உள்ளது.

1. பெரு 2. திலை 3. நினை 4. கீலில் வலி
5. உடலம் 6. வன்மையது 7. இதற்கு

*2-வது வரிக்குப் பொருள் தெரியவில்லை

உரை:

பொருத்துக்களில் வலி, கள்ளியின்மலர் போன்று உடலில் சொரியுடன் நீர் வடிதல், உடலில் வெப்பம் மலக்கட்டு, தலைவலி, உடலில் வன்மையானது குறை தல், இலை, சட்டைக்கரப்பானின் குறி குணங்களாகும். இதற்கான மருத்துவத்தை விரிவாகக் கூறுகின்றேன்.

*ஓது சங்கினுட குப்பி, பூவரசு*
*ஊழலாற்றி நிலக் கடம்புடன்*
*நீதிசேர் குவளை... ... .. வகை*
*நிகழ்த்தும் சாறுகள் ஆழாக்கதாய்*
*சாதி ஆட்டினுட புழுக்கை. ஓர் பலமும் தாங்கு*
*முத்தெண்ணையில் இட்டெரி*
*ஆதிகால முதல் உட்கொள் சட்டை கரப்பான்*
*கண்டு விடும் அரிவையே* 30

உரை:

சங்கங்குப்பி, பூவரசு, ஊழலாற்றி, நிலக்கடம்பு குவளை, (வேம்பு) சாறு ஆழாக்கு உயர்ரக ஆட்டின் புழுக்கை 1 பலம். ஆமணக்கெண்ணெய் 1 பலம் கலந்து கொண்டு, அடுப்பிலேற்றி காய்ச்சி, பதத்தில் இறக்கி, வடிகட்டி உட்கொள்ள சட்டை கரப்பான் தீரும்.

---

பாடல் 30 பக் 253 பாலவாகடத்தில் பாடல் 26 சரசுவதி மகால் சுவடியில் விடுப்பட்ட வரிகளுக்கு ,,வேம்பிவ்வாறு'' என்று பாலவாகடத்தில் உள்ளது.

*அரிவையே உடல்கள் எங்கும் வீங்குமிசை*
*கீலில் வீங்குமதில் துண்டமாய்*
*வீரிய வீங்கியதிலே வெடித்திடு மிகுந்த*
*வெப்புகளும் ஆகியே*
*திருகியே தலைவலித்து மேலும் வெகு*
*திவைுமாகியே ஓடினால்*
*உரியதாம் வெடிக்கரப்பான் என*
*உகந்து பண்புதம் உரைத்திடே* 31

**உரை:**

உடலில் வீக்கம், பொருத்துகள் வீங்கி இருத்தல், வீக்கத்தில் வெடிப்பு, உடலில் வெப்பம். அரிப்பு, தலை வலி, என்பன வெடி கரப்பானின் குறி குணங்களாகும்

*உணர்ந்து சங்கினோடு குப்பி சின்னிவிளா*
*உகந்த மேனியோடு சடைச்சி வேர்*
*பணைத்திடும் கழற்சி புங்கம் வேர் சிறந்த*
*பகர்ந்ததோர் நுணாவுமே*
*இணைந்த சாறு வகை ஆழாக்குஆமணக்*
*கெண்ணெய் சேரினில் எரித்து நீ*
*அனை அருந்திடவும் ஓடுமே வெடிக்*
*கரப்பானெனை அறிந்திடாயே* 32

**உரை:**

சங்கங் குப்பி, சின்னி, சடைச்சி, கழஞ்சி புங்கு, நுணா, வினா, குப்பைமேனி இவற்றின் வேரை எடுத்து, இடித்து எடுத்த சாறு ஆழாக்கு அளவு. ஆமணக் கெண்ணெய் சேர். அடுப்பிலேற்றி எரித்து, பதத்தில் வடிகட்டி, உள்ளுக்குக் குடிக்கவும். இதனால் வெடிக்கரப்பான் நோய் நீங்கும்.

---

32 பக்க 251, பா. வா, பாடல் 20-இல் உள்ளது.

*அறியும் இந்தவிதம் எல்லாம் மிகுந்து கரப்பான்*
*ஆனது அறிந்தபின்*
*நெறிகொள் நூற்முறை மருந்து செய்கவது*
*நீங்கு மெய்யில் ஊறு வாதமே*
*செறியும் வேளையதில் மந்தமாகி பல*
*சேட்டை பண்ணுமது சேர்ந்தபின்*
*பிரிவதாகி வளர் குணங்கள் செய்யும்வகை*
*பேர் உரைப்பனது மாந்தமே* 33

**உரை:**

**இவ்வாறு கரப்பானின் குறிகுணங்களை அறிந்து கொண்ட பின்பு, மருத்துவம் செய்யவேண்டும். உடலில் வாதமானது உடலில் மந்தம், பல விதமான துன்பங்களை உண்டாக்கும். இவைகளின் தன்மை மாந்தம் எனப்படும்.**

*மாந்தம் என்பது கண்டிடில் வயிறுகளுப்பி*
*சேர்ந்த பேதியும் பலபல விதங்களாய் செரிந்து*
*வாந்தியோடு மெய் மயக்கமும் குளிருடன் வெப்பும்*
*காந்தி தாகமும், பிரமையும் கண்*
*மயங்கிடுமே* 34

**உரை:**

**மாந்தம் என்ற நோயின் குறிகுணங்களாவன: வயிறு உப்புதல், கழிச்சல், வாந்தி, மயக்கம் குளிர் சுரம் நீர்வேட்கை, கண் சோர்ந்து, நினைவு தடுமாறல்.**

*மயக்கும் தும்மையும் வேளையும்*
*உத்தாமணி வனத்தில்*
*இயக்கும் பேய் மிரட்டியும் நொச்சியும் சேர*
*கயக்கு சாணக்கி வெதுப்பை அடக்கியும்*
*கணக்காய்*
*முயக்கு சாறுடன் ஆமையின் பற்பமும் முட்டே*
*35*

**உரை:**

தும்பை, வேளை, உத்தாமணி, பேய்மிரட்டி, நொச்சி, சாணாக்கீரை, வெதுப்படக்கி, இவற்றை இடித்த சாறுடன், ஆமையோடு பற்பமும் சேர்த்து குழந்தைக்கு உள்ளுக்குத்தரவும்.

*முட்டு[1] சந்துகள், தலைவலி வேர்வை, கொட்டாவி*
*சாட்டியதோடு தலைக்கனம் குலைவலி சலம்போல்*
*ஆட்ட இக்குளிர் சுரம் அதிக மெய்யூதல் ... ...*
*காட்டினால் தலைமாந்தம் என்றறி கரும்பே[2] 36*

**உரை:**

முட்டுகளின் பொருத்துகளில்வலி தலைவலி, வியர்வை, கொட்டாவி, விலாவில் வலி, உடல் அசதி, குளிர்சுரம், உடல் வீக்கம் என்பன தலை மாந்தத்தின் குறி குணங்களாகும்.

---

பாடல் 36 பக் 110 பா.வா. பாடல் 86 ஆக உள்ளது.

பாடபேதம்: 1. கூட்டு 2. மாதே

*அறியுமேனி உத்தாமணி அகத்தி ஈர்வேளை*
*தெறிகொள் ஐந்தையும் கொண்டாமை ஈறும்*
*முறியும் நல்வசம்பின் கரி கலந்துள்ளில் மூட்டி*[1]
*வெறிக்கொள் மெய்யினில் தடவிட மாந்தம்*
*ஏகிடுமே* 37

**உரை:**

குப்பைமேனி, உத்தாமணி, அகத்தி, நல்வேளை, நாய் வேளை இவற்றை இடித்த சாறு சம அளவு: வசம்பு சுட்டகரி, ஆமையோடு பற்பம் என்பனவற்றை குன்றியளவு (130 மி.கி) எடுத்துச் சேர்த்து உள்ளுக்குத்தரவும். மேலுக்கு பூசவும்

*ஏகும் வாந்தியும், பிதற்றலும் வயிறுவலி இடைகீழ்*
*ஆக சீதளம் குளிர்ச்சியும் மாந்துதல் அலரிக்கணை*
*காகம் போல் உள்ளில் சொருகுதல்*
*மலங்சிக்கிக்கழிந்தல்*
*வேகமாகவே சொருகுதலின் இது விடமாந்தம்* 38

**உரை:**

வாந்தி, வாய் பிதற்றல், வயுற்றில் வலி, இடுப்புக் கீழே குளிர்ச்சி, கண் சொருகல், மலக்கட்டுடன் கழிச்சல் என்பன விட மாந்தத்தின் குறி குணங்களாகும்

---

பாடல் 37 பா.வா. பக் 111 பாடல் 90 ஆக உள்ளது.
பாடல் 38 பா வா. பக் 97 பாடல் 32 ஆக உள்ளது.

**பாடபேதம்:** 1. நீறும் 2. நோய்

*விடத்தின் நேர் விழியாய் சுக்கு வசம்பு வெள்ளுள்ளி*
*திடத்தின் இந்துப்புச்சாரணைவேர், திரள்குறட்டை*
*படைத்து வாழ் கடுகுரோகணி பாச்சோத்தி எட்டும்*
*அடைத்தசாறு முளித்து அருந்திட மாந்தம் அறுமே 39*

**உரை:**

சுக்கு, வசம்பு, பூண்டு, இந்துப்பு, சாரணைவேர், மூக்கரட்டை, கடுகு ரோகணி, பாச்சோத்தி, சரி எடையாக எடுத்து சாறு பிழிந்து, வடிகட்டி காய்ச்சவும். சூடாளபின், அருந்த மாந்தம் நீங்கும்.

*அறுதியாக மெய்யாத்திந்தம்[1] வேர்வைகள் மிகுந்து*
*இறுதியாய் தலைவலி முகமினு மினுப்பிரைச்சல்*
*உறுதியாய் கழிந்திடுதல் நீர் இறங்குதல் உதரம்*
*குரையில்லாக் குலைவலிகள் நீர் மாந்தத்தின் குணமே 40*

---

பாடல் 39 பா.வா. பக் 98 பாடல் 33 ஆக உள்ளது.
பாடல் 40 பா.வா. பக் 103 பாடல் 55 ஆக உள்ளது.

**பாடபேதம்:** 1. முழுவதும்

**உரை:**

உடலில் வியர்வை உண்டாதல், தலைவலி, முகம் ஒளியுடன் காணப்படுதல், வயிற்றில் இரைச்சல், கழிச்சல், சிறுநீரில் இரத்தம் காணப்படுதல் என்பன நீர் மாந்தத்தின் குறி குணங்களாகும்.

*குணமது[1] நுணா நொச்சி குப்பையின் மேனி*
*பேய்மிரட்டி*
*அணையும் தும்பையும் வேளை இவ்வாறையும்*
*கசக்கி*
*கணம் வசம்புள்ளி ஓமம் இன்னான்கையும்*
*கரைத்து*
*துணையும்[2] பிள்ளைக்குக் கொடுத்திட[3]*
*மாந்தம் தொடதே 41*

**உரை:**

நுணா, நொச்சி, குப்பைமேணி, பேய்மிரட்டி தும்பை வேளை ஆகிய இலைகளைக் கசக்கி சாறு எடுத்துத் திப்பிலி, வசம்பு, பூண்டு, ஓமம் என்பன வற்றை அரைத்து முன்சொன்ன சாற்றில் தரவும். மாந்தம் தீரும்.

---

பாடல் 41 பா. வா. பக்கம் 105 பாடல் 64 ஆக உள்ளது.

**பாடபேதம்:** 1. குண்நுணா 2. மணங்கொள்
3. ஈய

தொடுமெய்த்தோறும் தளர்ந்து உருவழிந்து
உடல் குளிர்ந்திருக்கும்
உடல்வெளுத்து மெய் மயக்கமும்
அழலும் உண்டாகி
கடுகடுப்புடன் கால்கைகள் ஊதிப்
பால் குடிக்கும்
வடிவு பல குணமாம் வரல்
மாந்தமும் மானே 42

உரை:

உடல் தளர்ந்து, மாறி இருக்கும். இரத்தம் குறைந்து வெண்மையாகவும். மயக்கமும் உண்டாகும். வெப்பம், உடலில் கடுகடுப்பு. கால், கை, வீக்கம் காணும். பால் குடிக்கும் இது வறள் மாந்தக் குறி குணங்களாகும்.

---

42 பாலவாகடம் பக்கம் 119 பாடல் 126 முற்றிலும் மாறுபட்டுள்ளது.

தோலும் திறங்கி உடல் வெளுத்து சுழலும்
மயக்கம் உண்டாகும்
பால் மடுக்கும் மெய் இளைக்கும் பார்க்கும்போது
பல குணமாம்
காலும்கையும் தான் வற்றிக் கடுப்பும்
வலிப்பும் காண்பித்தே
பாலர் தம்மை உருவழிக்கும் வாள்
மாந்தத்தின் குணமிதுவே

*மானேகேள் சடாமாஞ்சில் வேர்*
*கொம்புள்ளி வசம்பு*
*ஆனதொரு உத்தாமணி நிலவிளா*
*மிளகு வித்து*
*வானமாம் கடாயத்தினில்*
*கமடமாம் பற்பம்*
*தானுமே கலந்துள்ளிட*
*தாழ்ந்துபோ மாந்தம்* 43

**உரை:**

சடாமாஞ்சில்வேர், கொம்பு, பூண்டு, வசம்பு உத்தாமணி, நிலவிளா, மிளகு, இவற்றை இடித்துப் பொடி செய்து, ஆமையோட்டு பற்பமுடன் தர, வறள் மாந்தம் நீங்கும்.

*போகுமே வயிறு பாலெனக்*
*கழிந்திடும் பொறுமும்*
*தேகமும் சுர்மாய் குளிர்*
*கண்டிடும் தெவிட்டி*
*சோகமும், தலை, வயிறுவலி*
*வாந்திகள் தோன்றி*
*ஏகமாய் அழச் செரித்திடா*
*மாந்தமென்று எண்ணே* 44

---

43 பா.வா. பக்கம் 106 பாடல் 71 ஆக உள்ளது.
44 பா.வா. பக்கம் 105 பாடல் 65 ஆக உள்ளது.

உரை:

பால் போன்று கழிதல், பொறுமுதல், உடலில் குளிர் சுரம், தலைவலி, வயிற்றுவலி, வாந்தி என்ற குறி குணங்கள் செரியா மாந்தம் ஆகும்.

*எண்ணும் சாணாக்கி சாரணை*
*இந்துப்பு கோட்டம்*
*நண்ணும் பேய்மிரட்டியும் மிளகு*
*நாயிரா இஞ்சி*
*துண்ணுமே நுணாவேர் இவ்*
*ஒன்பதும் சுரசம்*
*பண்ணி ஆமையின் பற்பம் கொடுக்க*
*போம் பறந்தே* 45

உரை:

சாணாக்கீரை, வெள்ளைச்சாரணை, இந்துப்பு, கோட்டம், பேய் மிரட்டி, மிளகு, இஞ்சி நாயுருவி, துணா-இவற்றைச் சம அளவு எடுத்து. இடித்துச்சாறு பிழிந்துக் கொள்ளவும். பின்னர் வடிகட்டி, ஆமையின் பற்பமுடன் கலந்து, உள்ளுக்குத்தர செரியா மாந்தம் தீரும்.

*பறந்தே மெய்யினில் வெப்புடன்*
*தூக்கமும் பலகால்*
*உறைந்த வியர்வை கொட்டாவி*
*உதரத்தில் வலியும்*

*நிறைந்து வாழ்மலம் சிக்கிக்*
*கழியும் நேரிரைச்சல்*
*அறைந்த சீர்கட்டு மாந்தம்*
*என்றே அறையலாமே* 46

**உரை:**

உடலில் வெப்பம், தூக்கம், வியர்வை, கொட்டாவி வயிற்றில் வலி, மலக்கட்டுடன் வெளியாதல், மலம் வெளியாகும் போது இரைச்சலுடன் போதல் என்பன கட்டு மாந்தத்தின் குறி குணங்களாகும்.

*அன்ன சுக்கு சிற்றரத்தை*
*வெற்றிலையுடன் ஓமம்*
*கன முருங்கையின் தோலிவை*
*சுரசமாய் கண்டு*
*இனிய நிம்பஎண்ணை சேரணி*
*விட்டெரித்திட்டால்*
*முனிவ தாம் கட்டு மாந்தங்கள்*
*பறக்கும் மொய்குழலே* 47

**உரை:**

சுக்கு, சிற்றரத்தை, வெற்றிலை, ஓமம், முருங்கைப் பட்டை இவற்றைச் சம அளவு எடுத்துக் கொள்ளவும். இடித்து, சாறு எடுத்து. வடிகட்டவும். வேப் பெண்ணைய் ½ சேர் சேர்க்கவும். அடுப்பேற்றிக் காய்ச்சி, பதத்தில் வடிகட்டி கொடுக்க கட்டுமாந்தம் தீரும்.

---

46 பா.வா. பக்கம் 106 பாடல் 71 ஆக உள்ளது.
47 பா.வா. பக்கம் 106 பாடல் 73 ஆக உள்ளது

மெய்கொள் பால்பாலாய் கழிந்திடும்
முகம் வேறாம்
கைகால்கள் வெதும்பிடும் வாந்தி
பால் காணும்
செய்ய கணங்களும் வளையாய்
தலை எடுத்திராது
உய்ய மாற்றும் பால் மாந்தம்
என்றே அறியுடனே 48

உரை:

பால்பாலாகக் கழிதல், முகம் மாறுபட்டிருத்தல், கைகால்கள் சூடாக இருத்தல்: வாந்திஎடுத்தல், தலை தூக்காமலிருத்தல் என்ற குறி குணங்கள் பால் மாந்தமாகும்.

உடன் உத்தாமணி சுக்குடன் வசம்பு
உன்னி மிளகு
விடமதாம் சடாமாஞ்சிலும் சூட்டி
இன் விளாவும்
திடமதாம் கசாயங்களும் செய்
தக்மடத்தின்
வடி கொள் நீருடன் 1 அருந்தும்
பால்மாந்தம் அகன்றே 49

---

48 பா.வா. பக்கம் 106 பாடல் 73 ஆக உள்ளது.
49 பா.வா. பக்கம் 108 பாடல் 80 ஆக உள்ளது.

பாடபேதம்: 1. பற்பமிட்டு

உரை:

உத்தாமணி, சுக்கு, வசம்பு, பூண்டு, மிளகு சடா மாஞ்சில், விளா என்பன சம அளவு எடுத்துக் கொள்ளவும். நீர் விட்டு குடிநீர் செய்யவும். வடிகட்டி: ஆமையோடு பற்பத்துடன் தர பால் மாந்தம் தீரும்.

*அகண்ட வாந்தியும் கழிச்சலும் சுரங்களுமாகி*
*பகர்ந்த மேனியில் வீக்கங்கள் துண்டித்துப் படிந்து*
*உகர்ந்ததாம் உதிரத்தின் இரைச்சல் உண்டாகி*
*இகழ்ந்தசேய்க்குத்தான் ஊது மாந்தங்கள்*
*என்றிசையே* 50

உரை:

வாந்தி, கழிச்சல், சுரம், உடலில் வீக்கம், வயிற்றில் இரைச்சல் என்ற குறி குணங்கள் கண்டால் ஊது மாந்தம் என்று அறிந்து கொள்ளவும்.

*இசையும் சுக்கு நீர்முள்ளி பூநாகமெடுத்து*
*விசையும் குட்டி விளா சுரைக் கொழுந்து வேளை*
*அசையுமாம் கசாயத்தினில் ஆமையின் பற்பம்*
*நசையுடன் அருந்தாது மாந்தங்கள்*
*நாடாதென்னே* 51

---

50 பாடல் பா. வா. பக்கம் 116ல் பாடல் 115 உள்ளது

51 பாடல் பாலவாகடத்தில் இல்லை.

உரை:

சுக்கு, நீர் முள்ளி, சுத்திசெய்த மண்புழு, குட்டி விளா, சுரைக் கொழுந்து, வேளை என்பன சம அளவு எடுத்துக் கொள்ளவும். குடிநீர் செய்து, வடிகட்டி, ஆமையின் பற்பமுடன் தர மாந்தங்கள் நீங்கும்.

*நாடியே சுரமடித்து மெய்வெளுத்து*
*நா உலர்ந்து*
*நீடுங்கால் குளிர்ந்து அங்கையால்*
*முகத்தையும் நெருடியே*
*வாடு பல குணங்களாய்க் கழிந்து*
*உடல் வடிந்து*
*கூடுமாம் சிரம் வியர்வை கல்*
*மாந்தத்தின் குறியே* 52

உரை:

உடலில் சுரம், வெளுப்பு நிறமாதல், நீரின்றி உலர்ந்துபோதல், கால் நாக்கு குளிர்ந்திருத்தல், உள்ளங்கையால் முகத்தைத்தடவுதல் உடல் மெலிதல் தலையில் வியர்த்தல் என்பன கல்மாந்தத்தின் குறி குணங்களாகும்.

*குறிக்கேள் திப்பிலி வசம்பு உள்ளிக் கூட்டும்*
*பேய்மிரட்டி*
*எரி நிலா வரைக் கடுக்குரோகணியும் நாயிராஞ்சி*
*பறியும் நிம்பெண்ணெய் விட்டெரித்து*
*ஆமையின் பற்பம்*
*அறிவதாயிட பறக்கும் கல்மாந்தங்கள்*
*கயலே* 53

52-பாடல் பா. வா. பக்கம் 124ல பாடல் 152 உள்ளது
53-பாடல் பா. வா. பாடல் 153 உள்ளது.

**உரை:**

திப்பிலி, வசம்பு, பூண்டு, பேய்மிரட்டி நிலாவரை, கடுகு ரோகணி நாயுருவி, இஞ்சி, இச்சரக்குகளை இடித்துப்பொடி செய்து, சலித்து எடுத்துக் கொள்ளவும். வேப்பெண்ணையில் கலந்து, அடுப்பேற்றிக்காய்ச்சி பதத்தில் இறக்கி, வடிகட்டி, ஆமையோடு பற்பத்துடன் கலந்து கொடுக்கவும் கல் மாந்தம் தீரும்.

*அய்ர்ச்சி காலும் கையும் இழுத்திடும்*
*இசிப்புக்களாகும்*
*வயிற்றினில் பலபலவிதமாய்க் கழிந்து*
*மார்வலித்து*
*இயங்கும். பல்கிட்டிக்கடிக்கும், வாந்திகள், சேர்ந்து*
*மயக்குமாம் வலிப்பாகிய மாந்தமும் மாதே* **54**

**உரை:**

சோர்வு, கை கால்களை வெட்டி இழுக்கும், வலிப்பு பேதியாதல், நெஞ்சு வலித்தல், பல் கிட்டிப் போதல், உதட்டைக்கடித்துக் கொள்ளல், வாந்தி என்பனவற்றுடன் மயக்கம் உண்டாதல், வலிப்பு மாந்தத்தின் குறி குணங்களாகும்.

---

54-பாடல் பா. வா. பக்கம் 112 பாடல் 94 உள்ளது.

மாது சுக்கு சிற்றரத்தை வெள்ளுள்ளி
மாவிலங்கை
ஓது வேளையும் முருங்கை முசுருடன் முட்டை
கோதிலா சுரசத்துடன் கோமயமதையிட்டு
மீதியாய் இருந்து உள்ளியின் தைலம் மேல்பூசே
!5

உரை:

சுக்கு, சிற்றரத்தை, பூண்டு, மாலிவங்கப்பட்டை, நல் வேளை, முருங்கை இவற்றை இடித்துச் சாறு பிழிய வேண்டும். இத்துடன் முசுறு முட்டை, கோமயம் இரண்டையும் சேர்க்கவும். வடிகட்டி உட்கொள்ளவும். பூண்டுத்தைலத்தை மேலே பூசிக் கொள்ளவும். வலிப்பு மாந்தம் நீங்கும்.

பூசலாய் சுரமடித்து உடல் கரைந்துபோம் கூடாய்
வாசமாய் கழிந்து உதடுகள் உலர்ந்து வாய்
நுரையாய்
நீச வாந்தியும் கண் குழியுடன் நெஞ்சு புண்ணாய்
ஊசலாகும் போர் மாந்தமென்றே அறிமுன்பே
56

---

55-இப்பாடல் பாலவாகடத்தில் இடம் பெறவில்லை. மகால் சுவடியில் உள்ளது.

56-பாடல் பா. வா. பக்கம் 94 பாடல் 36 உள்ளது.

**உரை:**

சுரம் காய்தல், உடல் மெலிதல், கழிச்சல், உதடுகள் சுரத்தால் உலர்ந்துபோய், வாயில் நுரை வருதல். வாந்தி, கண்ணில் குழிவிழுதல், நெஞ்சு புண்ணாகி வலித்தல் என்பன போர் மாந்தத்தின் குறி குணங்களாகும்.

*முன் உத்தாமணி சுக்கு திப்பிலி முதிர்தும்பை*
*மிளகு இந்துப்பு சாணாக்கி பேய் மிரட்டி நனி*
*கொள் சீரகம் பொடுதலை கோமதம் நாட்டி தோன்றி*
*கொள் மோருடன் மருந்து போர் மாந்தமும் தொலைந்தே* 57

**உரை:**

உத்தாமணி, சுக்கு, திப்பிலி, முதிர்ந்த தும்பை மிளகு, இந்துப்பு, சாணாக்கீரை, பேய் மிரட்டி, சீரகம் பொடுதலை, இவற்றை சம எடை எடுத்து இடித்துச் சாறு எடுக்கவும். வடிகட்டிய சாறுடன் கோரோசனையைக் கலந்து அருந்த, போர் மாந்தம் தீரும்.

---

57-பாடல் பா. வா. பக்கம் 101 பாடல் 46 உள்ளது.

*தொகைவில் தாகமும் மயக்கமும் அறிவும்*
*தொந்தித்தல்*
*தலைபுரட்டல் கால் குளிர்ந்திடல் நாலில்*
*முள்படிதல்*
*மலைவிலா, வெறும் வாந்தியும் வெப்பமும்*
*வலிப்பும்*
*சிலைநுதற் கண்ணே மாந்தத்தின் சன்னியாய்*
*செப்பே 58*

**உரை:**

நீர்வேட்கை, மயக்கம், அறிவுமயங்குதல், தலைசுற்றல், காலில் குளிர்ச்சி, நாக்கில் முன்படிதல் வாந்தி, சுரம், வலிப்பு உண்டாதல் என்பன மாந்த சன்னியின் குறி குணங்களாகும்.

*செப்பு வெற்றிலை முசுருடன் முட்டை சிற்றாத்தை*
*வெப்பு சுக்குடன் முருங்கை மாவிலங்கையும் ரசம்*
*ஒப்பினிடு கத்தூரியும் உள்ளிட்டு மேவில்*
*அப்புறவாய் உள்ளி அண்டத்தின் தைலமும்*
*அணங்கே 59*

**உரை:**

சம எடை சிற்றரத்தை, சுக்கு, முருங்கை, மாவிலங்கப்பட்டை, இடித்துக்கொண்ட பொடியுடன் வெற்றிலைச்சாறு முசுறு முட்டையின் சாறு, கத்தூரி என்பன சேர்த்து அருந்த மாந்த சன்னி தீரும். பூண்டுத்தைலம், அண்டத் தைலம் என்பனவற்றைப் பூசலாம்.

---

58-பாடல் பா. வா. பக்கம் 115 பாடல் 104 உள்ளது
59-பாட்ல் பா. வா. பக்கம் 115, பாடல் 106 உள்ளது

*அணங்கிடு புகைகால் முக[1] மாரணன் மூக்கு*
*வணங்கு பின்பிடர் நரம்பிவை ஒட்டிலும்[2]*
*வலிக்கும்*
*இணங்கு வாய் நுரைமயக்கமும் பிதற்றல் கிழித்தல்*
*தணங்கொள் பூதப்பேய் மாந்தம் என்று உகந்து*
*கண்டறியே 60*

**உரை:**

இடுப்பு, கை கால் முகம், மூக்கு பிடரி, நரம்பு என்ற உறுப்புகளில் வலி தோன்றுதல், வாயில் நுரை, மயக்கம், வாய் பிதற்றல், ஆடைகளைக் கிழித்தல் என்ற குறி குணங்கள் பூதப்பேய் மாந்தத்திற்காகும்

*கண்டங் காட்டத்திப்பூ தும்பை விட்ணக்கிரந்தி*
*விண்டமேனி உத்தாமணி துளசி பேய்மிரட்டி*
*கொண்ட சுக்குடன் சுரசமாய் கோமயத்தைக்கூட்டி*
*உண்டபோது பேய் மாந்தங்கள் பிரிந்திடும்*
*உதிர்ந்தே 61*

**உரை:**

காட்டத்திப் பூ, தும்பை, விட்ணுக்கிரந்தி, உத்தாமணி குப்பைமேனி, துளசி, பேய்மிரட்டி, சுக்கு என்பன வற்றை சம அளவு எடுத்து அரைத்துக் கொள்ளவும். சாறுபிழிந்து கொள்ளவும். கோமயத்தை கூட்டி, உண்ணபேய் மாந்தம் நீங்கும்.

---

60-பாடல் பா. வா. பக்கம் 123, பாடல் 139 உள்ளது
61-பாடல் பா. வா. பக்கம் 123, பாடல் 40 உள்ளது
**பாடபேதம்:** 1. துடையானன் 2. எட்டிலும்

*முதிர் கொட்டாவியும் தாகமும் உடம் பெங்கும் வலியும்*
*அதிர் சுரத்தொடு முகத்தையும் பார்த்தமும் வெறுக்கும்*
*முதிர்விலா பெருத்த அதிகமாய் விரைத்து முன் விழுதல்*
*கதிர்கொள் வந்துலை மாந்தமென்று உகந்தருள் கண்ணே* 62

**உரை:**

நீண்ட கொட்டாவி, நீர்வேட்கை, உடலில் வலி, சுரம் தாயின் முகத்தை வெறுத்தல், வலிப்பு, என்பன துலை மாந்தக் குறி குணங்களாகும்.

*கண்ணு சுக்கு சிற்றரத்தையும் விட்ணு கிரந்தி*
*வெள்ளைச் சாணக்கிராம்புடன்[1] குட்டி விளாவும்*
*நண்ணிய சுரசத்துடன் கத்தூரி நாட்டி*
*உண்ணவே துலை மாந்தங்கள் பறந்திடும் உகத்தே[2]* **63**

**உரை:**

சுக்கு, சிற்றரத்தை, விட்ணு கிரந்தி, வெள்ளைச் சாணாக்கீரை, கிராம்பு, குட்டிவிளா வகைக்குச் சம அளவு எடுத்துக் கொள்ளவும். அரைத்து வடிகட்டிய சாறுடன் கத்தூரியைத் தூவிக் குடிக்க, துலை மாந்த நோய் தீரும்.

---

62-இப்பாட்டல் பாலவாகடத்தில் இல்லை.
63-பாடல் பா. வா. பக்கம் 110, பாடல் 85 உள்ளது.
**பாடபேதம்:**
1. சானகி லவங்கப்பூ 2. ஒழித்திடும் உகந்தே

*உகந்தமெய் முகமினுமினுப்பா உயர் சுரமும்*
*பகர்ந்த பால் அருந்தாதது நீர் சிறுத்திடும் பார்க்கு*
*வகிர்த்திடா மலம் சிக்கியுமயக்கமும் வலியும்*
*சுகந்தமாய் அடி குளிர்ந்திடில் மாந்தமாம் சுரமே* 4

**உரை :**

உடலிலும், முகத்திலும் பள பளப்பாய் இருப்பதால் மிக அதிகமாக சுரம் காய்தல், பால் குடிக்காமல் இருத்தல், மலக்கட்டு, நீர்க்கட்டு, மயக்கம் வலி அடிகுளிர்தல் என்பன மாந்தசுரக் குறிகுணங்களாகும்.

*சுரமே பிழி தும்பை உத்தாமணி துளசி*
*தரையின் மேல் வெதுப்படக்கி நாயிராஞ்சி*1
*தரையில் பேயையு மிரட்டியும் விட்ணகிரந்தி*
*தரையின் ஆமையின் பற்பமும் சேர்ந்துண்ணத்*
*தெளிந்தே* 65

**உரை:**

தும்பை, உத்தாமணி, துளசி, வெதுப்படக்கி, நாயுருவி இஞ்சி, பேய்மிரட்டி, விட்ணு கிரந்தி இவற்றை சம அளவு எடுத்து இடித்துச் சாறு எடுக்கவும் வடிகட்டிய சாறுடன், ஆமை யோட்டு பற்பத்தை கலந்து கொண்டு உள்ளுக்குத்தர மாந்தசுரம் நீங்கும்.

---

64-பாடல் பா. வா. பக்கம் 101, பாடல் 48 உள்ளது.
65-பாடல் பா வா. பக்கம் 118, பாடல் 120 உள்ளது.

**பாடபேதம்:** 1. நாயுருவி, சாணாக்கி

*தொரிந்த தாகமும் சுரமுடன் பிதற்றலும் செருமுக்*
*களங்கமாய் அரைத்[1] துப்பிக் கழிந்துடனே*
*வளர்ந்த வாந்தியும் முலைநத்தாமலும் மயக்கம்*
*தளர்ந்தால் உப்பு மாந்தமென்றே அறிதானே* 66

**உரை:**

**நீர்வேட்கை, சுரம், வாய்பிதற்றல், வயிறு உப்புதல், கழிதல், வாந்தி, பால் குடிக்காமலிருத்தல் மயக்கம்; உடல் தளர்ச்சி என்பன உப்பு மாந்தத்தின் குறி குணங்கள் ஆகும்.**

*மேனி உப்பிரண்டுமே, கசக்கி கோடக சாற்றில்*
*பானமாகவே அருந்தினால் தீர்ந்திடும், பலனில்*
*காணிலார் முட்கா வேளை, சுக்கு, ஓமம்*
*அமுங்கறுக்கி*
*ஆனதான நாயிராஞ்சியும்[2] ஆமை நீறு அருந்தே*
67

---

**66-பாடல் பா.வா. பக்கம் 118, பாடல் 120 உள்ளது.**
**67-பாடல் பா.வா. பக்கம் 118, பாடல் 121 உள்ளது.**

**பாடபேதம்: 1. இரைத்து 2. நாயுருவி**

**உரை:**

குப்பைமேனி, உப்பு இரண்டையும் கசக்கி எடுத்து கோடகசாலையின் சாறுடன் கலந்து தரவும். உப்பு மாந்தம் தீரும். இவ்வாறு செய்ய தீராத நிலையில் முட்காவேளை சாறு சுக்கு, ஓமம், இவற்றைச் சம அளவு எடுத்துக் கொள்ளவும். சட்டியில் போட்டு, அடுப்பேற்றி, நன்று கருக வறுக்கவும். நாயுருவி, இஞ்சிச்சாறுடன் ஆமையோடு பற்பமும், முன் சொன்ன சாறுடன் கலந்து கொண்டு தர, உப்பு மாந்தம் நீங்கும்.

*அருந்து மெய் இளைப்பிருமல் அடிக்கடி சுரமும்*
*திருந்து மூக்கு நீர் வடிதலும், வயிற்றுப்பு*
*சிரநோய்*
*பிரிந்திரைச்சீறும் பலவிதமான வயிறு போக்கும்*
*வரைந்த கண்ணில் மயக்கமும் மாந்தமாம்*
*கணமே* 68

**உரை:**

உடல் இளைத்தல், இருமல், சுரம் அடிக்கடி வருதல் மூக்கில், நீர் வடிதல், வயிறு உப்புதல், தலை வலி, இரைச்சல், பலவிதமாக உண்ட உணவு வெளியாகுதல், மயக்கம் என்பன மாந்த கணத்தின் குறி குணங்களாகும்.

---

68-பாடல் பா.வா. பக்கம் 118 பாடல் 121 உள்ளது.

*கண வசம்புள்ளி சாரணை கடிய நாய்வேளை*
*குண உத்தாமணி நிலவிளா ஏற்றெண்ணை*
*சமனாய்*
*தணியக் காய்ச்சிப் பெண்தனைத்தில் பால்*
*சேர்த்துண்ணத்தான்*
*ஆணி கொள் மாந்தத்தின் கணங்களாகும்*
*பசுமாறணங்கே 69*

**உரை:**

வசம்பு, பூண்டு, சாரணைவேர், நாய் வேளை, உத்தாமணி, நிலவிளா இவற்றுடன் விளக்கெண்ணை சேர்த்துக்கொள்ளவும். அடுப்பிலேற்றிக் காய்ச்சி. பதத்தில் எடுத்து வடிக்கவும். இத்தைலத்துடன், தாய்ப்பால்விட்டுத்தர, மாந்த கணம் நீங்கும்.

*ஆரணத்தில் உரைத்தனன் வியாதியுமதற்கு*
*பூரணங்களாய் மருந்துகளால் சிகிச்சையும்*
*புகழாய்*
*காரண குரு என்பவன் பண்டிதன் கண்ணே*
*சீரணங்கு நல்மடநல்லாய் செகத்தினில் ஓது 70*

**உரை:**

படைப்புக்கடவுளான பிரமன் நோய்களையும்' அதற்கான மருந்து களையும் கூறினான். நோய்கள் தீரக்காரணம் மருத்துவன். இதை உலகில் உள்ள மக்களுக்குக் கூறுவாயாக.

ஓதியதோர் பிள்ளைக்குக் கணந்தான் கண்டால்
ஒத்த மெய்யினில் கதகதப்பாய்
சுரங்கள் காணும்
பேதியது கேட்டபால் கழுநீர் போலாம்
பெருகும் வயிறு கைகால் குச்சி போலாம்
சீதமுடன் இரத்தங்கள், தாகம் காணும்
சிதைந்தங்கை, குளிர்ந்து மூக்கு நாக்கும்
நீதியுடன் கண் குளிர்ந்து மூக்கும் நாக்கும்
நேராக வெந்துடலம் வெளுத்துப் போமே
71

**உரை:**

**கணத்தின் குறி குணங்கள்:** உடலில் கதகதப்பான வெப்பம், கழுநீர் போலக் கழிதல், இரத்த சீதக் கழிச்சல், கைகால்கள் மெலிதல், நீர்வேட்கை, உள்ளங்கை குளிர்தல் மூக்கு, நாக்கு குளிர்ந்து போதல், உடல் வெள்ளை நிறமுடன் இருத்தல்.

வெளுத்தொரு பருத்திவித்து
பொடுதலையின் காயும்
வேறான கிராம்பு கச்சோலம் சீரி
கினித்த இலவம் பிசினும் இலவங்கத்தோல்
காசு கட்டியுடன் சாதிக்காயும்
வளர்த்த இள அரையாக வறுத்துக் கொண்டு
வாகான நவநீதம் சேறு உள்ளிட்டு
இளைத்த கணம் பிள்ளைக்கு கொடுத்தீரானால்
இருந்தகணம் பறந்துவிடும், இனிய
பெண்ணே 72

---

71 இப்பாடல் சரபேந்திர வைத்திய முறை கர்ப்பரோகசிகிச்சை பக்கம் 26 ல்இ உள்ளது.

**உரை:**

வெள்ளையான பருத்திவிதை, பொடுதலைக்காய், கிராம்பு, கச்சோலம், சீரகம், இலவம் பிசின் கிராம்புத் தோல், காசுகட்டி, சாதிக்காய் இவற்றைச் சம அளவு எடுத்துக் கொள்ளவும். சட்டியிலிட்டு அடுப்பேற்றி இளவறுவலாக வறுத்துக் கொள்ளவும். பொடியாக்கவும் வெண்ணை தேனில் கலந்து உண்ண கணம் நீங்கும்.

*இனிதான நீர்க் கணந்தான் கண்டுதானால்*
*இருகைகால் முகமினுப்பாய் மயக்கமுண்டாய்*
*பனிபோலும் நீர் போலும் கழிச்சலாகி*[1]
*பகர் நாக்குப்புண்ணாய் வாய்*
*வரண்டுபோகும்*
*நனிவேர்க்கும் சந்துகளில் வெப்பம் காணும்*
*நல்முக்கில் நீர்வடியும் தாகம் காணும்*
*தனியான தலைவலிக்குள் மிகுந்து நிற்கும்*
*தயவாக அவுடதங்கள் சாற்றக்கேளே* 73

---

73 இப்பாடல் சரபேந்திர வைத்தியம் கர்ப்பிணி பாலரோக சிகிச்சையில் பக்கம் 27-இல் உள்ளது.

**பாடபேதம்:**

1. பனிநீர்போல் அடிக்கடி கழிச்சலாகி

**உரை:**

நீர்க்கணத்தின் குறிகுணங்கள்: இருகை, கால்களில் மினுமினுப்பு ஏற்படுதல், மயக்கம், பனிநீர்போல் கழிதல், நாக்கில் புண்உண்டாதல், வாய்வரண்டு போதல், உடல் குளிர்ந்து வியர்த்தல் பொருத்துகளில் சூடு உண்டாதல், மூக்கில் நீர் வடிதல், நீர்வேட்கை, தலைவலி நீர்க்கணம் தீர மருத்துவம் கூறுகின்றேன்.

*சாற்று முசுமுசுக்கை, கண்டங்கத்திரியிேனாடு*
*சாதகமாய் செவ்வல்லிக் கொடியும் கூட்டி*
*ஏற்று கருஞ்சீரி தண்ணீர் விட்டான் கிழங்கு*
*இனிய மணத்தக்காளி தூதுளைவேர்,*
*போற்றுக் கம்பிப்பிசியின் திருகு கள்ளிவேரும்*
*புகழான பாலுடன் வெள்ளாட்டுப்பாலும்*
*ஊற்றியதோர் விளக்கெண்ணை*
*தன்னில் காய்ச்சி*
*உட்கொள் நீர்க்கணந்தான் ஓடிப்போமே* 74

**உரை:**

முசுமுசுக்கை, கண்டங்கத்தரி, செவ்வல்லிக் கொடி, கருஞ்சீரகம், தண்ணீர்விட்டான் கிழங்கு, மணத்தக்காளி, தூதுவளைவேர், கம்பிப்பிசின், திருகு கள்ளிவேர், பசும்பால், வெள்ளாட்டுப்பால் இவற்றை எடுத்துக்கொள்ளவும். கடைச்சரக்குகள் சம எடை வகைக்கு எடுக்கவும். விளக்கெண்ணெய் சமஎடை, கலந்து கொண்டு, அடுப்பேற்றிக்காய்ச்சி பதத்தில் எடுத்து வடிகட்டவும். உட்கொள்ள நீர்க்கணம் தீரும்.

---

74 இப்பாடல் சரபேந்திர வைத்திய முறை கர்ப்பிணி பாலரோக சிகிச்சை பக்கம் 27இல் உள்ளது.

*ஓடுகின்ற வரள் கணந்தான் மிகுந்த தாரை[1]*
*உடல் இளைத்து தாகம் அத்திசுரம் காணும்*
*நீடு கண்டம் புகைந்து புகைந்து இருமலாகி*
*நீர் வெள்ளையாய் இறங்கும்*
*மூர்ச்சையுண்டாம்*
*வாடுகின்றநாக்கு மஞ்சள் வெள்ளை முள்ளாய்*
*மயக்கமுடன் முகமஞ்சள் பூத்து நிற்கும்*
*நாடுகின்ற வயிற்றில் வலி சற்றுக் காணும்*
*நயமாக அமுதத்தை நாட்டக்கேளே* 75

**உரை:**

**வரள்கணத்தின் குறி குணங்கள்: உடல் இளைத்தல் நீர்வேட்கை, என்புசுரம், விடா இருமல், சிறுநீர் வெள்ளையாக வெளியாதல், மயக்கம், நாக்கு மஞ்சளாதல், முகம் மஞ்சளாதல், வயிற்றுவலி. இவற்றுக்கான மருத்துவத்தைக கேட்பாயாக.**

*நாட்டு நிலக்கடம்பு குட்டி விளாவிலோடு*
*நன்னாரி சீரி பொடுதலை கச்சோலம்*
*வாட்டுகின்ற நெற்பொரியும் பருத்திவித்தும்*
*மதுரமொடு தேற்றான் விரையும் கூட்டி*
*தாட்டிகமாய் மிளகு இவைகள் பதினொன்றும்தான்*
*தயவாக இளவறுப்பாய் வறுத்துக் கொண்டு*
*கூட்டியதோர் நவநீதத் தண்ணீர் கொண்டால்*
*குடிகெட்டு வரள் கணந்தான் குலைந்துபோமே*
76

---

75 இப்பாடல், சரபேந்திர வைத்தியம் கர்ப்பிணி பாலரோக சிகிச்சை பக்கம் 27இல் உள்ளது.

**பாட பேதம்: 1. வந்ததாரை**

உரை:

நாட்டு நிலக்கடம்பு, குட்டிவிளா, நன்னாரி, பொடுதலை, கச்சோலம், நெற்பொரி, பருத்திவிதை, அதிமதுரம், தேற்றான்விதை, மிளகு சமஅளவு எடுத்துக் கொள்ளவும் அடுப்பேற்றி இளவறுப்பாக வறுக்கவும். இடித்துப்பொடி செய்து கொண்டு வெண்ணெய் நீரில் அருந்த, வரள்கணம் நீங்கும்.

*குலையான எரிகணத்தின் குணத்தைச்சொல்வேன்*
*குலையெரிச்சல் மேலெரிச்சல் தாகம் வாந்தி*
*அலைமோதி புரண்டு புரண்டு அவதிப்பட்டு*
*அமுது மிகவசம் அழிந்து முகம் கீழாகி*
*தலையுரைத்த[1] வாயாலே மூச்சுண்டாகி*
*தாங்காத ஆனாட்டம்[2] கண்டுதானால்*
*மலைபோல திரண்ட முலை வனிதமாதே*
*மருந்தினுட விவரத்தின் வாறுகேளே* 77

உரை:

எரிகணத்தின் குறி குணங்கள்: விலாவில் எரிச்சல் உடலில் எரிச்சல், நீர்வேட்கை, வாந்தி, அழுதல் காரணமாக முகம் மாறுதல், வாயால் மூச்சுவிடுதல், என்பனவாகும். இவற்றுக்கான மருத்துவம் கூறுகின்றேன்.

---

77 இப்பாடல் சரபேந்திர வைத்திய முறை கர்ப்பிணி பாலரோக சிகிச்சை பக்கம் 28ல் உள்ளது.

பாடபேதம்: 1. அசைந்து 2. வாராட்டம்

வாறு கோரோசனை மூன்று நிட்கம்
வண்டு உணாமலர் ஏலம்மதுரம்கோட்டம்
தேறும் விலாமிச்சம் வேர், மாசிப்பச்சை
சிறந்த சாதிப்பத்திரியும் வகைக்கோர் நிட்கம்
ஊறுகின்ற வேளைவேர் சாற்றினாலே
உலர்த்தியத்தால் அரைத்துண்டை
கடலையாக்கி
வீறுமுலை பாலதனில் கொடுத்தாயானால்
வெய்ய எரிகணம் பறந்து மெலிந்துபோமே
78

உரை:

கோரோசனை-3 நிட்கம், குங்குமப்பூ, ஏலம், அதிமதுரம் கோட்டம், விலாமிச்சவேர், சாதிபத்திரி மாசிப்பச்சை, என்பன வகைக்கு ஒரு நிட்கம், வேளை வேர் சாற்றில் அரைக்கவும். கடலையளவு உருண்டை செய்யவும். உருண்டையைத் தாய்ப்பாலில் தர எரிகணம் நீங்கும்.

---

78-இப்பாடல் சரபேந்திர வைத்திய முறை கர்ப்பிணி பால ரோக சிகிச்சை பக்கம் 28ல் உள்ளது

குறிப்பு: நிட்கம் 1 பலம்

மெலிந்து வரும் சுழிக்சணத்தின் பெருமை
சொல்வேன்
வெய்ய சுவாசமும் சுழிஅழித்து வாங்கும்
நலிந்து, பலவிதமாய் கழிந்து சேர்ந்து
நரம்புகளைப்புடைத்து மிகும் சுரங்களாகிப்
பொலிந்த செறு வாயாலே வாந்தி கோழை
புகழ் நாக்கு நெஞ்சில் வெந்து போகும்
கலந்த முலை குடியாமல் இளைத்துப் போகும்
கண் சொருகி நாசியும் பல்
காணும் தானே 79

**உரை:**

**சுழிக்கணத்தின் குறி குணங்கள்: கடினமாக மூச்சு வாங்குதல், நரம்புகள் புடைத்தல். சுரம் அதிகமாதல் வாந்தி, கோழை கட்டுதல், நாக்கு நெஞ்சு என்பன சூடாக இருத்தல், தாய்ப்பால் குடிக்காமலிருத்தல், கண்சொருகுதல் பல் கிட்டுதல் என்பனவாகும்.**

காணுகின்ற நாயிராஞ்சி தூதுளை வேர்க்கொம்பு
கருஞ்சிறி தலைச்சுருளி அரத்தையொடு
ஊனும் கண்டால் தத்திரியும் கசாயமாக
உள்ளிட்டால் சுழிக்கணந்தான் ஓடாதாகி
தானுகின்ற விளக்கெண்ணை சேர் இரண்டுக்கு
தான் திருகுகள்ளிப்பால் தாக்கு கால்சேர்
பேணுநர் முகலைசுரசம் அரைச்சேர் கம்பி
பிசின் கறுப்பு, சீரிநிட்கம் காய்ச்சிக்கொள்ளே
80

உரை:

இஞ்சி, நாயுருவி, தூதுவளை வேர்க்கொம்பு, கருஞ்சீரகம், தலைச்சுருளி, அரத்தை, கண்டங் கத்தரி, இவற்றைக் குடிநீர் இட்டுத்தர, சுழிக்கணம் தீரும்.

| | | |
|---|---|---|
| விளக்கெண்ணெய் | — | 2 சேர் |
| கள்ளிப்பால் | — | ¼ சேர் |
| முகலைச்சாறு | — | ½ சேர் |
| கம்பிப்பிசின், சீரகம் | — | 1 நிட்கம் |

இவற்றை தைலம் செய்யவும். சீரகத்தைப்பொடி செய்யவும், சாறு, பால், விளக்கெண்ணெயைக்கலந்து கொள்ளவும். அடுப்பேற்றிக் காய்ச்சவும். பிசின் சீரகப்பொடியைப் போட்டுக்கிளறி பதத்தில் இறக்கி வடிகட்டவும். உள்ளுக்குத்தர அழிக்கணம் தீரும்.

கொள்ளவே மூலத்தின் கணத்தைச் சொல்வேன்
கொடியமலம் உதிரமாய்[1] விழுந்து மேன்மேல்
துள்ளவே இரத்தங்கள் மிகுந்து வாயுத்
தொந்தமாய் ஆசனங்கள் கடுப்புண்டாகி
வெள்ளையாய் சரீரங்கள்[2] வெளுத்து தாகம்
வெப்பமொடு தலைவலியும் முகமும் சூம்பி
உள்ளுகின்ற சகளம் தான்[3] வற்றிப்போகும்[4]
உண்ணாமல் இளைத்துப்போம்
உடலுந்தானே 81

---

81-சரபேந்திரவைத்திய முறைகள்- கர்ப்பிணி பாலரோக சிகிச்சை பக்கம் 29 ல் இப்பாடல் உள்ளது.

பாடபேதம்: 1. பலநிறமாய் 3. தொடையதுவும்
2. சடலமது 4. நன்றா

**உரை:**

மூலகணத்தின் குறி குணங்கள், மலமானது இரத்த முடன் கழியும், வாயு மிகுதல், ஆசனக்கடுப்பு, உடல் வெளுத்தல், நீர்வேட்கை, வெப்பம், தலைவலி, முகம் வற்றுதல், உண்ணாமலிருத்தல், உடல்மெலிதல் என்பனவாகும். இதற்கு மருத்துவம்.

*உடனாத்திப்பட்டை அதன் பூவும் கொண்டு*
*உரைத்த பழம்பாசி அதிவிடையத்தோடு*
*திடமான இலவமதம் புளியாரை கூட்டி*
*சிற்றி இலவம்பட்டை ஆவாரம் வேரும்*
*அடவான வெந்தயமும் மத்தங்காய் புல்லரிசி*
*வகைக்கு இரண்டு நிட்கமாம்*
*ஆவின் நெய்சேர்*
*இடம் பாகவிட்டெரித்து கொடுத்தாயானால்*
*இனிதான மூலக்கணம் இருந்திடாதே* 82

**உரை:**

ஆத்திப்பட்டை, பூ, பழம்பாசி, அதிவிடையம் மேற்தோல், இலவும், புளியாரை, இலவம் பட்டை, ஆவாரை வேர், வெந்தயம், ஊமத்தங்காய், புல்லரிசி, வெந்தயம் இரண்டு நிட்கம், பசுநெய் சேர். சூரண மாக்கி நெய்யில் கலந்து கொண்டு அடுப்பேற்றிக் காய்ச்சி வடிகட்டிக்குடிக்கவும். மூலக்கணம் தீரும்.

இருத்தொரு முக்கணத்தின் இயல்பைக் கேளாய்
இனிய மல முக்கி முக்கி அடிகள் தள்ளி
வருந்தி மலத்தோடி இரத்தங்கள் சேரும்
வாந்தி சுரதாகம், முகமினுப்பாய்நிற்கும்
திருந்து முலையுண்ணாது நாக்குவேகும்
சிரம்[1] தொடை இடை வலிக்கும் தலை
கீழாக்கும்
விரிந்தகை கால் குளிர்ந்திருக்கும் பவளவாய்தான்
வெங்குடுப்பா உடலிளைக்கும்
வித்தைதானே 83

**உரை:**

முக்கு கணத்தின் குறி குணங்கள்: மலம் கடினப் பட்டு செல்லல், அடித்தள்ளல், மலத்தில் இரத்தம் வெளியாதல், சுரம், நீர்வேட்கை, முகம் மினுமினுப்பா தல், பால் உண்ணாமை, நாக்கில் புண் உண்டாதல், தலை, தொடை, இடுப்பில்வலி, கை. கால் குளிர்ந் திருத்தல் என்பனவாகும்.

---

83 இப்பாடல் சரபேந்திர வைத்திய முறைகள் **கர்ப்பிணி பாலரோக சிகிச்சை** பக்கம் 29ல் உள்ளது.

**பாடபேதம்:** 1. சிறந்ததொடை

*வித்தையுடன் முக்கரட்டையூர்னு நாவுங்கள்*
*விடத்த அவரை, துவரை, வரப்பூலாவும்*
*கொண்டு*
*அத்தசார்ரணை முருங்கை எட்டுவகைக் கொழுந்து*
*சொல்லுகின்ற பருத்திப் பிஞ்சுடனே சேர்த்து*
*வெற்றியுடன் உருக்கியதை எள்எண்ணைதனில்*
*மேல்போடு சீரிமிளகிரண்டு தூளும்*
*நத்தியதன் மேலிட்டு இரவியில்வைத்து*
*நலித்த முக்கு கணத்துக்கு நாட்டிடாயே 84*

**உரை:**

மூக்கரட்டை, அவரை, துவரை, வரட்பூலா, வெள்ளைச்சாரணை, முருங்கை என்ற எட்டுவகை கொழுந்துகள் பருத்திப்பிஞ்சு, வெற்றிலை- என்பன இடித்துச்சாறு பிழிந்து நல்லெண்ணையிலிட்டுக் காய்ச்சி பதத்தில் இறக்கவும். சீரகப்பொடி மிளகுத் தூள் இரண்டையும் போட்டு, சூரிய ஒளியில் வைத்து, வடிகட்டிக் குடிக்கவும் முக்கு கணம் தீரும்.

---

குறிப்பு: பாடல் 84 எட்டு வகைக்கு ஆறுவகை கொழுந்துகள் மட்டுமே தெரியவருகிறது. ஆயின் பூலாக்கிழங்கின் நீர்ப்பூலா, சத்திச் சாரணை என்பனவற்றையும் சேர்க்க "எட்டு வகையாகின்றது.

கணமென்ற விடமக் கணத்தைக் கேளாய்
கையும் காலும் அதைச்சு நெற்றி
வலியுண்டாகும்
குணமிலாச் சாணியைப்போல் பேதியாகும்
குரல் கம்மி முலையுண்ணா இருமல்
உண்டாகும்
இணையான சுரம் வெளுத்து சுரங்கள் காணும்
மென்னேரம் நெஞ்சுவிலா கொதிப்புண்டாகும்
துணையான கண்சிவக்கும் இளைத்துப் போகும்
சொல்லுகின்ற தேகம் பலவிதமாம் காணே
85

உரை:

விடமக் கணத்தின் குறி குணங்கள்: கை, கால்கள் சோர்ந்து போதல், நெற்றியில் வலி, சாணி நிறமாகக்கழிதல், குரல் கம்மல், பால் குடியாதிருத்தல் இருமல், சுரம், நெஞ்சு, விலாவில் சூடு, கண் சிவத்தல் உடல் இளைத்தல் என்பனவாகும்.

தானென்ற நிலக்கடம்பு நொச்சியோடு
சாற்று கண்டங்கத்திரி வல்லாரை கூட்டி
நானென்ற கரிசலாங்கண்ணி வெற்றிலை
நாயுரி கவிழ் தும்பை உழக்கு வீதம்
தோனென்ற திரிபலையும் வசம்போடுயுள்ளி
சேர் வகைக்கிரண்டு நிட்கம் சீராய் கொண்டு
வானென்ற ஆமணக்கெண்ணெய் நாற்சேர்
வடித்தருந்த விடமகணம் மாய்ந்து போமே
86

உரை:

நிலக்கடம்பு, நொச்சி, கண்டங்கத்தரி, வல்லாரை கரிசாலை, வெற்றிலை, நாயுருவி, தும்பை இவற்றின் சாறு உழக்களவு எடுத்துக் கொள்ளவும். திரிபலை, வசம்புப்பொடி, பூண்டு-2நிட்கம் ஆமணக்கெண்ணெய் 4 சேர். சரக்குகளைக் கலந்து கொண்டு அடுப்பேற்றி காய்ச்சிப்பதத்தில் எடுக்கவும். வடிகட்டி அருந்த, விடமக் கணம் தீரும்.

*போமென்ற ஆமக்கண குணத்தைக் கேளாய்*
*பொறுமியே சீத இரத்த பறந்தும் காணும்*
*ஆமென்ற சுவாசம் விழி சுழித்தல் காய்ச்சல்*
*அடிவயிற்றில் வலி, வியர்வை கழுத்து நாணல்*
*ஓமென்ற மூக்கு வெந்திடுகின்றேதான்*
*நூலெத்தெழுந்துகைகாலும் குளிர்ந்து காணும்*
*நாமென்ற கண் மூடி முழித்திடாது*
*நலித்துபோம், மருந்தினுட நயத்தைக்கேளே*
87

உரை:

ஆம கணத்தின் குறி குணங்களைக் கூறுகிறேன். வயிறு பொறுமல், மலத்தில் சளியுடன் கூட இரத்தம் விழுதல், சுரம், அடிவயிற்றில்வலி வியர்வை, கழுத்து வளைதல், மூக்கில் புண்கள், கை கால்கள் குளிர்தல் கண்ணை திறவாதிருத்தல், உடல் மெலிதல் என்பன வாகும். இதற்கான மருத்துவத்தைக் கூறுகின்றேன்.

நயமான காட்டுமல்லி கடுக்காயோடு
நல்ல கருஞ்சீரி மருட்கிழங்கு கூட்டி
செயமாகி வளர் கடுகுரோகணி சுருள்ளி
செம்முள்ளி குட்டிவிளா புரசம் வித்து
உயருகின்ற ஆமணக்குத் தைலத்திட்டு
ஒரு காய்ச்சலான பின்பு சாதிபத்திரி
தயவான சாதிக்காயிரண்டும் சேர்த்து
தாக்கினால் ஆமகணந்தான் தாழ்ந்துபோமே
88

உரை:

காட்டுமல்லி, கடுக்காய், கருஞ்சீரகம், மருட்கிழங்கு கடுகு ரோகணி, பூண்டு, செம்முள்ளி குட்டிவிளா, புரசம்வித்து, இவற்றை சம எடை எடுத்து பொடித்துக் கொள்ளவும், ஆமணக்கு எண்ணையுடன் கலந்து அடுப்பேற்றிக் காய்ச்சவும், பதத்தில் எடுத்துக்கொண்டு சாதிக்காய், சாதிப் பத்திரி சேர்த்து, வடிகட்டி உட்கொள்ள, ஆம கணம் நீங்கும்.

தாழ்ந்து வரு மந்தார கணத்தைக் கேளாய்
தாய்க்கு வயிறுப்பியே மலத்தைககட்டி
சூழ்ந்து நளிர் சுரமயக்கத்தில் இருமல் உண்டாம்
சுவாசமுடன் தலைவியர்வை, முலை
உண்ணாது
வார்ந்தி திடுக்கிட்டால் ஆவி இளைத்துப்போகும்
வடித்து வரு மூக்கினால் சலங்கள் மிஞ்சி
ஏந்து இளங்கொங்க்க நல்லாய், மருந்துதானே
இயம்புகிறேன், பலமாக எடுத்துத்தானே 89

உரை:

மந்தார கணத்தின் குறிகுணங்களாவன: தாய்க்கு வயிறு உப்புதல், மலக்கட்டு, குளிர் சுரம், மயக்கம், இருமல், மூச்சுத்திணறல், தலையில் வியர்த்தல் குழந்தை தாய்ப்பால் உண்ணாமை, வாந்தி, உடல் இளைத்தல், மூக்கில் நீர்வடிதல் என்பனவாகும். இதற்கான மருத்துவம் கூறுகின்றேன்.

*எடுத்த கணப்பூண்டு விட்ணு காந்தி நொச்சி*
*இனிதான குட்டிவிளா. கண்டங்கந்தரி*
*தடுத்தொரு தூதுவளைவேர், ஆடாதோடை*
*சாற்று கூத்தங்குதம்பை வேர்ப்பூலாவும்*
*அடுத்தொரு வல்லாரை நன்னாரி தானும்*
*அசையாமல் புட்டவியலாக வைத்து*
*கொடுத்திடவே மந்தார கணந்தான் பெண்ணே*
*கூறாமல் ஓடிவிடும் கொடிதுதானே* 90

உரை:

கணப்பூண்டு, விட்ணுகிரந்தி, நொச்சி, குட்டி விளா. கண்டங்கத்தரி, தூதுவளைவேர், ஆடாதோடை, கூத்தங்குதம்பை, வேர்ப்பூலா, வல்லாரை நன்னாரி, இவற்றைச் சம அளவு எடுத்துக்கொள்ளவும். புட்டவியல் செய்து, சாறு பிழிந்து உள்ளுக்குத் தரவும் மந்தாரகணம் நீங்கும்.

கொடிதான அந்தகனாம் கணத்தைச் சொல்வேன்
கூறுகின்ற மாலையிலே கண் தோன்றாது
கடிதான சுரம் தோன்றும், இரத்தப்போக்கும்
காலசந்து, பலபலவாய் சத்தம் பேசும்
முடிவான முகந்தானும் மஞ்சள்போலாம்
மோடாக மாரெழும்பி மயக்க முண்டாம்
மிடியான அருசி கண்டு, தேகம் வற்றி
மேலான முலைத்தான் பற்றுந்தானே 91

**உரை:**

அந்தக கணத்தின் குறி, குணங்களாவன: மாலையில் கண் தெரியாமலிருத்தல், சுரம், மலத்தில் இரத்தம் வெளியாதல், கால் தளர்ந்து, பொருத்துகளில் நடக்கும் பொழுது வலி உண்டாகும். மயக்கம் சுவையின்மை, மார்பு உயர்தல் உடல் வற்றும், என்பனவாகும்.

பற்றுகின்ற நீலி, வரப்பூலாவோடு
பாங்கான சிறு கீரை, பொன்னாங்காணி
நந்தும் இந்தவேர், சுரசம் வேறே வைத்து
நற்கடுக்காய், தேற்றான் விரையும் கூட்டி
சுத்த முலைப்பாலில் அரைத்துடனே சே .. .....
துய்ய வெண்ணை சேர்ந்தருந்து கை
வணந்தன்னி
மற்று இந்த மருந்துதனை உச்சிக்கிட்டால்
வந்ததொரு அந்தகனாம் கணம் வாராதே
92

உரை:

நீலி, வரப்பூலா, சிறுகீரை, பொன்னாங்காணி, வேர்ச்சாறு எடுத்துக் கொள்ளவும். கடுக்காய் தேற்றான் விரை இவற்றைத்தாய்ப் பாலில் அரைத்துக் கொள்ளவும். கலந்து வெண்ணையில் சேர்த்துத்தரவும். உச்சியில் தடவவும், அந்தகக் கணம் தீரும்.

*வாரான கண சுரந்தான் பெருமை மெத்த*
*மகத்தான தாபசுரம் பிதற்றல் தாகம்*
*சீரான சரீரங்கள் இளைத்துப்போகும்*
*சிக்கிவிடும் மலந்தன்னை இருமலுண்டாம்*
*வேறான கண்மஞ்சள், சிறுநீரில் மஞ்சள்*
*மிக்க வயிறு இரைந்து, கத்துமுலை*
*கண்கூடும்*
*தாரான இவையெல்லாம் கணத்தின் பேதம்*
*சாற்றுகிறேன் தினவுதத்தால் சாந்திதானே*
*93*

உரை:

கண சுரத்தின் குறி குணங்கள் : தாபசுரம், வாய் பிதற்றல், நீர்வேட்கை, உடலிளைத்தல், மலக்கட்டு, இருமல், கண்டு, சிறுநீரில் மஞ்சள் நிறம் உண்டாதல், வயிறு இரைதல் என்பனவாகும்.

சாந்தியென்ற தேற்றான்வேர், வரப்பூலாவும்
தாக்குவிட்ணு கிரந்தி, சிற்றா முட்டிவேரும்
சீந்தில, கஞ்சாக்கோரை, பற்பாடகத்தோடு
சிறந்த பொடுதலையும் கோட்டம் தராவும்
சேர்த்து
சேர்ந்த முத்தக்காசு, சுக்கு, வெந்தயம் கூட்டி
செருகவே குடிநீராய் கொடுத்தாயானால்
ஏந்து இளமுலைமாதே, பறந்து போகும்
இனிதான சுரந்தான் இருந்திடாதே 94

**உரை:**

தேற்றான் வேர், வரப்பூலா, விட்ணு கிரந்தி, சிற்றாமுட்டி வேர், சீந்தில், சகிஞ்சாக்கோரை, பற்பாடகம் பொடுதலை, கோட்டம், தரா, முத்தக்காசு, சுக்கு வெந்தயம் சமஅளவு எடுக்கவும். தண்ணீர்விட்டு அடுப்பேற்றிக் காய்ச்சி, $\frac{1}{4}$ பங்காகச் சுருக்கவும். இக்குடிநீரை வடிகட்டி, உள்ளுக்குக் குடிக்கவும். கண சுரம் நீங்கும்.

இருந்தொரு அக்கரமாம் கணத்தின் பேதம்
இயம்புகிறேன், தாது மெத்தத்துடித்து நிற்கும்
வருந்துகின்ற நாசி, வாய், ஆவி தோன்றும்
மதிமுகந்தான் வெளுத்துவிடும்,
சுரங்களுண்டாம்
குருந்த தலை, நாக்கு இவைகள் வெந்து போகும்
கூறியதோர் மூக்கினால் சலங்கள் காணும்
பரிந்ததலை வலியுடனே. மெய்குளிர்ந்து நிற்கும்
பொல்லாது, மருந்திற்கு, புகலக்கேளே 95

**உரை:**

அக்கர கணத்தின் குறிகுணங்களாவன: நாடித் துடிப்பு அதிகமாக இருத்தல், மூக்கு, வாயில் வெப்பக் காற்று காணப்படும், முகத்தில் வெண்மை நிறம், மூக்கில் நீர்வடிதல், தலைவலி, உடல் குளிர்தல், என்பன அக்கர கணத்தின் குறி குணங்களாகும்.

*புகலுகின்றேன் செண்பகமோடேலம், சுக்கு*
*புகழ்கோட்டம், மதுரம், இலவம்பட்டை*
*அகலும் முத்தக்காசுடனே சீரியெட்டும்*
*அதிக வரையில்லாமல் வறுத்துக்கொண்டு*
*சுகமுடனே தூள்செய்து, சமனாய் சீனி*
*தூக்கியதில் கலந்து, வெருகடிதான் கொண்டக்கால்*
*பகையான அக்கரங்கள் தானும்*
*பறந்து விடும், கருவரிதான் பரந்த மாதே*
**96**

**உரை:**

செண்பகம், ஏலம், சுக்கு, கோட்டம், அதிமதுரம் இலவங்கப்பட்டை, முத்தக்காசு, சீரகம் எட்டு சரக்குகளையும் வறுத்துக் கொள்ளவும். சூரணம் செய்து, சூரண எடைக்கு சர்க்கரை கலக்கவும். மூன்று விரலளவு உண்ண, அக்கரங்கள் தீரும்.

மாதேகேள், குண்டிஅக்கர குணத்தின் வாறு
மெத்த சிறுநீர் தான் மஞ்சளாகும்
போதேதான், அரைக்கு மேல் சுரங்களாகும்
பொல்லாத இருமலுடன், சுவாசம் காணும்
ஓதாமல் குரல் கம்மி, வெளுத்து, தேகம்
உணர்த்திவிடும், தாக, அன்ன துவேசம்
உண்டாம்
சூதாகி ஈரல்மெத்த, புண்ணாகிப் போகும்
சொல்லுகின்றேன், மருந்திதற்குச்
சொல்லுகின்றேனே 97

உரை:

குண்டி அக்கரத்தின் குறி குணங்கள் : சிறுநீரில் மஞ்சள் காணல், உடலில் பாதிக்குமேல் சூடுகாணப் படுதல், சுரம், இருமல், மூச்சுத்திணறல் குரல் மெலிதல் முகம் வெளுத்தல், நீர்வேட்கை உணவில் வெறுப்பு, ஈரல் கெட்டுப் போதல், இதற்கான மருத்துவம் கூறுகின்றேன்.

சொல்லுகின்றேன் சிறுகீரை பொன்னாங்காணி
சுண்டை இந்த மூன்றுவகை வேரும் கொண்டு
நல்லபசு வெண்ணைதனில் அரைத்துண்டாக்கால்
நாடாது குண்டிக்காயக்கரந்தான்
வல்லி, இளங்கொடி போலும் இடையும் செவ்வாய்
மதிமுகமும், செவ்விளநீர் கொங்கை மாதே
புல்லுண்ணும் பசுவின் பாலன்னம் உண்டால்
போமிது, பத்தியமாய் புகலுவாயே 98

உரை:

சிறுகீரை, பொன்னாங்காணி, சுண்டை இம் மூன்றின் வேரை, பசுவெண்ணையில் அரைத்துக் கொண்டு உண்ணவும். குண்டியக்கரம் தீரும் இதற்கு உணவு பால் சோறு ஆகும்.

*புகலுகின்ற கணத்து நிதானந்தான் சொல்ல*
*பூரணமாய் இருவருக்குத் தோணாதப்பா*
*மகிழ்கின்ற திரவியத்தில் ஆசையற்று*
*மனத்தில் உதித்தது வாக்கில் உரைத்து வாழும்*
*சகல குண வல்லவனாய் தெளிந்த செல்வன்*
*சாதிதனில் உயர்ந்தான் தொன் நூலைப்*
*பார்த்தேன்*
*இகந்தனி இன்னோர்களுடன் உள்ளங்கையில்*
*நெல்லி*
*எனத்தோன்றும் பலிக்குமிதில்*
*இனிதுண்டாமே 99*

உரை:

கண நோய்பற்றிய விளக்கங்களை சொல்ல இருவர்களுக்குத்தெரியாது. பொருளாசை இல்லாது மனதில் உள்ளதைக் கூறும் நல்லவர்கள், எல்லாவித மான நற்செய்கைகளைக் கொண்ட அருட்செல்வர்கள். பழைய மருத்துவ நூல்களை ஆய்வு செய்து பார்த்தேன் இம்மருத்துவ முறைகள், உள்ளங்கையில் உள்ள நெல்லிக்கனி போல் பயன்படுத்த, நோய்கள் நீங்கும். இம்மருத்துவ முறைகளை செய்து, உண்ண, இன்பம் ஏற்படும்.

உண்டபால் எதிர்எடுக்கும்
உடம்பு பலவிதமாய் தோணும்
அகண்ட வயிற்றில் கன முண்டாம்
அதிக சுரமும், மொழிச்செருக்கும்
விண்டமலத்தைக் கட்டிவிடும்
விழியும் வளைந்து கால் குளிரும்
துண்டமான ஆமம் என்றே
தோன்றி மருத்துவம் செய்வாயே 100

உரை :

குழந்தை உண்டபாலை வாந்தி செய்யும், உடலில் பலவித வலிகள் தோன்றும் பெரிய வியிற்றில் கனமாயிருக்கும், அதிக சுரம், வாய்பிதற்றல், மலக்கட்டு, விழி சோர்தல், கால்களில் குளிர்ச்சி என்பன ஆம சுரக் குறி குணங்களாகும்.

செய்வாய் வேம்பு மாவிலங்கை
சிவதைக் கிளுவை சரக்கொன்றை
மைவாய் புரசு, பிரண்டையும் உத்தா
மணியும் கடுக்காயிலைக் கள்ளி
கொய்வாய் பிரமி ரோகிணியும்
கொடிய மிளகு நிலவாரை
நைவாம் வெள்ளைச் சாரணைதான்
நட்ட ஆமம் பறந்திடுமே 101

உரை:

வேம்பு, மாவிலங்கை, சிவதை, கிளுவை சரக் கொன்றை, புரசு, பிரண்டை, உத்தாமணி, கடுக்காய், கள்ளி, பிரமி, கடுகு ரோகணி, மிளகு, நிலவாரை, வெள்ளைச் சாரணை இவற்றைக் குடிநீரிட்டுத்தர ஆமசுரம் நீங்கும்.

*பறந்த முத்தக்காசுடன் மஞ்சள்*
*பச்சை நீராய் தான் கழியும்*
*சிறந்த கண்ணில் பீளையுண்டாம்*
*திருகுவலிக்கும், உடம்புபெங்கும்*
*திறந்த கண்ணும் வளையமிடும்*
*தேகமெல்லாம் வியர்த்துவிடும்*
*நிறைந்த மூக்கில் சலம் பரியும்*
*நீராமத்தின் குணமிதுவே* 102

உரை:

முத்தக்காசு நிறம், மஞ்சள், பச்சைநிறமான கழிச்சல் காணும், கண்ணில் பீளை உண்டாதல் உடல்வலி, கண்களின் கீழ்கறுப்பு நிறவளையம் காணப்படுதல், உடலில் வியர்வை, மூக்கில் நீர்வடிதல் என்பன நீராமத்தின் குணங்களாகும்.

இதுவே, புரசு, பாவட்டை
இலையின் கள்ளி, கருஞ்சீரி
மதியும் பிரமி, வசம்பு, உத்தாமணி
காக்கரட்டான், முக்கரட்டை
சதமாம் வெதுப்படக்கி, கரி
சலாங்கண்ணிச் சாரணைவேர்
நிதமா ஓமம், குடிநீர் கொள்
நீராமம்தான் நின்றிடுமே 103

உரை:

புரசு, பாவட்டை, இலைக்கள்ளி, கருஞ்சீரகம் பிரமி, வசம்பு, உத்தாமணி, வெதுப்படக்கி, கையான் சாரணைவேர், ஓமம்-சமஎடைக்கொள்ளவும். பின் முறைப்படி குடிநீரிட்டு வடிகட்டிக் குடிக்க, நீராமம் நீங்கும்.

நின்ற வயிறு பொருமிப்போம்
நெற்றி நரம்பு புடைத்திருக்கும்
கண்ட வயிற்றில் வலியுண்டாம்
கை. கால் குளிர்ந்து தலைவலிக்கும்
வண்ட வாந்தி, அரோசகமும் மாம்
மாரையிடித்து மிகச் சோரும்
சென்று வரும் பேராமத்தின்
செயலாம் என்று தேர்ந்தறியே 104

**உரை:**

வயிற்றில் பொருமல், நெற்றி நரம்பு புடைத்தல், வயிற்றில் வலி, கை, கால் குளிர்தல், தலைவலி, வாந்தி, சுவையின்மை, நெஞ்சுவலி, உடலிம் சோர்வுண்டாதல் என்ற குறி குணங்கள் பேராமத்தில் ஏற்படும்.

*அறிவாய் பஞ்ச திரவியமும்,*
*அறியான திப்பிலியும்,*
*குறியாய் வகைக்கோர் இரண்டு நிட்கம்*
*கொடியநீலி தனிலரைத்து*
*நிறைய கால் சேர் தனையருந்த*
*நில்லாதோடும் பேராமம்*
*வெறிகொள் கரியக் குழலாளே*
*வேத முரைத்த இப்படியே* 105

**உரை:**

பஞ்சதிரவியம், அரிசித்திப்பிலி- 2 நிட்கம். நீலிச்சாற்றில் அரைத்துக்கொண்டு நாள்தோறும் ¼ சேர் உண்ண, பேராமம் தீரும்.

*இப்படியே பிதற்றும் தலை வலிக்கும்*
*பாங்கா நெஞ்சுக்குலை வற்றும்*
*அடிவயிறு கனத்திருக்கும்*
*அடிக்கும் தாபசுரம் மிகுந்து*
*வடிவேல் கண்ணும் வெளுத்துவரும்*
*மலத்தைக்கட்டி, கால் குளிரும்*
*துடியாம் சுரமென்றே*
*சொல்லுவார்கள், கலை உணர்ந்தோரே* 106

உரை:

வாய்பிதற்றல், தலையை வலித்தல், நெஞ்சிலுள்ள சதை வற்றுதல், அடி வயிற்றில் கன முண்டாதல், தாபசுரம், கண்ணில் வெண்மை நிறம் உண்டாதல், மலக்கட்டு, காலில் குளிர்ச்சி என்பன துடிசுரத்தின் குறி குணங்கள் என்று மருத்துவக் கலையில் வல்லார் கூறுவார்கள்.

*உணர்ந்த கடுகு ரோகிணியும்*
*உத்தாமணி மாம்பழக் கெண்ணை**
*இணைந்த கண்டங் கத்திரியும்*
*இலைக்கள்ளி, காக்கரட்டான்*
*பனையும் விட்ணு கிராந்தி சுக்கு*
*பகரும் வெண் சாரணையுடனே*
*புணர்ந்த கருஞ்சீரகம், குடிநீர்*
*புகட்ட ஆமசுரம் போமே* 107

உரை:

கடுகுரோகணி, உத்தாமணி, மாம் பழ எண்ணெய் கண்டங்கத்தரி, இலைக்கள்ளி, காக்கரட்டான், பனை, விட்ணுகிராந்தி, சுக்கு, வெள்ளைச்சாரணை கருஞ் சீரகம் - சம அளவு எடுத்து குடிநீரிட்டு உள்ளுக்குத் தரவும். ஆம சுரம் நீங்கும்.

---

*குறிப்பு: மாங்கொட்டை எண்ணெயாதல் வேண்டும்.

சுரமும் வலிப்பும் குரல் கம்மும்
சூழ்ந்த வயிற்றிலதைப்புண்டாம்
கருகி, மலந்தான் தீய்ந்துவிடும்
கால்கை குளிந்து தாகமுண்டாம்
உரிய மயக்கம் வேர்வையுண்டாம்
உதடு கறுத்து, முகம் வேறாகும்
அரிசி, மிகுந்து கண்டு தென்றா
ஆமசன்னி என்று கொள்ளே 108

**உரை:**

சுரம், வலிப்பு, குரல் கம்மல், வயிற்றில் வீக்கம் ஏற்படுதல், மலம் கறுப்பு நிறமாக வெளியாதல், கால், கை, குளிர்தல் நீர்வேட்கை, அறிவு மயங்கல், உதடு கறுத்துப்போதல், முகம் மாறித்தோன்றுதல் என்பன ஆம சன்னியின் குறி குணங்களாகும்.

கொள்ள முருங்கை, மாவிலங்கை
கொடியவேளை யிலைக் கள்ளி
வெள்ளையரான சாரணைதான்
மிகுந்த கண்டங் கத்தரியும்
துள்ளும் சூதப்பழக் கெண்ணெய்
சுரசத்துடன் கத்தாரி யிட்டு
உள்ளுக்கருந்த பறந்து நில்லாது
ஓடுமோம் சன்னியதே 109

**உரை:**

முருங்கை, மாவிலங்கை, வேளை, இலைக்கள்ளி, வெள்ளைச் சாரணை, கண்டங்கத்திரி, மாம்பழ எண்ணைய் சமஎடை எடுத்துக் கொள்ளவும். அரைத்துக் கொள்ளவும். சாறு பிழிந்து, எண்ணையுடன் கலந்து கத்தூரியும் சேர்த்து உள்ளுக்கு குடிக்க, ஆம சன்னி நீங்கும்.

*சன்னி என்பதெல்லாந்தான்*
*சள்ளை மெத்த தோற்றுவிக்கும்*
*உன்னியுணர்ந்து பார்த்தறிந்து*
*உகமாய் வியாதிதானறிந்து*
*மண்ணியதற்கு சிகிச்சை மெத்த*
*வகையாய் கொடுத்து, தணிந்த பின்பு*
*எண்ணிக் கொடுத்தால் அது பெரிதென்*
*எண்ணப் பலிக்கும் கண்மணியே* 110

**உரை:**

சன்னி என்ற முக்குற்றநோய் துன்பங்களை ஏற்படுத்தும். நுட்பமாக எண் வகைத் தேர்வால் உணர்ந்து, தக்கபடி மருத்துவம் செய்யவும்.

## மஞ்சள் காமாலை

*கண்ணுடன் சிறுநீர், நாக்கு*
*கனக்கவே மஞ்சள் போலாம்*
*எண்ணியே சுரங்கள், வாந்தி*
*எடுத்திடு மயக்க முதல்*
*வண்ணமாய் மூக்கு நாறும்*
*வயிற்றினில் வலி, அரோசி*
*நண்ணு மஞ்சட்காமாலை*
*நாடிய குணங்கள் தானே* 111

**உரை:**

கண் மஞ்சள் நிறமடைதல். நாக்கு மஞ்சள்நிற மடைதல், சுரம், வாந்தி, மயக்கம், மூக்கில் கெட்ட நாற்றம் எடுத்தல், வயிற்றில்வலி, சுவையின்மை என்பன மஞ்சட் காமாலையின் குறி குணங்களாகும்.

*குணத்தொடு கீழா நெல்லி*
*கொடிய பொற்றலைக் கையானும்*
*இணைக்கும் வெள்ளாட்டுலத்தி*
*எடுத்த ஆமணக்கு, சுக்கு*
*பனைத்திடு முடக் கொற்றானும்*
*பாகமாய் குடிநீர் கொண்டால்*
*புனைக்கும் மஞ்சட் காமாலை*
*போகும், பாலன்னம் கொள்ளே* 112

---

111 பாடல் பா.வா. பக்கம் 365-இல் பாடல் 10 ஆக உள்ளது.

112 பாடல் பா.வா. பக்கம் 366-இல் பாடல் 12 ஆக உள்ளது.

**உரை:**

கீழாநெல்லி, பொற்றலைக்கையான், வெள்ளாட்டுப் புழுக்கை, ஆமணக்கு, சுக்கு, முடக்கொற்றான் இவற்றை பக்குவ முறைப்படி குடிநீர் செய்து, உட்கொள்ள மஞ்சட் காமாலை தீரும்.
உணவு: பாற்சோறு

## கீரிப்பூச்சி

*ஆகுமே வயிறு பேதி*
*அடி வயிற்றில் புரண்டலுண்டாம்*
*தேகமே காட்டமன்ன*
*அதிவேகக் காய்ச்சலாகும்*
*வாகுசேர் வாந்தி நெஞ்சும்*
*மாறு மோடிட்டு வியர்க்கும்*
*ஏகமாய் வயிறு சூடு*
*இவை கீரிப்பூச்சி தானே* 115

**உரை:**

வயிறு பேதியாதல், அடிவயிற்றில் புரட்டல், உடலில் சூடு, சுரம், வாந்தி, நெஞ்சு, உடலில் வியர்த்தல், வயிற்றில் சூடு என்பன கீரிப்பூச்சியின் குறி குணங்களாகும்.

பூச்சு மாம்பழத்தின் எண்ணெய்
புளி, யவாச்சார இந்துக்
காய்ச்சிடு கடுக்காய் ரோணி
கலந்த கும்மட்டிக் காய்க்குள்
பாய்ச்சி, மாட்டு, தன்பாலின் கீழ்
பத்திரம் பண்ணும்பட்சம்
வாய்த்த முத்தெண்ணெதனில்
வகையுடன் அரைத்துக் கொள்ளே 116

**உரை:**

மாம்பழ எண்ணெய், புளி யவாச்சாரம், இந்துப்பு இவற்றைக் கலந்து கொண்டு, அடுப்பிலேற்றிக்காய்ச்சி பின் கடுக்காய், சடுகுரோகணி பொடி கும்மட்டிக் காயில் வைக்கவும். பாலில் அரைத்து மெழுகு பதத்தில் எடுத்து, சிமிழில் வைக்கவும். விளக்கெண்ணெயில் உள்ளுக்குத்தர, கீரிப்பூச்சி நீங்கும்.

## அசரிப்புழு

அரைக்கும் ஆசனத்தில் மெத்த
அரிப்புண்டாம் உருசி காணும்
கரைத்திடும் சரீரந்தன்னை
கழிந்திடும் சீதத்தண்ணீர்
சுருக்கியே மலத்தை தின்னும்
தொப்புளில் அரிப்புண்டாகும்
புறத்த மெய்யதனில் அசரிப்
புழுஎன அறிந்து கொள்ளே 117

உரை:

ஆசனத்தில் அரித்தல், சுவையின்மை உடல் இளைப்பு, மலம் சீதமாகக் கழிதல், மலம் குறைதல், தொப்புளில் அரிப்பு இவை அசரிப்புழுவின் குறி குணங்களாகும்.

*அறிந்த எலிச்செவி கடுக்காய்*
*ஆன, முள்முருங்கை, தானி*
*செறிந்த ஆமலகம் ஐந்தும்*
*சேரவே குடிநீர் வைத்து*
*சிறந்த வல்லிசம் விளங்க*
*சேர்ந்து மென்பொடிகள் தூவி*
*துந்து போம் அசரிப்பூச்சிக்*
*குடிநீரின் பலமென்று எண்ணே* 118

உரை:

எலிச்செவி, கடுக்காய், முள்முருங்கை, தான்றிக் காய், நெல்லிக்காய்-இவற்றைக் குடிநீரிட்டுக்குடிக்கவும். இதன் பொடியை உண்ண அசரிப்பூச்சி நீங்கும்.

*என்று ஒன்றிரண்டு உண்டு*
*எழுடனே மூன்றாநாள்*
*கண்ணியஞ் சுரங்களாகும்*
*கழுத்தினில் கொப்பளிக்கும்*
*நண்ணிய பால் வயிறு போகும்*
*நனிமுகம் வெளுக்கும் நெற்றி*
*வண்ணமாய் கழுத்து வியர்க்கும்*
*மதுரஞ் சுரம் என்று கொள்ளே* 119

உரை:

மதுரசுரக் குறி குணங்கள். கழுத்தில் கொப்பளம் பேதியாதல், முகம் வெளுத்தல், நெற்றி கழுத்து வியர்த்தல் என்பனவாகும்.

*என்ற சிற்றரத்தை சுக்கு*
*இருந்த விட்ணு காந்தி*
*மூன்று பற்பாடகம் சிற்றா*
*முட்டி கோரைக்கிழங்கு*
*வென்றிடும் மருதம்பட்டை*
*வேப்பந்தோல் குடிநீர் வைத்து*
*துன்னு கோரோசனை உள்ளிட்டால்*
*சுரமது தொலைந்து போமே* 120

உரை:

சிற்றரத்தை, சுக்கு, விட்ணுகிரந்தி, பற்பாடகம் சிற்றாமுட்டி, கோரைக்கிழங்கு. மருதம் பட்டை வேப்பந்தோல்-சம அளவு எடுத்துக் கொள்ளவும். நீர்விட்டுக் காய்ச்சி $\frac{1}{4}$ பங்காகக் குறுக்கி, வடிகட்டி, உள்ளுக்குத்தரவும். மதுரசுரம் நீங்கும்.

---

குறிப்பு: 119-ஆம் பாடலின் முதல்வரிக்குப் பொருள் விளங்க வில்லை.

தொலைவில்லா வயிறுப்பி
சுரத்தொடு வியர்வை, தாள் வாய்
வலியொடு இரத்த சீதம்
ஆகவே வயிறு போகும்
அலையும் கால்கை குளிர்ந்து
அடிவயிறு வலி, புண்ணாய்
குலை செறி வாந்தியானால்
குளிர் சன்னி வாதமாமே 121

**உரை:**

குளிர் சன்னியின் குறி குணங்கள்: வயிறு உப்பு தல், சுரம், வியர்வை, கால், வாய் இவற்றில் வலி, இரத்தம் சளி, மலத்தில் போதல், கை, கால் குளிர்தல், அடிவயிற்றில் வலி, விலாவில் வலி, வாந்தி என்பனவாகும்.

வாது சிற்றரத்தை, திப்பிலி
வளைந்த பேய்மிரட்டி, சுக்கு
தூதுளை, அக்கிராகாரம்
துளசி, விட்ணு கிராந்தி
வேதுகள் காய்ச்சி, நல்ல
வேப்பந்தோல், சிற்றாமுட்டி
ஈதெல்லாம்கூட்டி, நீராக்கி
இதிலும் கோரோசன கூட்டே 122

**உரை:**

சிற்றரத்தை, திப்பிலி, பேய்மிரட்டி, சுக்கு, தூதுவளை அக்ரகாரம், துளசி, விட்ணுகிரந்தி, இவற்றைக் கொண்டு வேது பிடிக்கவும். வேப்பந்தோல் சிற்றா முட்டி, சமூலம் சேர்த்து எரித்து, சாம்பலாக்கவும். இத்துடன், கோரோசனையைச் சேர்த்து உட்கொள்ளவும். குளிர்சன்னி நீங்கும்.

*கூட்டம் கண்டு, எழுந்திருக்கும்*
*குளிரும், வாய்த்ததும்பியுண்டாம்*
*வாட்டமாயிளைக்கும், வேர்க்கும்*
*மதிமுகம் வெளுக்கும், பேய் போல்*
*தேட்டமாய் வார்த்தையுண்டாம்*
*சீரில்லா மூச்சுண்டாகும்*
*ஆட்டிடும் சரீரந்தன்னை*
*அலத்திடும் சன்னிதானே* 123

**உரை:**

சேர்கை கண்டதால் உண்டாகும். குளிரும். இளைத்தல், வியர்த்தல், முகம் வெண்மையாதல், வாய் பிதற்றல், மூச்சுத்திணறல் என்பன அலத்திடும் சன்னியின் குறி குணங்களாகும்.

---

123 பாடல் பா.வா. பக்கம் 322-இல் பாடல் 12 ஆக உள்ளது.

சன்ன வெற்றிலை, சுக்கு, ஓமம்
சாற்று மாவிலங்கை, நொச்சி
துண்ணு அக்கிரகாரங்கள்
சூன் முருங்கையும் எருக்கு
நண்ணு சிற்றரத்தைக் கண்டத்
திப்பிலி, நறுக்கு வாங்கி
பண்ணி இச்சுரம் தம்மை
பற்பமும் கலந்து வாரே 124

**உரை:**

சிறுவெற்றிலை, சுக்கு, ஓமம், மாவிலங்கை, நொச்சி, அக்கிரகாரம், முருங்கை, எருக்கு,சிற்றரத்தை கண்டத்திப்பிலி, நறுக்குமூலம் - இவற்றை பொடி செய்யவும்.

## இளம்பிள்ளை வாதம்

ஊதிய உழலைதாக
உடல்வலி கடுப்புக்கீலில்
வாதன நடுக்கல், செம்பல்
வளைத்து மெய், நரமா இழுத்தல்
மாது நல்லாய் உருசி
மலபந்தம் கால் கை சூம்பல்
ஈதுவை அனைத்தும் கண்டால்
இளம்பிள்ளை வாதமென்றே 127

**உரை:**

மிகுந்த நீர்வேட்கை, உடலில் வலி, பொருத்து களில் வலி, நடுக்கம், மூடுதல், உடல் வளைதல் நரம்புகள் இழுத்தல், மலக்கட்டு, கால் கை சூம்புதல் என்பன இனம் பிள்ளைவாதக் குறி குணங்களாகும்.

*என்றொரு கழற்சி நொச்சி*
*இலைக்கள்ளி, திருகுக்கள்ளி*
*குன்றி மாவிலங்கை வேம்பு*
*கொடிவேலி, வேளை, மேனி*
*வெண்ட நற்கழஞ்சி, தோடை*
*மிகு தழுதாழை சீந்தில்*
*அன்றியதோர் வேது செய்தால்*
*அகன்றிடும் பிள்ளை வாதம்* 128

**உரை:**

கழற்சி, நொச்சி, இலைக்கள்ளி, திருகுக்கள்ளி, குன்றிமணி, மாவிலங்கை, வேப்ப இலை, கொடிவேலி வேளை, குப்பைமேனி, கழற்சி, ஆடாதோடை, தழுதாழை, சீந்தில், இவற்றால் வேது பிடிக்கவும். பிள்ளைவாதம் தீரும்.

---

குறிப்பு: முதல் நிலையில் உள்ள இளம் பிள்ளை வாதம் நீங்க உள்ள மருத்துவமாகும்.

பிள்ளை நோய் அனந்த மூன்று
    பெருகிய அதிலே பேதம்
ஒன்னிய உணர்ந்தோர் சொல்லால்
    ஒருவருக்கும் தெரியமாட்டார்
எள்ளிய        மை போணலே
    இருக்கும் மெய்யெங்கும் நோய்தான்
கள்ளவிழ் குழலினாளை
    கருத்துடனறிந்து பாரே    129

உரை:

குழந்தைகள் நோய்கள் அதிகம். அதில் பல வகைகள். இது பற்றி தெரிந்த மருத்துவர்கள் சொல்லாமல் யாரும் அறிய மாட்டார்கள்.

பார்த்தால் அலகை சேரும் என்றுமுன்
    பகர்ந்தீர் இந்த
வார்த்தை விபரமாக வகை
    பிரித்துரைப்பீர் என
சேர்திகழ் கமலமன்ன முகத்தினாய்
    தெளிவாய்க் கேள் என்
ஏத்த முன்னாதி தன்னை
    இயம்புவேன் இயம்புவேனே    130

உரை:

தோடத்தால் ஏற்படும் கேடுகளைக் கூறுகிறேன் இதன் வகைகளை விளக்கமாக பிரித்து உள்ளேன்: இதைக், கேட்பாயாக.

*இயம்புமாய் பாடி தன்னில்**
*இனிய யசோதை இல்லில்*
*பயம் பெறு மேக வண்ணன்*
*பாரினில் உதித்த வண்ணான்*
*புயந்தன்னை, தன்னைப் பற்றி வாங்கி*
*பூதலி தனது நின்ற*
*குயந்தன்னை அதரத்தூட்டும் கொள்கை*
*இவ்வுலகில் என்றார்* 131

உரை:

ஆய்ப்பாடி தன்னில், யசோதையின் வீட்டில், வளர்ந்த கண்ணன், பால் தந்து அழிக்க எண்ணிய பூதகி என்ற அரக்கியைக் கொன்றான். அது போன்று குழந்தைகள், நோய் என்னும் அரக்கியை வெல்லு வார்கள்.

---

குறிப்பு: இப்பாடலில் கண்ணனின் பெருமைகள் கூறப்படுகின்றது. எனவே, இந்நூலாசிரியர் வைணவராதல் கூடும்.

*உலகினில் கருவில் தானும்*
*உதித்த நாட்தொட்டு அனந்தம்*
*அலகைகள் சேரும் நீதிய முதல்*
*ஆதியாகி யாகப் . ... .. ...*
*பலவித குணங்கள் செய்யும்*
*பண்பினால் அறிந்து சாந்தி*
*குலவிய சிகிச்சை செய்தால்*
*தீர்ந்திடும் கர்ப்பக்கோளே* 132

**உரை:**

வயிற்றில் கரு உண்டானது முதல் பிறந்து வளர்ந்து வருவது வரை பலவகையான நோய்கள் குழந்தைகளுக்குத் தோன்றும். இவற்றைப்பற்றிய விவரங்களை ஆய்ந்து, அதற்கு வேண்டிய மருத்துவத்தையும், மருந்துகளையும் வேறு வகையான வழி முறைகளான மணி, மந்திரம் என்பனவற்றையும் செய்ய, பிணிகள் நீங்கும்.

# அலைகைக் காண்டம்

கர்ப்பந்தான் தோன்றியதோர் திங்கள்
கெடியான சிவலியென்ற அலகை சேரும்
அற்புதமாம் கர்ப்பத்தைக் கதிராமாக்கும்
அதன்பலியு மருந்து,நான் அறியச் சொல்வேன்
நூற்பமதா, அரிசிமஞ்சள் சுண்ணாம்பிட்டு
நுண்மையாய் பிசறினால் சந்திவையே
கர்ப்பவிதிவசைக் கந்தம் விலாமிச்ச வேர்
காராவின் பால்கூட்டிக் கலந்து கொள்ளே

உரை:

கரு தோன்றிய முதல் மாதம் சிவலி எனப்படும் நோய் ஏற்படும். மகப்பேற்றைத்தாக்கும். இதற்கான மருத்துவத்தைக் கூறுகின்றேன்.

கொள்ளவே இரண்டு திங்கள் தன்னிலும் பெண்ணே
கூறுகின்றேன் கிரந்தியெனும் பேய்தான் சேர்ந்து
தள்ளுமே பிண்டத்தை உதிரமாக
தானதற்குபலி உதிரம் செம்பு சேர்த்து
மெள்ளவே நாற்சந்தி வைக்க. மீளும்
வினையிருந்தால் செங்கழு நீராம்பல் கொட்டி
விள்ளுமிந்தக் கிழங்கையெடுத்துப்பாலில் சேர்த்து
வெருகடிதான் நாள் மூன்றில் அருந்தப்போமே 2

**உரை:**

இரண்டாம் மாதம் கிரந்தி என்ற நோய்தாக்கும். இது கருவைச் சிதைக்கும். இரத்த போக்கு உண்டாகும் மருத்துவம் செங்கழுநீர் ஆம்பல், கொட்டி-இவற்றின் கிழங்கை உலர்த்திச் சூரணம் செய்து, மூன்று விரலளவு பாலில் உட்கொள்ள மூன்று நாளில் நீங்கும்.

*போகுமே மூன்றாம் திங்கள் வறளைப் பேய்தான்*
*பொல்லாது. கை, கால் நடுக்கும், சோம்பல்*
*ஆகும், பலவிகாரமாம், பலி ஆழாக்கு*
*அரிசி பருப்புடன் பால் சோறாக்கிப் பிண்டம்*
*ஆகவே செய்து, பொரி, பொரி நீருந்தான்*
*அய்யனாரை சேவித்துப் பேர் கூவி*
*ஏகவே இரவில் வைக்கத்தீரும் பெண்ணே*
*இன்னமது, அவிழ்தங்கள் இயம்புகிறேனே* 3

**உரை:**

மூன்றாம் மாதம் வறளை என்ற நோய்பிடிக்கும். இது மிகவும் கொடியது. இதன் குறி குணங்கள்; கை கால் நடுக்குதல், வேலை செய்யாமலிருத்தல் என்பனவாகும். ஆழாக்கு அரிசிப்பருப்புடன் பொங்கல் செய்து. பால் சோறு என்பனவற்றை உருண்டை செய்யவும். அய்யனாரை வழிபட்டு வரவும். மேலும் மருத்துவம் கூறுகின்றேன்.

---

குறிப்பு: இக்காண்டத்தில் வரும் மருத்துவ மல்லாத பகுதிகளுக்கு உரை, இந்நூலாசிரியரால் எழுதப்படவில்லை.

இயம்பக்கேள், தாமரை வளைய அல்லியின்
கிழங்கு, காமநீரிட்டரைத்து
நலம் பெறவே ஆவின் பால் கூட்டி
மூன்று நாள் அருந்தத்தீரும்
இனி நாலாம் மாதம் பயங்கரமாய்
இவடியென்னும் பேய்தான் சேரும்
பருத்தொரு கீழ் வயிறு நொந்து காணும்
மயங்கி வரும் வயிறு சீத்மாய் போகும்
மடமயிலே பலியதற்கு வகுக்கின்றேனே 4

**உரை:**

தாமரை வளையம், அல்லிக்கிழங்கு இவற்றை கஞ்சா நீரில் அரைக்கவும். பின் பசும்பாலில் மூன்று நாட்கள் குடிக்கத்தீரும். 4ம் மாதம் இவடி என்ற நோய் ஏற்படும். இதன் குறி குணங்கள்: வயிற்றின் கீழ்ப் பகுதி வலித்தல், மலம் சளியுடன் கழிதல் என்பனவாகும்.

வகுக்கின்றேன், ஆழாக்கரிசி கண்டு சீனி
வாகான எருமைப்பால் அன்னமாக்கி
வகுக்கின்றேன் முவிலைக்கறியும் செய்து
பாங்கான காளிகோட்டத்தில் வையே
தகை பெரிய வைத்து, நோயிருந்து தானால்
தாமரையின் கிழங்கு, வாழைக் கிழங்கும்
நகைசெரிய இளமானே, பால் குழம்பும்
நன்றாக அரைத்து நீ, குடித்திடாயே 5

**உரை:**

அரிசியை ஆழாக்கு எடுத்துக் கொள்ளவும், எருமைப்பால், சர்க்கரையுடன் பொங்கல் செய்யவும். மூவகையான கறிகள் செய்து காளிக்குப் படைக்கவும். இதற்கு மருத்துவம்: தாய் தாமரைக்கிழங்கு, வாழைக் கிழங்கு, பாற்குழம்பு செய்து குடித்து வரவும்.

*குடிக்கவே அஞ்சு திங்கள் பூதகாளி பேய்க்குணம்*
*வயிறு முறுக்குமே, தலை நோக்காடாம்*
*இடிக்கும் கோரைக்கிழநீர், கோட்ட*
*இனிதான அதிவிடையம், கிராம்புமாக*
*வடிகட்டி வெந்நீரில் கொள்ளத்தீரும்*
*வாதான ஆறு திங்கள் சேர்த்த*
*வகைப்பேய்தான்*
*துடிக்க ஒரு பலியரிசி, ஆட்டுப்பாலும்*
*சோறாக்கிச்சாராயம் கூட்டிச்சொல்லே* 6

**உரை:**

5-ஆம் மாதம் பூதகாளி என்ற நோய் தாக்கும். வயிற்றை முறுக்கும், தலை வலி உண்டாகும். இதற்கு மருத்துவம்: கோரைக்கிழங்கு, நீர் கோட்டம் அதிவிடையம், கிராம்பு - இவற்றைக் குடிநீர்ட்டுத் தரவும்.

---

* குறிப்பு: இது அக்கார அடிசில் எனப்படும்.

சொல்லவே எம் பெருமான் கோவில் சேர்ந்து
சூட்சமாய் வடக்கில் வைக்கத்தீரும் தீரும்
சல்லியம், வயிற்றுவலி இருந்ததானால்
தப்பாமல் அரசடியின் மண்ணும் கொண்டு
துல்லியமாய், செங்கழுநீரியிலையும் மோரும்
சுகமாக அருந்தினால் உலைந்து போகும்
மெல்லியலே ஏழுதிங்கள் குணத்தை நன்றாய்
விளம்புகிறேன் நூலறிய விளம்புகிறேனே 7

**உரை:**

**வேதனை, வயிற்றில் வலி இருந்தால், அரசமர மண், செங்கழுநீர் இலை, மோர் இவற்றை உட் கொள்ள நீங்கும். ஏழாம்மாதத்தில் வரும் நோயை, நூல் வடிவில் எடுத்து, மருத்துவர்களுக்குக் கூறுகின்றேன்.**

விளம்புகிறேன் நீற்குதி என்ற வகை சேரும்
வியனாக உடம்பெல்லாம் நடுங்கிக் காணும்
தளம்பவே பலியரிசி பயிறு எள்ளோடு
சாதகமாய் ஆவின்பால், மேதிப்பால்
வளம்பெறவே சோறாக்கி, காளிகோவில்
வைத்திடு பேய் கூனி பின்னை சத்தோடும்
களங்கமிலா செங்கழனிநீர் இலாமிச்சவேர்
கனத்த அழலாவரை, திப்பிலிப்பால்யுண்ணே
8

**உரை:**

நிற்குதி என்ற நோய், 7-ஆம் மாதம் தாக்கும் உடலில் நடுக்கம் ஏற்படும். இதற்கு மருத்துவம், செங்கழனி நீர், இலாமிச்சவேர், ஆவாரை, திப்பிலி இவற்றைப் பொடி செய்து உள்ளுக்குப் பாலில் உண்ணவும்.

*உண்ண இருநாலு திங்கள், முண்டிப்பேய்தான்*
*உதிரத்தைப் பிண்டத்தை நோகச்செய்யும்*
*திண்ணமதாய், உளுத்தஞ்சோறு, உச்சிப்போதில்*
*திடமாக நாற் சந்தியில் வைக்க, மீளும்*
*வண்ணமதாய், ஒன்பது திங்களிலே பேய்தான்*
*வளமாக அன்னம்போல் அருகே நிற்கும்*
*நிண்ணப்பேயே, விட்டிடக்கடிமாலை*
*நிச்சயமாய், நின் குணத்தை இயம்பக்கேளே*
9

**உரை:**

எட்டாம் மாதம், முண்டி என்ற நோய் தாக்கும். இது பிண்டத்திற்கு துன்பத்தைத்தரும். ஒன்பதாம் மாதம் வளம் என்ற நோய் உண்டாகும். இதன் குறி குணங்களைக் கூறுகின்றேன்.

நியமதாய் இருபத்தி ஏழுநாள் தான்
நிச்சயமாய் குழந்தை பிறப்பது போல்
காணும்
வயணமதாய் மருந்து, கொட்டிக்கிழங்கு கொண்டு
மகத்தான காரைவேர், அத்திப்பட்டை
தயவாக இதையரைத்துப் பசுவின் பாலில்
சாதகமாய் உட்கொள்ள தளர்ந்து போகும்
கயல் புரளும் கருங்கண்ணாய், பத்தாம் திங்கள்
கனத்தொரு சூலையதாய் நோகும்தானே 10

**உரை:**

குழந்தை பிறப்பது போன்று (பிரசவ) வலி ஏற்படும். இதற்கு மருந்து: கொட்டிக் கிழங்கு, காரைவேர், அத்திப்பட்டை இவற்றை சம அளவு எடுத்துப் பொடி செய்து கொண்டு, பசும் பாலில் குடிக்கவும். வலி குறைந்து, நீங்கும். பத்தாம் மாதம், சூலை வாதம் வரும். உடலில் வலி ஏற்படும்.

தானிதுக்கு மருந்துகேள். அத்திதோலும்
தயவாக அரசு பிசின், இரண்டும் கூட்டி
ஆனதொரு பசுவின்பால். கூட்டித்தின்ன
அலங்காரமாய் குழந்தை,வெளியில்
தோன்றும்
மானனைய கருங்கண்ணாய், பிறந்த போது
மாதாவைச் சேர்ந்ததொரு நோய்
தோடம் போய்
ஆனதெல்லாம் குழந்தையை வந்தடையுமென்றே
ஆயுள் வேதத்தினால் அறிந்து பாரே 11

உரை:

இதற்கான மருத்துவம். அத்தித்தோல், அரசமரப் பிசின் இரண்டையுமரைத்து பசும்பாலில் குடிக்கவும். மகப்பேறு எளிதில் உண்டாகும். குழந்தை வெளியில் வரும். குழந்தை தோன்றியவுடன், தாயைப்பிடித்துள்ள குற்றங்கள் யாவும், குழந்தையைப் பற்றும் என வாழ்நாளைக்கூறும் சித்த மருத்துவ நூல்களால் அறியலாம்.

*பார் செனித்ததொரு நாழிகையில் சிறு குழந்தை*
*பார்வை முழியாமலே ... ... ...*
*வீலெனக் கதறிடாது, தீபமதிலே சுற்றி*
*வலமாகவே*
*சீரியகையோடு சுற்றினால் விழி திறந்து*
*கத்துமிது திண்ணமே*
*காரிருண்ட குழல் மாதிரண்டு*
*கடியான தினப் பெயர் கழற்றுவேன்*
*குழந்தை பிறந்தவுடன் அழாமலிருந்தால்*

12

உரை:

குழந்தை பிறந்தவுடன் கண்ணை திறக்காமலும், குரல் எழுப்பாலும் இருந்தால் துணியில் குழந்தையைச் சுற்றி வைக்கவும். பின்னர் விளக்கு ஒளியைத்தூண்டி குழந்தையுடன் வலது புறமாகச் சுற்றிவரவும். குழந்தையானது குரல் எழுப்பும்.

---

குறிப்பு: பாடல் 12-இல் சீர்கள் சரிவர இல்லை.

*கழறுவேன் வெகுளியென்ற பேயணையும்*
*மேல்வெதும்பும் அது கண்ட பின்*
*தழைத்த காணியோடு உளுந்து சோறு*
*சர்க்கரைக்கிழங் கதனை வைத்துப்போ*
*அழைத்து உகந்திடுகயென்று மீளுவது*
*தீரும் இங்கிவைகளான பின்*
*பழுந்த செம்பு கொண்டு வாய்துடைத்து*
*உதர உந்தியின் கொடி பறிந்திடே* 13

உரை:

குழந்தையை வெகுளி என்ற நோய் தாக்கும். குழந்தையின் உடல் வாடும். செப்புக் கலத்தால் நீர் எடுத்து குழந்தையின் வாயைத்துடைத்து, தொப்புள் கொடியை அறுக்கவும்.

*இடுபலா இலையும், அத்திப்பட்டை*
*சிறு ஆமணக்கிலையும் மூன்றுமே விடு*
*கடாசலம் எரித்து, நீள் குழல் நீரில்*
*ஆட்டிவிடு மெல்லிதாய்*
*படியப் பூத்துத் திலதமிட்டு வேப்பிலை*
*பறித்தடித்து வைத்து, இறப்பிலே*
*கொடிய கள்ளியோடு வெற்றிலை*
*சுரசமாயிரண்டுவகை கூட்டிடே* 14

---

குறிப்பு: குழந்தை குரல் எழுப்பாமல் இருப்பது மிகவும் கேடு விளைவிப்பதாகும். இதற்கான முதல் உதவிமுறையாக இதைக் கொள்ளலாம்.

**உரை:**

பலாஇலை, அத்திப்பட்டை, சிற்றாமணக்கு இலை - இவற்றை எருமையின் நீரில் போட்டெரித்து வெந்நீர் செய்து, குளிப்பாட்டவும். துடைத்து, சிறு பொட்டு நெற்றியில் இடவும். வீட்டிற்கு முன்பு, வேப்பிலை கட்டவும். கள்ளி, வெற்றிலை இரண்டையும் நசுக்கிச்சாறு பிழியவும்.

*கூட்டு வகையதாய் வளக்கு வகைக்கு*
*வேர்க் கொம்பு திப்பிலி கிராம்புடன்*
*வாட்டமில்லா தொரு மோதகம்*
*பெரிய காயமாமிளகு மஞ்சளும்*
*தேட்டமுள்ள தொரு கண்டுத் திப்பிலி*
*சிற்றரத்தை இவையொன்பதும்*
*காட்டுச் செந்தணலால் வெதுப்பி, இவ்விடை*
*கலந்து சேர்த்திடு வெள்ளுள்ளியே* 15

**உரை:**

வேர்க்கொம்பு, திப்பிலி, கிராம்பு, ஓமம், காயம், பெரிய மிளகு, மஞ்சள், கண்டத்திப்பிலி, சிற்றரத்தை - ஒன்பது வகை சரக்குகளையும் அடுப்பேற்றி காட்டுத்தீயாக எரித்து, இளஞ்சூட்டில் வறுத்து எடுக்கவும். சரிஎடை பூண்டு சேர்க்கவும்.

உள்ளி சேர்த்தில் பாதியெடை
கருப்பட்டியிட்டது பிசைந்த தாய்
கொள்ள மெய்யலைச் சலான வேதனைகள்
கொடிய நீர் மலக் கட்டுகள்
வள்ளமாமுலை உறைத்திடுதல்
வாத மொடு சீநீர் கபமாம்
விள்ளுமே பிணிச்சிறு குழந்தை நோய்
விளம்ப வேண்டிக் கண்ணியே 16

உரை:

பூண்டின் எடைக்கு பாதியளவு கருப்பட்டி சேர்க்கவும். அனைத்தையும் சேர்த்துப் பிசைந்து உண்ணவும். பற்றிய துன்பங்கள், நீர் மலக்கட்டு, தாய்ப்பால் குடியாமை, வாதம், கபும், சீழ்நீர் என்ற சிறு குழந்களுக்கு வரும் நோய்கள் நீங்கும்.

கண்ணியே, முதநாளில் கஞ்சகைப் பேய்சேரும்
கருவிலிந்த நாற்றமே இரையாயுண்ணும்
நுண்ணுமையாம் பிள்ளை, சவம் போலதாம்
நுகராது முலைச்சத்து. மலம்விடாது
இன்ன விதம் கண்டாக்கால் பொரியும்,பொரிநீரும்
இனி, மாவாலு உருவாக்கி, மாலைப் போது
அன்னவன் பேர்கூவி, வைக்கத்தீரும் தீரும்
அதுவன்றியின்னமும் தான் உரையக்கேளே
17

**உரை:**

முதல் நாள் கஞ்சசக்கை என்ற நோய் தாக்கும் இது கருவிலேயே வரும். குழந்தை, செயலிழக்கும், தாய்ப்பால் குடியாது, மலக்கட்டு என்பன இதன் குறி குணங்களாகும்.

*அறையக்கேள், இரண்டாம் நாள் பச்சைப் பேய்தான்*
*அதிகமாய் விழிபுரள், வெருவி நோக்கும்*
*துறையாக உளுத்தஞ் சோறாக்கிப் பேய் பேர் சொல்லி*
*மாலையின் போது சந்திவையே*
*முறையாக மூன்றாம் நாள் அறுசனிசன*
*முலையுண்ணா, எதிர்எடுக்கும், சீறி, விக்கும்*
*குறையில்லா, உளுத்தஞ் சோறு, எள் பொடி தான் சேர்த்து*
*கோழி பலியிட்டு, மாலையில் தான், வையே* 18

**உரை:**

குழந்தை பிறந்த இரண்டாம் நாள் பச்சை என்ற நோய் தாக்கும். இதன் குறி குணங்கள்: அதிகமாக விழியைச் சுழற்றும். அஞ்சும். மூன்றாம் நாள் குழந்தையை அறுசனி என்ற நோய் தாக்கும். இதன் குறி குணங்கள்: தாய்ப்பால் குடியாமை, வாந்தியாதல், சீறி விக்குதல் என்பனவாகும்.

வைக்கவே நாலாம் நாள் கோமண்டிப் பேய்தான்
மார்பு, கை கால், மேல் வெதும்பும்,
சீறி விக்கும்
அக்கணமே பொரியும், பொரி நீரும்தானே
ஆக்கு உளுத்தஞ்சோறு, பிண்ணாக்
கிலையும் கூட்டி
சத்தியமாய் அகலில்வைத்துக் கோவைத்தூண்டி
சவஞ்சுடுகாடதில், பேயைக்கூவி
வையெனும், மை குழலாய், கண்ட
விழிமாதே இந்த
வகையறிந்து, பலி கொடுத்தால்
வாங்கிப் போமே 19

**உரை:**

நான்காம் நாள் கோமண்டி என்ற நோய் குழந்தையைத் தாக்கும். மார்பு, கை, கால்கள் உடல் வாடும். சீறி விக்கல் எடுக்கும்.

வாங்கும் அஞ்சாம்நாள் தனிலே அஞ்சலிப்
பேய் நின்று
மலங்கழிய ஒட்டாது முறுக்கும் சீறும்
தூங்கும் உடம்பெல்லாந்தான், வெதும்பிக்காட்டும்
சுகமாக உளுந்தஞ்சோறு, நெய்யும் கூட்டி
ஆங்கிலைக்கறி, பொரியும், பொரி நீர் சேர்த்து
அகலிலிட்டு ஊர் நடுவில் மாலைப்போதில்
சாங்கியமாம் அவன்பேரைக் கூவித்தானே
சாதகமாய் பலி கொடுத்தால் தீர்ந்துபோமே
20

**உரை:**

ஐந்தாம் நாள் அஞ்சலி என்ற நோய் தாக்கும். மலம் கழிக்காது, உடலை முறுக்கும் சீறி அழும், உடல் வாடும்.

*தீர்ந்து போம் ஆறாம் நாள் அஞ்சிப் பேய்தான்*
*செய்யும் குணங்கள் எதிரெடுக்கும்*
*முலையுண்ணாது*
*நொந்து கை, கால் வலிஎடுக்கும், வெதும்பச்*
*செய்யும்*
*நல்ல பச்சரிசி. புண்ணாக்கு,*
*உளுத்தஞ்சோறும்*
*சேர்ந்த பொரி, பொரி நீரும், அகலிலத்து*
*தீபமிட்டுச் சுடுகாட்டில் கொண்டு போய்தான்*
*சாந்தமுடன் அஞ்சியென்றப் பேரைக் கூவி*
*சாதகமாய் வைத்திடவே தீரும் தானே 21*

**உரை:**

அஞ்சி என்ற நோய் ஆறாம் நாளில் ஏற்படும், இதன் குறி குணங்கள்: கக்குதல். பால்குடியாமை. நோதல், கை. கால்களில் வலி, உடல் வாடுதல் என்பன.

தீரும் தான் ஏழாம்நாள் செவ்வாய் நகைபேய்
சேரும் வயிறு வலியெடுக்கும்,
முலையுண்ணாது
கூறியதாய் எதிரெடுக்கும் சீறி விக்கும்
குணமாக பலியதற்கு, வெண் சோறாக்கி
நாரியே பஞ்சவர்ண சோறு வைத்து
நலமாக மண்ணகலில் வைத்துக்கொண்டு
காரியமாய் சந்தியிலே, மாலைப்பொழுது
கருங்கோழியைப்பலி கொடுத்து, கண்டு
கொள்ளே 22

உரை:

ஏழாம் நான் செவ்வாய் என்ற நோய் தாக்கும். இதன் குறி குணங்கள்: வயிற்று வலி, பால் குடியாமை பாலைக்கக்குதல், விக்கல், என்பன வாகும்.

கண்டுகொள் எட்டாம்நாள் திண்மைப் பேய்தான்
கால் உடம்பு, கையெங்கும் வீக்கம் செய்யும்
பண்டுபோல எதிரெடுக்கும், சீறி விக்கும்
பாதாதி கேசமெல்லாம் வெதும்பிக்காட்டும்
வேண்டியசேர், எள்பொடியும் பொரியும்,
வெண்நீறு
மேலான தேன்சொட்டு, அகலிலிட்டுக்
கண்டிதமாய் சுற்றியெரித்திடவே தீரும்
காருண்ட குழல் மாதே, கருத்துள் கொள்ளே
23

உரை:

எட்டாம் நாள் திண்மை என்ற நோய் வரும். இதன் குறி குணங்கள்: கால், உடம்பு, கை இவற்றில் வீக்கம், முன் போல் பாலைக் கக்குதல், விக்கல், உடல் முழுவதும் வாடுதல் என்பன வாகும்.

*கருத்தில் கொள் ஒன்பதாம் நாள் தடிப்பேய்தான்*
*கனமான உடம்பெல்லாம் வெதுப்பிக்காட்டும்*
*வருத்தமாய் மேல் வீங்கும், முலையுண்ணாது*
*வாயினால் எடுத்தபால் எடுக்கும், சிக்கும்*
*திருத்தமாய் குளத்துமண்ணும், குயவன் மண்ணும்*
*சேவையாக உருச்செய்து, மைபொட்டிட்டு*
*பொருத்தமுடன் பொரி, பொரிநீர் உளுத்தஞ்*
*சோறும்*
*புது நெய்யும், மாலையிலே கூறி, வையே*
**24**

உரை:

ஒன்பதாம் நாள் தடி என்ற நோய் ஏற்படும் இதன் குறி குணங்கள்: உடல் வாடுதல், வீங்குதல் பால் குடியாமை, கக்குதல் என்பனவாகும்.

*கூவலே பத்தாம் நாள் களவுகண்டி யென்னும்*
*கோடிப்பேய் சேருமது, வெதும்பிக் காட்டும்*
*பாவனையாய், போதாட்டு முலையுண்ணாது*
*பத உளுத்தஞ்சோறு புண்ணாக்கிலையும்*
*கூட்டி*
*மேவு பொரி, பொரி நீர், அகலிலிட்டு*
*வியன் உச்சிப்போது முச்சந்தி வைத்து*
*தாவியவள் பேர் கூவி, பலி ஈந்தக்கால்*
*சாதகமாய் போகுமிது சகசம் தானே* 25

**உரை:**

பத்தாம் நாள் களவு கண்டி என்ற நோய் தாக்கும். உடல்வாடும். பால் குடியாது.

*சகசமாய் ஓமத்தை யரைத்துக்கொண்டு*
*தாயவளுக்குத் தலைதனிலே தடவி வெந்நீர்*
*வகையுடனே வேப்பிலை போட்டுக்காய்ச்சி*
*வாகாக நீராட்டிக் கிரகந்தன்னை*
*சுகமாக வேதியரால் சுத்தி செய்தால்*
*சுத்த பித்த, வாத, கப, மிதமாய் நிற்கும்*
*ஆகா அசாத்தியம் அதனாலே அசூசியாவன்*
*பிசாசுகள் மிதமாய் வளங்கள் தானே* 26

**உரை:**

வழக்கமாய் ஓமத்தை அரைத்து பொடியை தலையில் தடவி, வேம்பிலை இட்டுக்காய்ச்சிய வெற்நீரால் தாயைக் குளிப்பாட்டவும். மறையோர் ஓதிய நீரைத் தெளிக்க, வாத, பித்த, கப நாடிகள் $1:\frac{1}{2}:\frac{1}{4}$ என்ற கணக்கில் நன்னிலைக்கு வரும்.

வளங்கள் பதினொன்றாம் நாள்
கவடிப்பேய் தான்
வாயில் முலையுண்ணாது வெதும்பும் வீங்கும்
களங்கமுடன் எதிரெடுக்கும் மெலிந்துபோகும்
கை வலியாகும், குயவன்மண் குளத்தின்
மண்ணும்
உளம் பெறவே உருச்செய்து, மையிட்டுதான்
உற்றபொரி, பொரிநீரும், உளுத்தஞ்சோறு
தளர்ந்த மடி ஆவின் நெய், மாலைப் பொழுதில்
சந்திதனில் வைத்திடவே, தயங்கிப்போமே
27

உரை:

11-ஆம் நாள் கவடி என்ற நோய் வரும். இதன் குறி குணங்கள், பால் குடியாது; உடல் வாடும், விக்கம் ஏற்படும். குடித்த பாலைக்கக்கும், மெலிந்து உடல் இருக்கும்.

தயங்கிய தோர் பன்னிரண்டாம் நாளில் வந்து
சண்டியெனும்பேய் சேரும், வயிறும் வீங்கும்
மயங்குமே, மேல்வெதும்பும், அது வாந்திசெய்யும்
வாயினால் குடித்த பாலெடுத்துப்போடும்
வியந்தபொரி, பொரிநீரு மேந்துளையிட்டு
மேய முலைப்பால், பஞ்சவர்ண சோறும்
செய்து
நயந்து புண்ணாக்கிலையுடனே. அகலிலிட்டு
நன்றாக மாலையிலே, காட்டில் போடே 28

**உரை:**

12-ஆம் நாளில் சண்டி என்ற நோய் வரும். வயிறு வீங்குதல், உடல் வார்துதல், மயக்கம், வாந்தி, பால் செரியாமல் கக்குதல் என்பன இதன் குறி குணங்களாகும்.

*போட்டவே பதிமூன்றாம் நாளில் வந்து*
*புகழ்களான் சந்திப்பேய் பொலிந்துசேரும்*
*நீடியே வயிறு கழியும், வாந்தியாகும்*
*நீதியில்லாப் பல விகாரங்கள் செய்யும்*
*கூடியதோர் பசும்பால் உளுந்துச் சோறும்*
*குணமான எண்ணை, புண்ணாக்கிலையும்*
*கூட்டி*
*தேடுபொரி, பொரி நீரும் கருப்புக்கட்டி*
*சேயமாம் கூப்ப, கரையில் மாலைப்போதே*
19

**உரை:**

13-ஆம் நாளில் சந்தி என்ற நோய்தாக்கும். வயிறு கழிதல், வாந்தி, பல வகையான துன்பங்களைத் தரும்.

*போது பதினாலாம்நாள் செம்மண்டைப் பேய்*
*புகழ்ந்து வயிறுபோகும்,பால் எடுத்துப்போடும்*
*ரீது பொருமல், வேதுமாய் அழுது, காந்தும்*
*சில்லரையாய் விகாரங்கள் செய்து காட்டும்*

*மாது நல்லாள் உளுத்தஞ்சோற்றடைப் பால்விட்டு*
*வகையான இலைக்கறியும் அகலில் வைத்து*
*சூது பெரும் அலகையின் பேர்கூவிக் கொண்டு*
*சுகமாக அந்திதனில் காட்டில் வையே 30*

**உரை:**

**14-ஆம் நாளில் செம்மண்டை என்ற நோய் தாக்கும். இதன் குறி குணங்கள்: வயிறு கழிதல், பால் குடியாமல் கக்கல், வயிற்றுப்பொருமல், உடல் சூட்டால் அழும், சில வகையான துன்பங்கள் ஏற்படும்**

*காட்டுகிறேன் பதினைந்தில் அலகன் எனும்*
*கனத்ததொரு பேய் சேரும் விக்கல் காணும்*
*வாட்ட முடல் வெதும்பியே, மலத்தைப் போகக்கும்*
*மகத்தான சன்னியுண்டாகும், பட்சி தோடம்*
*மேட்டிமையாய் சேருமது, முலையுண்ணாது*
*வெண்ணிறமாய் நீர்போலக் கழிச்சலுண்டாகும்*
*தாட்டிகமாய் மகத்துமது மாந்தம் சேரும்*
*தப்பாமல் எதிரெடுக்கும், தூங்கும் தானே 31*

**உரை:**

**15-ஆம் நாள் அலகன் என்ற நோய் உண்டாகும்: இதன் குறி குணங்கள்: விக்கல். உடல் வாடல். கழிச்சல். சன்னி, பட்சிதோடம், பால் குடியாது, கழிச்சல் வெண்திற சளியுடன் போகும். மாந்தம், பால் கக்குதல், தூக்கம் என்பனவாகும்.**

தூங்கவே பலி கேளு, உளுத்தச்சோறு
    சுகமான ஓட்டப்பம், பாலிலாடை
வாங்கிப் பொரி, பொரிநீரும், அகலிலிட்டு
    மாலையிலே பேர் கூவி, நீர் நேரத்தில்
சாங்கியமாய் பலிகொடுத்து, வைத்தாயானால்
    சாதகமாய்ப் போகும், இந்த சாந்திக்கெல்லாம்
பாங்காகக்கோழி பலிகொடுத்து வைத்தால்
    பறவையொடு, பேயெல்லாம் பறக்கும்தானே
32

**உரை:**

இந்நோயை நீக்கும் வழிகள் இதில் கூறப் படுகின்றன.

பறக்குமே ஈரெட்டில் ஐவகை பேய் சேர்ந்து
    பருவமாய் வீங்குமது, பருப்புச் சோறு
வறுத்தபொரி, பொரிநீர், ... ... ... தூண்டி
    மண் கலத்தில் வைத்திவள் பேர் கூவிக்காட்டி
பிறை கொழுத்த குழிக்கு முன்னே அந்திதன்னில்
    பலிகொடுத்து வைத்திடவே, தீர்ந்து போகும்
சிறக்கும் மண்ணை, தனக்கு நீராட்டி வைத்து
    செயமாக வண்டு முதல் மருந்து கூட்டே 33

**உரை:**

16 ஆம் நாள் ஐவகை என்ற நோய் உண்டாகும்.

மருந்து கேள், கோட்டம் வல்லிரு சீரகம்
திருந்து சடாமாஞ்சில், சாதிக்காய்
அருந்து சிற்றரத்தை அக்ரகாரம்
பறந்திடும் சாதிப்பத்திரி தானே 34

ஐவகை என்ற நோய் நீங்க, மருத்துவம் கூறுகின்றேன். கோட்டம், நற்சீரகம், கருஞ்சீரகம், சடாமாஞ்சில், சாதிக்காய், சிற்றரத்தை, அக்ரகாரம், சாதிப்பத்திரி.

தானே தராவெப்பை சதகுப்பை யோடு
மானே சன்ன இலவங்கப் பட்டையும்
பானில் இலவங்கப் பத்திரியேலம்
பான மூன்றும் விராகனி ரண்டே 35

**உரை:**

தரா, வெட்பாலை, சதகுப்பை, சன்ன இலவங்கப் பட்டை, இலவங்கப்பத்திரி, ஏலம்-3 வராகன் வகைக்கு எடுத்துக் கொள்ளவும்.

வகை செவ்வியத்தோடு வளர் திப்பிலியும்
தகு மிளகும் குரோ சானி ஓமங்கள்
மகிழுமிவை நான்கு வகை அரைப்பலமதாய்
துகையுடனே தான் சுக்கு முப்பலமே 36

**உரை:**

செவ்வியம், திப்பிலி, மிளகு, ஒமம், குரோசானி ஒமம் வகைக்கு ½ பலம் எடுத்துக் கொள்ளவும். சுக்கு ¾ பலம்

*பலம் தாளிச பத்திரியுடனே*
*சிலகடைத்திப்பிலி யிரண்டும்*
*உலவிய ஒன்றொருபலமாக*
*நலமிகு கிராம்பு நலமோதகமே* 37

**உரை:**

தாளிச பத்திரி, திப்பிலி - 1 பலம். கிராம்பு ஓமம்

*தகவிரு வகையும் சரிநான்கு நிட்கம்*
*திகழரு ஆலம்பிசின், சீர் காட்டத்திப்பூ*
*புகழிவை யிரண்டும் போட்டொரு நிட்கம்*
*இகழ் பகையில்லா இருபத்துஎண் வகையே* 38

**உரை:**

வகைக்கு நான்கு நிட்கம்; ஆலம்பிசின், காட்டத் திப் பூ-இரண்டுநிட்கம். மொத்தம் 28 வகையான கடைச்சரக்குகள்.

*இரண்டு சேல் விழியா இலவங்கப்பட்டை*
*திரண்ட வாய் விளங்கம் சேர்ந்ததி மதுரம்*
*விரிந்த நன்னாரி வேருடன் நாலும்*
*வருத்திய மூன்று நிட்கம் வகைக்கே* 39

உரை:

இலவங்கப்பட்டை, வாய்விளங்கம், அதிமதுரம், நன்னாரி இவை நாலுநிட்கம் வகைக்கு எடுத்துக் கொள்ளவும்.

*எண்ணிய, மருந்து எடுத்தனித்தனியே*
*எண்ணிய முன் சொன்னவெடைப் பிரமாணம்*
*எண்ணித் தூளாயிடித்தொருமித்தால்*
*எண்ணரு நிட்கமும் பலமேழதாமே* 40

உரை:

தனித்தனியே முன்சொன்னபடி எடையில் எடுக்கவும். பொடிசெய்து கலக்கவும். ஒவ்வொரு நிட்கமும் 7 பலமாக ஆகும்.

*ஆலைசர்க்கரை நாலெட்டு நிட்கம்*
*கோலப்பாகு செய்தால் இட்டதில்*
*சாலத்தூளதை மேலிட்டே கிளறு*
*சாலக்கழற்சியைப் போலுண்டை செய்யே* 41

உரை:

சர்க்கரை 32 நிட்கம், பாகுசெய்து, சூரணத்தை இடவும். கிளறி, கழற்சிக்காய் அளவுக்கு உருண்டை செய்து கொள்ளவும்,

செய்து கொடுக்கத்தீரும் வியாதி
மெய் உளைச்சல், சுரம், விக்கல் தலைவலி
ஐயம் வாந்தி, அருசியுண்டாகும்
மெய் நீர்க்கடுப்பு, இரத்த பித்தங்களே 42

**உரை:**

உட்கொள்ள தீரும் நோய்கள்: மன வருத்தம், சுரம், விக்கல், தலைவலி, கபம், வாந்தி, சுவை யின்மை, இரத்தக்கடுப்பு, இரத்தப்பித்தம் என்பன வாகும்.

தங்கிய சீநீர், சன்னி வாதங்கள்
மங்கதிசாரம், வாயுத்திரட்சி
பொங்கிய மூலம், புகழத்தி சுரம்
இங்கிதமலசல மேகுமிதற்கே 43

**உரை:**

சீழ் நீர், சன்னி வாதம், அதிசாரம், வாயு மூலம், எலும்பு சுரம், மல சலக்கட்டுகள் தீரும்.

தகுமே பதினேழில் மண்டைப்பேய்
எய்யும் மெலிவிக்கும் ஆமசுரமுமாகும்
தாகமொடு வயிறுபோகும், முலையுண்ணாது
சலியாமல் எதிரெடுக்கும் உளுத்தஞ்சோறும்

*பாகமாம் பருப்பு, பஞ்சவண்ணச்சோறு*
*பகற்பொரியும், பொரி நீரும் அடப்பம் கூட்டி*
*வேகமுடன் அகலிலிட்டுத்தீபம் வைத்து*
*விரிவான குளக்கரையில் கூவி நாட்டே* **44**

**உரை.**

**17ஆம் நாள் மண்டை என்ற நோய் தாக்கும். இதன் குறி குணங்கள்: உடல் மெலிதல் ஆமசுரம், நீர் வேட்கை, கழிச்சல், தாய்ப்பால் குடியாமை, பாலைக் கக்குதல் என்பனவாகும்.**

*நாட்டவே பதினெட்டில் தேனாக்கிப்பேய்*
*நயமுள்ள வயிறு கழியும், சுரமதாகும்*
*வாட்டு பிண்ணாக்கிலைப் பொரியும், பொரிநீரும்*
*வேணசோர், வளர்கன்னல் கட்டி,*
*கருவாடு சேர்த்து*
*தோட்டி வளர்சுடலை தனில் பேயைக்கூவி*
*சுந்தரமாய் அகலில் வைத்துப் போட்டு மீளே*
*நீட்டிய ஈரெட்டு மூன்றாம் நாள் தன்னில்*
*நிச்சயமாய் கண்ணாயென்ற அலகை தானே*
**45**

**உரை:**

**18-ஆம் நாள் தேனாக்கி என்ற நோய் வரும். இதன் குறி குணங்கள்: வயிறுகழிதல், சுரம் என்பன. 19-ஆம் நாள் கண்ணா என்ற நோய் தாக்கும்.**

அலகை செய்யும் குணங்கேளீர், வயிறுபோகும்
அருந்தாது முலைச்சத்தும், வெதும்பும் கத்தும்
பலியதற்கு மாவினால் பாவை செய்து
பிரியமாய் பொரி, பொரிநீர், உளுத்தஞ் சோறும்
குலவு நறுஅகில் கந்தம் செம்பும் சூடிக்கொண்டு
கதலிக்கனியும் அகலிலிட்டு
நலமிருந்த பிடாரி கோவிலே வைக்க
நன்றாகும் நல்வழியே, நடத்திப்பாரே 46

**உரை:**

இதன் குறி குணங்கள்: கழிச்சல், வாடுதல், தாய்பால் குடியாமை அழுதல், என்பனவாகும்.

நடக்குமிருபது நாளில் சனியென்னும் பேய்
நாடியழு உடம்பிளைக்கும், அஞ்சுமாம்,கக்கும்
வடக்குதிசை மண்ணெடுத்துப்பாவை செய்து
வளமான பாற்சோறு, வெண்சோறு செய்து
முடித்தொரு மூன்று அகலில் மாலைப்பொழுது
மூன்று திரிகொளுத்தியே, காளிகோவிலில்
குடதிசையில் வைத்திடவே, தீர்ந்து போகும்
கொடியிடை வேற்கண்மாதே, குறித்துக் கொள்ளே 47

**உரை:**

20-ஆம் நாளில் சனி என்ற நோய் ஏற்படும். உடல் இளைக்கும், பயப்படும், பாலைக் கக்கும் என்பன குறி குணங்களாகும்.

குறியாக முவேழில் அணந்திப்பேய்
குணங்களாய் வேர்க்குருவாம் போது
ஊட்டாகும்
வெறியாக முலையருந்தாது உடம்புகாயும்
வெண்பொரியும், பொரிநீரும் கோழியொடு
அறிவான தோர்க்கு வழி தன்னிலே தான்
அதிகமாய் சலம் செரிந்து வைத்தால் தீரும்
வெறிபேரண்ட குழல், கருங்கட்செவ்வாய்
மென்கழுத்து கும்பமுலை இடைநூல்மாதே 48

உரை:

21-ஆம் நாளில் அணந்தி என்ற நோய் வரும். இதன் குறி குணங்கள்: உடலில் வியர்க்குருஉண்டாகும் தாய்ப்பால் குடியாது. உடல் சுடும்.

மாதேகேள் இருபத்தியிரண்டாம் நாளில்
மகத்தான கஞ்சி யென்னும்பேய் தான்சேரும்
சூதாக வெதும்பிக்கும் அழுது கத்தும்
தொந்தமாய் கண்ணிரண்டும்,
முழிக்கொட்டாது
மாதீப, தூபமுடன் மாவில் யாவை
வளமான வரட்டிப்பொரி பொரி நீர்கொண்டு
வாதான சுடலைதனில் உச்சிப்போதில்
வைத்திடவே தீர்ந்துவிடும் வழக்குந்தானே 49

**உரை:**

22-ஆம் நாள், கஞ்சி என்ற நோய்வரும். உடல் வாடும், அழுதல், கத்துதல், கண் விழிக்காமல் இருக்கும் என்பன குறி குணங்களாகும்.

*வழக்கமுடன் இருபத்து முன்றாம் நாளில்*
*மகாபாலன் என்னுமொரு பிசாசு சேரும்*
*கழிச்சலுடன் சோம்புதலும், வெதும்பும், செய்யும்*
*கனத்தபொரி, பொரிநீரும். பருப்புசோறும்*
*செழித்ததொரு வெண்சோறு, கந்த தூபதீபம்*
*சுடலையிலே பேய்தானே*
*அழைத்தங்கே, அந்திதனில் வைத்தாயானால்*
*அகன்றுவிடும், பிணியெல்லாம் அகன்று*
*போமே 50*

**உரை:**

23ஆம் நாள், மகாபாலன் என்ற நோய் வரும். கழிச்சல், சோம்பி இருத்தல், உடல்சுடுதல் என்பன குறி குணங்களாகும்.

*அகன்று மூவெட்டில் இரத்தமென்னும்*
*அலகையது சேருமது, தாகம் தோன்றும்*
*பகர்ந்ததொரு கண்புத்திட்டிப் போலக் காணும்*
*பலகாலும் வெதும்பியமும், சுரந்தான்காணும்*
*மகிழ்ந்ததொரு வெண்சோறு. பால் சோறாக்கி*
*வளமான தயிர்கந்தி, தூபதீபமும்*
*புகழ்ந்த இரவி, பொதுச்சந்தி நாலில்*
*புகழாக வைத்திடவே, பிரிந்து போமே 51*

உரை:

24-ஆம் நாள் இரத்தம் என்ற நோய் தாக்கும். நீர்வேட்கை, உடல் வாடல், சுரம் என்பன குறி குணங்களாகும்.

*பிரிந்த இருபத்தஞ்சு இரட்சகனெனும் பேய்*
*சேரும் குளிர்ந்திருக்கும், வெதுப்பஞ்செய்யும்*
*பரிந்து, செத்துக்கிடந்தாற்போல் கிடத்திப்போடும்*
*பலகாலும் வெவ்வேறே குணங்கள் காட்டும்*
*அருந்தியவெண்சோறு எருமைத்தயிரும் கொண்டு*
*ஆட்டி நல்லெண்ணையிது மூன்றும் கூட்டி*
*கரிந்த மசானக்கரையில், அந்திப்போது*
*கலந்து வைக்கத் தீர்ந்துவிடும் கயற்*
*கண்ணிமாதே 52*

உரை:

இருபத்தி ஐந்தாம் நாள் இரட்சகன் என்ற நோய் குழந்தைக்குவரும். இதன் குறி குணங்கள்; உடல் குளிர்த்தல், வாடுதல், உறக்கத்தில் இருத்தல் என்பன வற்றைக் காட்டும்.

*கண்ட இருபத்தியாறில் சமபார அந்தி*
*காட்டியதோர் குணங்கேளாய்.*
*வயிறுபோகும்*
*வண்டு விழி குளிர்ந்திருக்கும், சிரிக்கும், பார்க்கும்*
*மூரவினால் பாலைவண்ணி, சாந்துமிட்டு*

*கொண்டயில் சந்தனமும், பூவுஞ்சூட்டி*
*கொடிய கந்தி, தூபதீபம் தொடுத்து*
*பண்டு பருப்புசோறும், நெய்பால் விட்டு*
*பாங்காக கூவி, வைப்பாய்*
*மாலைப்பொழுதே 53*

**உரை:**

**26-ஆம் நாள் சமபார அந்தி என்ற நோய் தாக்கும். இதன் குறி குணங்கள்: விழியானது குழி விழுந்து காணப்படும். மனநிலையானது பாதிக்கப் பட்டிருக்கும், சிரிக்கும். என்பனவாகும்.**

*மால் சிறந்த மூவொன்பான் நாளில்தானே*
*மகத்தான சோதியென்னும் அலகைசேரும்*
*வேல் சிறந்த விழி, திறவா, மயக்கமுண்டாம்*
*வேதனையாய் கொட்டாவியுண்டாம்*
*பால் உளுத்தஞ்சோறுடனே, கோழிபலியிட்டு*
*பாங்காக சோதியென்றும் பேயைக் கூவி*
*சீலமுள்ள குழந்தைதனைச் சுற்றி விட்டு*
*தீபமிட்டோர் கடிகை பின்பு சேர்ந்து*
*வையே 54*

**உரை:**

**27ஆம் நாளில் சோதி என்ற நோய் உண்டாகும் இதன் குறி குணங்கள்: விழிகளைத்திறக்காது மயக்கம் உண்டாகும், துன்பத்துடன் கொட்டாவிவிடும் என்பனவாகும்.**

*வாயிருபத்தெட்டினிலே முகத்தீயன் என்னும்*
*மகத்தான அலகையது, எதிரெடுக்கும்*
*தோயுமிருகண்அதிர, வாயழுது கத்தும்*
*துய்ய வெண்சோறு, உளுத்தஞ்சோறுடனே*
*பாயும் எருமைத்தயிர் குழைந்து, மொந்தையாக்கி*
*இளகிட வெகு கடிகை பின்பு*
*பாயுமொரு கோழி, பலியிட்டுக்கூவி*
*பாங்காக சுடலையிலேரிவைத்திடாயே 55*

**உரை:**

**28 ஆம் நாளில் முகத்தீயன் என்றநோய் தாக்கும். பாலைக்கக்கல், கண்கள் வெளிவருவது போலவாய் பிதற்றல், அழுதல் என்பன குறி குணங்களாகும்.**

*எரிந்த இருபத்தொன்பதாம் நாள் கூற*
*சகுடனென்னும் பேய் சேரும், அது*
*வயிறுபோகும்*
*முறிந்த பாலெதிர் எடுக்கும். இரத்த நீராம்*
*முழியாது, கண் செத்து, முலையுண்ணாது*
*அரிந்தஅரிசிமாவாலே பாவை செய்து*
*அலர் சூட்டிக் கந்தியினால் தூபதீபம்*
*சிறந்த பொரி, பொரிநீரு ஊரின் கீழ்த்திசையும்*
*புங்கின் கீழ்வைக்கத் தெளிந்துபோமே 56*

**உரை:**

**29-ஆம் நாள் சகுடன் என்ற நோயுண்டாகும். கழிச்சல், பாலைக்கக்குதல், இரத்த நிறத்தில் சிறுநீர் வெளியாதல், கண்ணைவிழிக்காமல் இருத்தல், பால் குடியாமை என்பன இந்த நோயின் குறி குணங்களாகும்.**

தெளிந்ததோர் ஒன்றாம் திங்கள்
சென்றிடும் காபாலிப்பேய்தான்
குளிர்ந்தபல சேட்டை பண்ணும்
கூசி, நின்றழுது கத்தும்
வளர்ந்த மண்பாவை செய்து
மண்ணகல் தன்னில் வைத்துக்
களங்கறி, பால் பிண்ணாக்கு
கடியநாற்சந்தி போடே 57

**உரை:**

1-ஆம் மாதம் காபாலி என்ற நோய் ஏற்பாடும். இதன் குறி குணங்கள். பல வகைகையான செயல் களைச் செய்யும். அழுது, கத்தும்.

சந்திசெயிரண்டாம் திங்கள்
தன்னிலரக்கி யென்பாள்
வந்து செங்கரப்பான் செய்வாள்
மகிழ் பொரி, எள்ளினோடு
முந்து, எள்ளெண்ணை கூட்டி
மூடி மண்ணகலில் இட்டு
சந்தியில் ஊர் வடக்கே
சாற்றிடச் செய்வாயே 58

**உரை:**

2-ஆம் மாதம் அரக்கி என்ற நோய் உண்டாகும் இதன் குறி குணங்கள்: செங்கரப்பான் ஏற்படும்.

செய்யதோர் மூன்றாம் திங்கள்
சேரு, வனப்படச்சுருக்கி
மெய்யும், வாய்வரளும், கத்தும்
எதிரிடும், சீதம் போகும்
துய்யவெள்ளாட்டுப் பாலும்
சோறு, வெண்பொரி நீரோடு
வெய்ய, மாபாவை செய்து
வின்ற, சேவல் அரி சூட்டே 59

உரை:

3-ஆம் மாதம், வனப்படச் சுருக்கி என்ற நோய் வரும். இதன் குறி குணங்கள்: உடல் வாய் உலர்ந்து போதல், அலறல், கக்குதல், கழிச்சல் என்பனவாகும்.

சூட்டியே தெற்கு திக்கில்
சூழ்ந்த நாற்சந்தி வைக்க
கோட்டின இள முலையாய் எங்கும்
குலாவிய நாலாம் மாதம்
காட்டிய திவாதிப் பேய்கண்
கண்ணமுங்கும், குழியுமாச்சு
ஊட்டிய முலையுண் ணாது,
விழி குழிந்து, உறுமும்தானே 60

உரை:

4-ஆம் மாதம், திவாதி என்ற நோய் உண்டாகும். கண்பள்ளமாதல், பால் குடியாமை, விலங்குகளைப் போல ஒலி எழுப்புதல் என்பன குறி குணங்களாகும்.

*தானது மா வால்பாவை இரண்டுசெய்*
*தகுமோர் கூழும்*
*கூனுடனகலில் இட்டுக்*
*குறைப்பூச் சூட்டிக் கோழி*
*ஆனதோர் பலியும் செய்து*
*அந்தியில் மேற்கு தெற்கு*
*தேனுரு குழலாய் வைக்க*
*தீர்ந்து போம், செய்து காணே* 61

**உரை:**

**மருத்துவ மல்லாததால் விலக்கப்பட்டது.**

*காணவே ஐந்தாம் மாதம்*
*கலங்கிடும், மனங்கலங்கி*
*ஊணியே முலையுண்ணாது*
*விழிசிவந்து, திடசீதம் போகும்*
*காணிடச்சீறும் பாலைக்*
*கக்கியேயெ டுக்கும், செய்யும்*
*சாணில் மாப்பாவை செய்து*
*சமைந்திடும் பாலும் சோறே* 62

**உரை:**

**5-ஆம் மாதம், மளங்கலக்கம் உண்டாக்கும். பால் குடியாது, விழிகளில் சிவப்பு நிறம் காணும். கெட்டியாக சளியுடன் மலங்கழியும், பாலைக் கக்கும்.**

---

**குறிப்பு: 5-ஆம் மாதம் நோயின் பெயர் கூறப்படவில்லை.**

சோறு செய்பாகற் கீரை
சுண்டி மண்கலத்திலிட்டு
நாராய வெண்பூச்சூட்டி
நறுபலி கோழி முட்டி
கூறிய அந்திப் பொழுதில்
குடதிசை வைத்தால் ஏகும்
வீறிய ஆறாம் திங்கள்
வேங்கரு முறுக்கித்தானே.

உரை

6-ஆம் மாதம் வரும் நோயின் குறி குணங்கள்: உடலை முறுக்குதல்.

முறுக்கி மெய் கறுக்கும், காயம்
முதிர் சிரங்காகும், சுக்கும்
வறட்சியாம், தாகம் செய்யும்
மலர் கண்ணீர், சொருகிக் காட்டு
குறித்த மண் பாவை செய்து,
கூறிய உளுத்தஞ் சோறும்
வெறுந்தும்பை மலரைச் சூட்டி
வியன் தெற்குத் திசையில் போடே 64

உரை:

உடலைக் கறுப்பாக்கும், பாலைக்கக்கும். நாவில் வறட்சியுண்டாகும், நீர்வேட்கை எடுக்கும் கண் சொருகும்.

---

குறிப்பு: நோயின் பெயர் தரப்பட வில்லை.

திசையில் உத்திராபதி பேய்
சேர்ந்திடும் ஏழாம் திங்கள்
வசமுடன் முலை உண்ணாது
வறட்சியாய் அழுது கத்தும்
பசையில் மாப்பாவை பண்ணி
பகர அன்னம் தூதுளங்காய்
நசையிலைக்கறி, ஆவாரை
நறுமலர் சூட்டிக் கொள்ளே 65

உரை:

7-ஆம் மாதம் உத்திராபதி என்ற நோய் வரும். இதன் குறி குணங்கள்: தாய்ப்பால் குடியாமை, நீர்வேட்கை, நாக்கு வறட்சியாதல், அழுதல் என்பனவாகும்.

கொள்ளவே தட்டினாலே
கொழுக்கட்டை செய்து கொண்டு
மெள்ளவே படைத்து சுத்தி
வியனந்தி. மாலை தன்னில்
உள்ளு நாற் சந்தி வைக்க
ஓடிடும் எட்டாம் திங்கள்
அள்ளலங் குழலாயேல
அழகிப்பேய் சேருந்தானே. 66

உரை:

எட்டாம் மாதம் அழகி என்ற நோய் உண்டாகும்

சேருமே முட்டை விண்ட
    சலம் போல் கழியும் வேம்பு
வீரெனக் கதறும் ஏந்தி
    வெளுத்திடும் குழியுமுச்சி
பாவினில் தட்டுப் பாலை
    பாலகற்றிச் சோறும் வெண்ணை
வாறு பேய்த்துமட்டிக்கீரை
    வளர்கனி கோட்டைத்தேற்றே 67

**உரை:**

இதன் குறி, குணங்கள். முட்டையின் சளியென கழிச்சல், கதறல், தலை உச்சியில் வெளுப்பு நிறம் காணும் என்பனவாகும்.

ஏற்றிய நலமாம் திங்கள்
    ஏற சங்கபாலி யென்பாள்
சத்தம் பல சேட்டை செய்யும்
    சேர்ந்திடும் கோழை, மெத்த
மரத்தினில் பாவையப்ப,
    மறியின் பாலன்னத்தோடு
தோற்றியே ஏழாம் சந்தி
    வைத்திடத் தொலைந்து போமே. 68

**உரை:**

ஒன்பதாம் மாதம் சங்க பாலி என்ற நோய் வரும். இதன் குறி குணங்கள்: பலவித ஒலிகளை எழுப்புதல், கோழை காணுதல் என்பனவாகும்.

தொலையவே பத்தாம் திங்கள்
கொண்டு நாற் சிங்கி யென் பாள்
வமலிடு நாசலதோடம் போல்
பெருங்கண்ணை விழிக்கொட்டாது
பல பஞ்ச வண்ணச்சோறு
பழுபாகற்காய், விருட்சிப்பூ
உலவிய மேற் காம் திங்கள்
உகந்திவை யோடிப் போ(ம்) 69

**உரை:**

பத்தாம் மாதம் நாற்சிங்கி என்ற நோய் உண்டாகும். இதன் குறி குணங்கள்: நாக்கு வரளும், சலதோடம் என்றநீர்க் கோவை கண்ணை விழியா திருத்தல் என்பனவாகும்.

ஓடிய பத்தோடன்றி
உத்தமாகாளிப் பேய்தான்
நாடியே குசும்பாபூ போல்
நயந்த சீதத்தைப் போக்கும்
சூடிய கரியால் பாவை
சோறாவின் தயிரும் சேர்த்து
வாடை கார்த்திகைப்பூச் சூடி
மாலையில் சுடலை வையே 70

**உரை:**

11- ஆம் மாதம் உத்தமாகாளி என்ற நோய் ஏற்படும். இதன் குறி குணங்கள்: குசும்பாபூவைப் போன்ற நிறத்தில் மலம் வெளியாதல்.

வைத்த ஈறாறு திங்கள்
மருவு சேர் முறுக்கியென்பாள்
ஏற்றிய சிரங்கு, வீக்கம்
விழிசுழல் செய்யும், சீறும்
முற்றிய மஞ்சட்பாவை
முதிர் கருங்குறுவைச் சோறும்
மை ததிகள், கொன்றைப்பூவும்
வளர் கருவாடும் கொண்டே 71

**உரை:**

12-ஆம் மாதம் முறுக்கி என்று நோய் ஏற்படும். இதன் குறிகுணங்கள்: சொரி சிரங்குகள், உடலில் வீக்கம், விழியைப்புரட்டுதல், சீறுதல் என்பனவாகும்.

கொண்டுதானுச்சிப் போதில்
கோழியுள் பலியும் செய்து
வண்டி நாகளிக் கோட்டம்
வைத்திடவே மாண்டுபோகும்
கொண்டையாங் கண்ணாயிருப்பால்
கிளிமொழிக்கு, தலை செவ்வாய்
திண்டரைத் தவமும் பெண்ணின்
சிசு குணம் செப்பக்கேளே 72

**உரை:**

குழந்தையின் தன்மைகள் பற்றியவற்றை கூறுகிறேன் கேட்பாயாக.

செப்பிய திங்களொன்றில்
அரளிப்பேய் தான் சேரும்
வெப்பமுட கழிச்சலுண்டாகும்
விளங்கு. கந்தம் செம்பு
உப்பிய மாவில் பாவை,
உளுத்தஞ்சோறு, அகலிலிட்டு
செப்பு நாற்சந்தீ வைக்க
தீர்ந்துபோம், தெரிவை நல்லாய் 73

**உரை:**

முதல் மாதம் அரளி என்ற நோய் தாக்கும். உடலில் சூடு, கழிச்சல் என்பன குறி குணங்களாகும்.

நல்லாயிரண்டில் ஓதிய வகை,
நமன்போல சிரசு தலைக்கும்
பொல்லாச் சீதம், வாந்தியுண்டாம்
பொரிபோலச் சிரங்குதான் வெடிக்கும்
செல்லிமாவில் பாவை, உளுத்தஞ்
சோறடையும், சந்தனமும்
சில்லகலில், எருக்கிலை வைத்து
நாற்சந்தி, தெரித்தேற்றே 74

**உரை:**

இரண்டாம் மாதம் ஏற்படும் நோயின் குறி குணங்கள்: தலை ஆட்டுதல், சீதக்கழிச்சல், வாந்தி உண்டாதல், சிரங்குகள் என்பனவாகும்.

தெரிந்த மூன்றாம் திங்கள்தனில்
சேருங்காளி, வயிறு கழியும்
பரிந்து, முறுக்கும், காயுமுடல்
பகருமதுசேர கருங்கோழி
பொரிந்தயெண்ணெய், தும்பையுடன்
பூவைச் சூட்டிய மாபாவை
வரிந்த சந்திதனில் வைக்கவே
வாதுடனே பறந்திடுமே 75

பறந்த பதினாலாம் திங்கள் தனில்
பகரும் புலலென்ற அலகையது
சிறந்த மூர்ச்சை, எதிரெடுக்கும்
சிரமும் குனியும், வெறிப்பார்வை
துறந்த உளுத்தஞ் சோறு அப்பம்
சொல்லுமே எள்ளும் பொரி இறைத்து
அறிந்தகோழி பலியூட்டி
அகண்ட மசானத்திடம் செல்லே 76

**உரை:**

**14ஆம் மாதம், புலன் என்ற நோய் வரும். இதன் குறி குணங்கள்: மயக்கம், பாலைக்கக்குதல். தலை குனிதல், வெறித்துப்பார்த்தல் என்பனவாகும்.**

செலுத்துமஞ்சள் மாமுனிவன்
    சிரத்தைக் குளிரும், வயிறுகழியும்
வறுத்துக்காயும், உளுத்தஞ்
    சோறும், ஓட்டப்பம்
பலிக்கும் நாற்சந்தியில் வைக்க
    பறந்துபோகும். இருமூன்றில்
சலியாதிருக்கும், சாமுண்டி
    தயங்கும் விழியைச் சொருகிடுமே 77

**உரை:**

**மாமுனிவன் என்றநோய் தாக்கும் இதன் குறி குணங்கள்: தலையில் குளிர்ச்சி, வயிறு கழிதல், உடலில் சூடு என்பனவாகும்.**

இடுமே வயிறு பொருமிப்பால்
    எடுக்கும், மாவும் இளநீரும்
திடமாம் கந்தமோட்டில் வைத்துச்
    செயமாம் பிடாரியகத்திலிட
விடமாம் இருளன் ஏழினிலே
    வெதுப்பும் முலையுண்ணாது
அடல்சேர் மூர்ச்சை, தாகமுண்டாகும்
    அதற்கு பலிதான் அறைகுவனே 78

**உரை:**

**வயிறு பொருமல், பாலை க்கக்குதல் என்பனவாகும். 7-ஆம் மாதம் இருளன் என்ற நோய் வரும். இதன் குறி குணங்கள்: உடலில் சூடு, பால் குடியாமை, மயக்கம், நீர் வேட்கை என்பனவாகும்.**

அறைவேன் நெய்யில் மாப்பிசைந்து
அஞ்சு கறிசேர் சந்தனமும்
நிறைய அகலில் வைத்தெடுத்து
நிகழ்ந்த காளி கோட்டத்திலே
முறையாய் வைத்தாய் தீர்ந்துவிடும்
முதிய எட்டாம் திங்களிலே
நுரைசேர் சிங்கம்
நாமவகை சேர்ந்திடும் 79

உரை:

8-ஆம் மாதம் நாமம் என்ற நோய் உண்டாகும்.

சேர்ந்து கனிந்து மூர்ச்சையுண்டாம்
சீறியழுது, வயிறுப்பும்
பாரந்த மாவிலே எருமைசேயது
பகர்சந்தனமும் அகலிலிட்டுச்
சார்ந்தமாலை தனில் ஈட
தன்னில் வைக்கத் தணிந்து விடும் 80

உரை:

இதன் குறிகுணங்கள்: மயக்கம், சீறியழல், வயிறு உப்புதல் என்பனவாகும்.

வந்து பலமாய் விதங்கள் செய்யும்
வயிறு போகும், கால் குளிரும்
கந்தம் தெளித்து ஐந்து வகை
கிளர் சேர்சோறும் பூவுடனே

முந்த அகலில் அமை மைந்தா
முடியு மாலை தனில் சுட
வார்த்த முலையாள் ஒன்பதிலே
மகாமுனியென்பான் வந்திடுமே 81

உரை:

பலவகையான துன்பங்களைத் தரும். வயிறு கழியும், கால் குளிரும். ஒன்பதாம் மாதம் மகாமுனி என்ற நோய் வரும்.

வந்து பலமாம் விதங்கள் செய்யும்
வயிறுபோகும், கால் குளிரும்
கந்தம் தெளித்து, அஞ்சுவகை
கிளர்சேர்சோறும், பூவுடனே
முந்தகலில் அமை மைந்தா,
முடியுமாலைப் போதினிலே
விந்தையுடன் சந்தியில் வைத்தால்
வெகுண்டுபோகும் கண்டிரே 82

உரை:

இதன் குறிகுணங்கள்: வயிறு கழியும். கால் குளிரும் என்பனவாகும்.

கண்டிர், பத்தாம் கீழதனில்
கனத்த ஆதிபாலன் என்பான்
வேண்டா வயிறுதான் கழியும்
மெத்த சிரசு வலியுண்டாகும்

துண்டாய் பலப்பால், விதமாகும்
 சேர்ந்தால் அஞ்சு வகையுடனே
குண்டாக் கந்த மலர் தூவிக்
 கொடிய நாற் சந்தியில் போடே 83

உரை:

பத்து மாதத்தில் ஆதிபாலன் என்ற நோயானது வரும். வயிறு கழிச்சல், மிகவும் தலைவலி இவை குறி குணங்களாகும்.

போடும் பதினோராம் மாதம்
 புகழும் விதியென்பாள் சேரும்
வாடும், முகமும் கண் பிசையும்
 வலிக்கும், தலையைச் சார்த்திக்கேள்
ஓடும் நெய், தேன் கலந்து
 புண்ணாக்குடனே கறியும் அகலிலிட்டுக்
கூடும் கந்த மாலையிலே
 கொடிய சுடலை வைப்பீரே 84

உரை:

11-ஆம் மாதம் விதி என்ற நோய் வரும். இதன் குறி குணங்கள்: முகம் வாடுதல், கண் வலித்தல், என்பனவாகும்.

*வைப்பீர் பன்னிரண்டாம் மாதம்*
*வளரும் வீரனென் பான் சேரும்*
*மெய்ப்பாய். கண்ணை விழியாது*
*மிகுந்து பாலைக் குடியாது*
*ஒப்பாங் கோழி, சிவந்தகறி*
*உரைக்கும் பஞ்சவர்ண கன்னம்*
*செப்பாம் கந்தம் அகலிலிட்டுச்*
*சீராய் சந்திதனில் சேரே* 85

**உரை:**

**12-ஆம் மாதம் வீரன் என்ற நோய் தாக்கும் கண் திறவாமல் இருக்கும். பால் குடிக்காது என்பன குறி குணங்களாகும்.**

*சேரும் பெண்ணாங் குழலிகட்கு*
*செப்பும், விதியின் முறைப்படிதான்*
*பெருங்கச்சை யணி மாதே*
*வளரும் ஆண்டின் விதியதனை*
*பாரிலுரை, பெண் அலி ஆண்*
*பகரு மூன்று விதம் செய்யருஞ்*
*சேரும்லகை தனை வேதத்*
*திறத்தாலுரைப்பேன், திண்ணமிதே* 86

**உரை:**

**முதலாம் ஆண்டில், ஆண், பெண், அலி என்ற வகையில் உள்ள குழந்தைகளுக்கு வரும் நோய்களை மருத்துவ நூலில் உள்ளபடிக் கூறுகின்றேன்.**

திண்ண முதலாம் ஆண்டதனில்
சேருமலகன் என்னும் பேய் தான்
வண்ணம் வேறாய், வெதும்பியிடும்
வயிறு கழியும், நடுக்குண்டாய்
பண்ணுமிதுக்கு பலி கேளாய்
பகரும் உளுத்தஞ் சோறுடனே
வெண்ணை காட்டி இலைக்கறியும்
வேண்டும்பிடாரி யகத்தில் வையே 87

உரை:

முதல் ஆண்டு, அலகன் என்ற நோய் தாக்கும். உடலின் நிறம் மாற, உடல் வாடும். வயிறு கழிதல், நடுக்கம் என்பன குறி குணங்களாகும்.

அகத்திரண்டாமாண்டு தனில்
அணுகி இருங்கே, சருவனென்பான்
பகைத்து வெதும்பு, எதிரெடுக்கும்
பலகாலமும் நீர் இறங்கி விடும்
வகுத்த மாவில், பாவை செய்து
வளமாம் பால் சோறாம் பருப்பு
தொகுத்த அப்பம். பொரி, பொரி நீர்
சுடலை தனில் மாலையிலேற்றே 88

உரை:

இரண்டாம் ஆண்டில், சருவன் என்ற நோய் தாக்கும், உடல்வாடும், பாலைக் கக்கும், பலமுறை சிறுநீர் பிரியும் என்பன குறி குணங்களாகும்.

*ஏற்றும் வேப்பின் இலை குமிழ்*
*இலையும் காய்ச்சிச்சலமெடுத்து*
*வாய்த்த குழவிதனைக்குளிக்க*
*வார்த்தால் தீரும். மூன்றா மாண்டில்*
*தேற்றும் சோமக் கன்னி யென்பாள்*
*சேர்த்து வயிறு கழிச்சலுடன்*
*ஊற்ற உடம்பை நடுக்கி, முலை*
*உண்ணாமல் தான் புரண்டிடுமே* 89

**உரை:**

இதற்கு மருத்துவம்: வேப்பிலை, குமிழ்மர இலை இவற்றைத்தண்ணீரில் போடவும். காய்ச்சிக்குளிக்கவும் மூன்றாம் ஆண்டு சோமக்கன்னி என்ற நோய் வரும். இதன் குறி குணங்கள்: வயிறு கழிதல், நடுக்குதல் பால் குடியாமை என்பனவாகும்.

*இடுவேன் சோறு, பருப்புச் சேர*
*நீதமாய் இந்தத்தயிர், பொரி, பொரிநீர்*
*ஆடு கத்தியினால் தூபமிட*
*அறிந்து தீபம், சந்தனமும்*
*நடு நாள் ஊரின் கிழக்கில் வைக்க*
*நடுக்கியோடும். நாலாம் ஆண்டில்*
*கடு சங்க பத்திரகாளி யென்பாள்*
*கலந்தால் தேகம் உணர்த்திடுமே.* 90

**உரை:**

நான்காம் ஆண்டு பத்திரகாளி என்ற நோய் வரும். இதன் குறி குணங்கள்: உடல் வாடும்.

உணர்த்தி பயந்து மையலாகி
எடுக்கக் கடிக்கும், பல்லதனை
நிணம் போல் வயிறு போகும்
விழி நேர் சுழலும், பலியதற்கு
இணங்கு மாவில் உருச்செய்து
இதமாம் பருப்புக் கருத்தடிசில்
அணங்கே, பொரியும் பொரிநீரும்
மாலங்காயும் காளியில்லே 91

உரை:

பயப்படும், அன்புடன் எடுக்க கடிக்கும், மாமிச நீர் போல் கழிதல் என்பனவாகும்.

இல்லா ஐந்தாம் ஆண்டதனில்
இருக்கும் வேண்டா இவுளி என்பாள்
நல்லாய் வெதும்பும், மார் கடிக்கும்
நலஞ்சேர் முலை உண்ணாது
பொல்லா வயிறு பேதிக்கும்
பொருமும், தேகம் உணர்த்திவிடும்
வல்லாத்தனத்தால் பலியிதற்கு
மாவிலைப் பாவைச் செம்பூவை 92

உரை:

ஐந்தாம் ஆண்டில் இவுளி என்ற நோய் தாக்கும். இதன் குறி குணங்கள்: உடல் வாடுதல், கடித்தல், பால் குடியாமை, வயிறு கழிதல், பொருமுதல், உடல் மெலிதல் என்பனவாகும்.

பூவுஞ் சூட்டிச் சந்தனமும்
பொரியும், பொரிநீர் ஓட்டப்பம்
ஆவின் பால் சேர், பருப்படிசி
அறி கெந்தியினால் வினால் தீப
மேவு மாலை தனில் அறி, அழுது கத்தும்
நித்தமும் உடம்பை வியர்த்து. வியர்த்துவிடும்
கூட்டி முலையுண்ணாது
குதித்து வெருவிக் கண் விழிக்கும்
நாட்டில் மருந்து செண்பகப்பூ
நலஞ்சேர் வசம்பு பெருங்காயம்
விட்டு மிளகு இவையரைத்து
மேலில் பூசு. பலி கேளே 93

**உரை:**

இதற்கு மருந்து, செண்பகப்பூ, வசம்பு, பெருங் காயம், மிளகு சம அளவு எடுத்துக் கொள்ள வேண்டும். மை போல அரைத்துமேலே தடவவும்.

கேளாய். பஞ்சவண்ண அடிசில்
கந்தி, தூப தீப முடன்
தூணம் பொரியும், பொரியுடனே
சூழ அகலில் இவை அமர்த்து
நானாயூரின் கிழக்கில் வைத்துத்
தருவேன், கோழிபலி கொடுத்தால்
வாளார் விழியாய், தீர்ந்துவிடும்
மத்தாம் ஆண்டில் வகைகேளே 94

**உரை:**

அடுத்த ஆண்டில் வரும் நோய்பற்றி கேட்பாயாக

வகையாம் ஏழில் எமதூதி என்பாள்
வந்து செவியை அடைக்கும்
பகையால் சுரமும், வைசூரியாய்
பகர் கொப்பளம் போல் காண்பிக்கும்
நகையாய் நெய்யும், தும்பைமலர்
நறும் தாழம்பூ, மஞ்சளுடன்
தொகையாய் அகலில் மூன்றாம் நாள்
சொல்லும் பிடாரி கோவிலிடே 95

உரை:

7-ஆம் ஆண்டில் எம தூதி என்ற நோய் தாக்கும். இதன் குறி குணங்கள்: சுரம், அம்மை நோய் போல கொப்புளங்கள் என்பனவாகும்.

இடமா எட்டாமாண்ட தனில்
எய்யும் திருதுமன் என்னும் பேய்தான்
அடவே நீரால் தள்ளி வைக்கும்
அத்தி முறித்தால் போல நடக்கும்
வடி மாவாலே, பாவை செய்து
வளர் நெய்சோறும், பாற்சோறும்
திடமாய் அகலில் வைத்தவள் பேர்
செப்பி, சந்தி தனில் போடே 96

உரை:

எட்டாம் ஆண்டில் திருதுமன் என்ற நோய் தாக்கும். இதன் குறி குணங்கள்: நீர்க்கோவை யானையைப் போல நாடி நடக்கும் என்பனவாகும்.

தனியே நலமாம் ஆண்டதனில்
　　தயங்கும் காளி என்பவள் தான்
நனியாய் முறுக்கும், விழித் தீண்டும்
　　நாடியாத்தான் எழுந்து, திரிக்கும்
இனிநற்சோறும், கத்தரிக்காய்
　　இனிதாய் சிவந்த, பாவை செய்து
கனிய கந்தம் அகலிலிட்டு
　　கடுமே, திமிர மரத்தடியே 97

உரை:

9-ஆம் ஆண்டில் காளி என்ற நோய் தாக்கும். குளிர் சுரம், உடலை முறுக்குதல், கீழே விழச் செய்தல், நாடியானது உயர்ந்து மாறுதல் என்ன குறி குணங்களாகும்.

அடியார் பத்தாமாண்டதனில்
　　அடரும் பலனகன் என்னும் பேய்தான்
தொடர்ந்து கை, கால் விரிக்கும்
　　சோம்பல் அருசி, நித்திரையாம்
படியுங் குறுவை நெய் சோறும்
　　பழமும் சிவந்ததயிர் இறைச்சியுடன்
அடருங் கரணை, மூலம் இவை
　　அகலில் வடக்குதிசை அமர்த்து 98

உரை:

10-ஆம் ஆண்டில் பலனகன் என்ற நோய் தாக்கும். இதன் குறி குணங்கள்: கை, காலை நீட்டுதல், சோம்பி இருத்தல், சுவையின்மை, உறங்குதல் என்பனவாகும்.

அமர்த்து மேகாதேசி ஆண்டில்
அணுகும் திருவி என்னும் பேய்தான்
நமன்போலக் காயும் கழிச்சலுண்டாம்
நடுக்கும், தயிரும் நல்லடிசில்
சமைத்த ஆட்டின் இறைச்சி இது
தானே அகலில் மாலையிலே
சுமையாம் குழந்தை முதுகுபுறம்
காட்டி வைக்கக் கழிந்திடுமே 99

**உரை:**

**11-ஆம் ஆண்டு திருவி என்ற நோய் தாக்கும். இதன் குறி குணங்கள்: உடல் சுடும், கழிச்சல் ஏற்படும், உடல் நடுங்குதல் என்பனவாகும்.**

கழித்த பன்னிரண்டாம் ஆண்டில்
கலக்கு அற்பசியாம் அலகை
பிழிந்து வெதும்பும், நற்சோறும்
பொரியா இறைச்சிக் கருவாடு
குழிந்த அகலில் மாலையிலே
குமரிக் காளி கோவிலில் இட்டால்
அழிந்து போலில் பதிமுணா
ஆண்டில் கலைதி என்னும் பேயே 110

**உரை:**

12-ஆம் ஆண்டில் அற்பசி என்ற நோய் தாக்கும் இதன் குறி குணங்கள். உடல் வாடுதல் என்பன வாகும்.

13-ஆம் ஆண்டில் கலைதி என்னும் நோய் தாக்கும்

*பேய்தான் சேர்ந்து கனாவாகப்*
*பிதற்றும், வெருவும் உடம்பு உலரும்*
*தாய் உடம்பு வெதும்பி விடும்*
*சொல்லுவேன் எண்ணைய் புண்ணாக்கு*
*தோயும் கருப்புக் கட்டியுடன்*
*துய்ய மேதித் தயிர்*
*காயும் சுடலை மாலை தனில்*
*காடி பூசை செய்து வையே* 101

**உரை:**

மேலும் தூக்கத்தில் வாய் பிதற்றல் உடல் உலர்தல், என்பனவாகும்.

---

ஏடுகள் மாறி இருந்ததால் விடுபட்டுப் போன பாடல்கள்.

பாலவாகடம் பாடல்கள் 113, 114, 125, 126

---

**ஊதுகாமாலை**

*கொள்ளவே பசிக்கும் உப்பும்*
*கொடும் சீதமாகப் போகும்*
*தள்ளவே மயக்கம் காதை*
*அடையற அடைக்கும் கணந்தான்*
*வெள்ளையாய் வெளுத்துக் காணும்*
*வெதும்பியே ஊதல் காணும்*
*உள்ளமே, இளைப்பாய்த் தோன்றும்*
*ஊது காமாலை என்னே* 113

**உரை:**

ஊது காமாலையின் குறி குணங்களாவன: பசித்தல், வயிறு உப்புதல், சளியாக மலத்தில் போதல், மயக்கம், காதடைத்தல், உடல் வெள்ளை நிறமாதல், நோதல், வீக்கம், உள்ளத்தில் சோர்வு என்பனவாகும்.

*மாலை சேர் முடக்தொத்தான் நீர்*
*வழுக்கை நீர் சுண்டி, சுக்கு*
*சால நீர்முள்ளி தானும்*
*சங்கொடு சங்கங்குப்பி*

---

113 பாலவாகடத்தில் பக்கம் 365-இல் பாடல் 8 ஆக உள்ளது.

*சூலமாம் கண்டங்காலி*
*கொடுத்திடு குடிநீராக*
*ஓலமிட்டலறியோடும்*
*ஊது காமாலையாமே* 114

**உரை:**

முடக்கொத்தான், நீர் வழுக்கை (பிரமி), நீர்ச் சுண்டி, சுக்கு, நீர்முள்ளி, சங்குப்பூ, சங்கங்குப்பி கண்டக்கத்தரி சம அளவு எடுக்கவும். நீர் விட்டு குடிநீரிட்டு அருந்தவும், இப்பொடியை எரித்த சாம்பலையும் கலந்து உட்கொள்ளவும்.

## கக்குவான்

*வார்செறி விலாவில், மார்பில்*
*வந்திடும் கோழை, நெஞ்சில்*
*சாரவே செனிப்புண்டாகி*
*சளியொடு புகைச்சலுண்டாம்*

---

114 பாலவாகடத்தில் பக்கம் 36௦-இல் பாடல் 10 ஆக உள்ளது.

இப்பாடலில் வரும் சங்கு என்பதற்கு பாலவாகடத்தில் மூலிகை கூறப்படவில்லை.

குறிப்பு: சுரசம் என்று கூறினாலும் குடிநீர் என்பதே சரியான பொருளாகும்.

*ஊறவே இருமலாகி*
*உண்டிடும் சோறு கக்கும்*
*காமைமாய் இளைக்கும் மேனி*
*கக்குவான் குணமிதாமே* 125

**உரை:**

விலா, மார்பு இவற்றில் கோழை, சளி, இருமல், உண்ணும் உணவை வெளியாக்கல், உடல் இளைத்தல் என்பன கக்குவானின் குறி குணங்களாகும்.

## இளம்பிள்ளை வாதம்

*தாம் இம்பூரல் தும்பைசா(று)*
*எடைக்கழற்சி வேரும்*
*தூமிரு காரந்தையோடும்*
*துளசி, தூதுவளை, அழிஞ்சி*
*நாம தேட்கொடுக்கி வட்ட*
*கிலுகிலுப்பையும் தண்ணீராக்கி*
*ஆமையின் பற்பம் கூட்டி*
*அதில் வசம்புடன் உள்ளூற்றே* 126

**உரை:**

இம்பூரல், தும்பை, கழற்சிவேர், கரந்தை தூது வளை, அழிஞ்சில், தேள் கொடுக்கு, வட்ட கிலு கிலுப்பை சம எடையில் எடுத்து முறைப்படி குடிநீர் செய்யவும். இக்குடிநீரில் ஆமையோடு பற்பத்தை வசம்புத் தூளுடன் தரவும்.

பகுதி — 2

# பொது விளக்கம்

## குழந்தைகளுக்கு வரும் நோய்கள்

### (ஆங்கில மருத்துவம்)

1. **பாரம்பரிய நோய்கள்**

   1. காக்கை வலிப்பு
   2. மூளை மந்தம்
   3. பிளந்த உதடு

2. **கருப்பையிலிருக்கும் போது வரும் நோய்கள்**

   1. மேக நோய்கள்

3. **பிறக்கும் போது ஏற்படும் நோய்கள்**

   1. தலை, முகம் காயமடைதல்

   மூச்சுத் திணறல்

   3. கண்நோய் (மேக நோயால்)

## 4. பிறந்த பின் ஏற்படும் நோய்கள்

### I. கருப்பையில் வரும் நோய்கள்

தாய்க்கு வரும் விடசன்னி, மேகநோய்,விடவாந்தி, சுரம்

அம்மை, இன்புளுயன்சா போன்ற தொற்று நோய்கள். கருப்பையிலிருந்து வரும் இரத்தப்போக்கு, தாய் அடிபடுதல் போன்ற விபத்துகள்.

### பிறவி மேகநோய் (குழந்தைக்கு)

இளைத்தல் (மேக நோயால்), தோலில் கொப்புளங்கள், மூக்கடைப்பு (மேக நோயால்) புண் (ஆசனவாய்) பல் நோய்

### II. பிறக்கும் போது ஏற்படும் நோய்கன்

1. வெளிர் வண்ண மூக்சு முட்டல்
2. கார்வண்ண முச்சு முட்டல்
3. தலையில் வீக்கம்
4. என்புகள் முறிதல்
5. இரத்தப் பெருக்கு
6. நரம்புகளில் காயம்

### III. பிறந்த குழந்தையிடம் வரும் நோய்கள்

1. ஆசனவாய் அடைத்திருத்தல்

2. சிறுநீர்ப்பாதை அடைப்பு

3. பிளந்த உதடு

**IV. பிறந்த பின்பு வரும் நோய்கள்**

1. கண்வலி Ophthalmia neonatorum

2. மஞ்சள் காமாலை

3. விட சன்னி

4. மலத்தில் இரத்தம் வருதல்

5. தோலில் இரத்தம் (ஹீமோபீலியா) வருதல்

6. மார்புக்காம்புகளில் வீக்கம்

7. தொப்புள் கொடியில் வீக்கம்

8. வாய்ப்புண்

9. அழுகும் கிரந்தி (Noma)

10. துத்திப்புண் (Thrush)

11. செரியாமை

    1. இரைப்பை தொடர்பானது
    2. ஈரல் தொடர்பானது
    3. குடல் தொடர்பானது

12. குடல் பூச்சிகள்

   1. நாடாப்பூச்சி
   2. நாக்குப் பூச்சி (Roundworms)
   3 கீரிப்பூச்சி

13 மலச்சிக்கல்

14. வயிற்று வலி

15. வாந்தி

1 . பேதி

   1. கடுமையான கழிச்சல்
   2. சாதாரணமான கழிச்சல்

17. பசியின்மை

18 இளைத்தல்

19. ஈரல் குலைக்கட்டி

**உணவுக் குறைபாட்டால் ஏற்படும் நோய்கள்**

1. ஸ்கர்வி  2. ரிக்கெட்ஸ்

**தொண்டை மூக்கு, நுரையீரல் தொடர்பானவை**

1. சளி  5. சதை வளர்ச்சி
2. காது வலி  6. ஒவ்வாமை
3. இருமல்  7. இரைப்பு
4. நிமோனியா  8 தோல் நோய்கள்

## தோல் நோய்களின் பிரிவுகள்

1. வேர்க்குரு
2. பூச்சிக்கடி
3. சிரங்கு
4. படர் தாமரை
5. கொப்புளங்கள்
6 அக்கி

## தொற்று நோய்கள்

1. அம்மை
2. டைபாய்டு
3. கக்குவான்
4. டிப்தீரியா
5. இளம்பிள்ளை வாதம்
6. சீத பேதி

## சில நோய்கள்

1. தூக்கமின்மை
2. தலைவலி
3. விக்கல்
4. நடக்கமுடியாமை

## நரம்புக் கோளாறுகள்

1. மாந்த இரைப்பு
2. கை கால்கள் இழுத்தல்
3. தலையாடுதல்
4. தலை மோதல்
5. பயந்த கோளாறு
6, வலிப்பு

## அடிப்படை

குழந்தை வைத்தியம்
Dr. எஸ். திரிபுரசுந்தரி எம்.பி.பி.எஸ்.,
இன்ப நிலையம் டிசம்பர் 1952

# செய்யுட் முதற் குறிப்பு

## அ

## வியாதிக் காண்டம்


| எண். | | பாடல் எண் |
|---|---|---|
| 1. | அன்னமே பரு முருக்கிலை ஆனவள்ளி | 2 |
| 2. | அமர்த்து புங்கொடு கிரந்தி நாயகம் | 20 |
| 3. | அரிவையே உடல்கள் எங்கும் வீங்குமிசை | 31 |
| 4. | அறியும் இந்தவிதம் எல்லாம் மிகுந்து கரப்பான் | 33 |
| 5. | அறியு மேனி உத்தாமணி அகத்தி சுர்வேளை | 37 |
| 6. | அறிந்த எலிச் செவிகடுக்காயான | 118 |
| 7. | அறிவாய் பஞ்ச திரவியமும் அரியான திப்பிலியும் | 105 |
| 8. | அருந்துமெய் இளைப்பிருமல் அடிக்கடி சுரமும் | 68 |
| 9. | அரைக்கும் ஆசனத்தில் மெத்த அரிப்புண்டாம் | 117 |

10. அயர்ச்சி காலும் கையும் இழுத்திடும்
இசிப்பு 54

11. அணங்கிடு புகை கால் முகமாரணன்
முக்கு 60

12. அகண்ட வாந்தியும் கழிச்சலும்
சுரங்களாதி 50

13. அன்ன சுக்கு சிற்றரத்தை வெற்றிலை 47

14. அறுதியாக மெய்யாத் திந்தம்
வேர்வைகள் மிகுந்து 40

## அலகைக் காண்டம்

15. அறையக் கேள் இரண்டாம் நாள் 18

16. அறைவேன் நெய்யில் மாப்பிசைந்து 79

17. அகன்று முவெட்டில் இரத்தம் எனும் 51

18. அகத்திரண்டாம் ஆண்டு தனில் அணுகி 88

19. அலகை செய்யும் குணங்கேளீர், வயிறு 46

20. அடியார் பத்த்ரம் ஆண்டதனில் அடரும் 98

21. அமர்த்து மேகாதேசி ஆண்டில் அமரும் 99

ஆ

## கர்ப்ப உற்பத்திக் காண்டம்

22 ஆகும் நவ்வல் அரம்பைக் கனியோடு 11

## வியாதிக் காண்டம்

23, ஆரணத்தில் உரைத்தனன் வியாதியும் அதற்கு 70

24. ஆகுமே வயிறுபேதி அடிவயிற்றில் புரண்டல் 115

## அலகைக் காண்டம்

25 ஆலை சர்க்கரை நாலெட்டு நீட்கம் 41

இ

## மகவிலாக் காண்டம்

26, இன்புறு மாமலர் தானதில் வாய் உரின் 3

27. இப்படிப் பூவினில் சீதளமே உரில் 5

ஈ

## வியாதிக் காண்டம்

28. ஈசையும் நெஞ்சுகள் அடைக்குள்ளே 13

29. இசையும் சுக்கு, நீர்முள்ளி பூநாகம் எடுத்து 51

30. இருத்தொரு முக்குகணத்தின் இயல்பைக் கேளாய் 83

31, இருத்தொரு அக்கரமாம் கணத்தின் பேதம் 95

32. இப்படியே பிதற்றும் தலை வலிக்கும் பாங்கா 106

33. இனிதான நீர்க் கணந்தான் கண்டுதோனால்73

34. இதுவே புரசு பாவட்டை இலையின் கள்ளி 103

35. இயம்புமாய்ப்பாடி தன்னில் இனிய நல் யசோதை 131

36. இடைசிறுத்தவன்முலை பெருத்த மொழி 17

## அல்கைக் காண்டம்

37. இளங்கொடி எய்தினால் (மகலிலா) 11

38. இயம்பக்கேள், தாமரை வளைய அல்லி 4

39. இடுபலா இலையும் அத்திப்பட்டை சிறு 14

40 இடுவேன் சோறு பருப்புச் சேர நிதமாய் 90

41. இடுமே வயிறு பொருமிப்பால் எடுக்கும் 78

42. இரண்டுசேல் விழியா, இலவங்கப் பட்டை 39

43. இடமா எட்டாமாண்ட தனில் எய்யும் 96

44. இல்லா ஐந்தாம் ஆண்டதனில் இருக்கும் 92

உ

## வாலை வாகடம்

45. உத்தமத்தில் உயர்ந்த செவ்வாய் பின்னே 5

46. உண்டதால் வரும் காப்பத்தி(ல்) நோய்கள் 8

## மகவிலாக் காண்டம்

47. உண்டாமே திரண்டிரு நாளில் ஒண்கணவன் 14

48. உற்றதோர் மலக் கட்டுதல் உண்மையாய் 15

## வியாதிக் காண்டம்

49. உள்ளும் மேலும் நளிர்காய்ச்சலாகி 15

50. உணர்ந்து சங்கி னொடு குப்பி சின்னி 32

51. உணர்ந்த கடுகு ரோகணியும் உத்தாமணி 107

52. உடன் உத்தாமணி சுக்குடன் வசம்புஉள்ளி 49

53. உடன் ஆத்திப்பட்டை அதன் பூவும் கொண்டு 62

54. உண்டபால் எதிரெடுக்கும் உடம்புபல 100

55. உகந்தமெய் முகமினுப்பாஉயர் கரமும் 64

56. உலகினில் கருவில் தானும் உதித்த 132

## அலகைக் காண்டம்

57. உள்ளி சேர்த்ததில் பாதியெடை கருப்பட்டி 16

58. உண்ண இரு நாலு திங்கள் முண்டி 9

59. உணர்த்தி பயந்து மையாது எடுக்க 91

## ஊ

## வியாதிக்காண்டம்

60. ஊதிய உழலையதாக, உடல் வலி இடுப்பு 127

## எ

## மகவிலாக் காண்டம்

61. எண்ணையில் கூட்டி, அரைத்தது பஞ்சினில் 15

62. என்பு தனை மிதித்திடில் ஏவல் விட் 17

## வாலை வாகடம்

63. என்றபோது மகிழ்ந்து களிப்பினால் 12

## வியாதிக் காண்டம்

64. எண்ணுகின்ற தொரு கீலிலே வலிகள் 27

65. எண்ணும் சாணாக்கி, சாரணை
இந்துப்பு 45

66. எண்ணு ஒன்றிரண்டு உண்டு ஏழுடனே

67. என்ற சிற்றரத்தை சுக்கு இருந்து விட்ணு 120

68. என்றொரு கழற்சி நொச்சி
இலைக்கள்ளி 128

69. எடுத்த கணைப்பூண்டு விட்ணு காந்தி 90

70. என்று ஒன்றிரண்டு உண்டு ஏழுடனே 119

## அலகைக் காண்டம்

71. எண்ணிய மருந்து எடுத் தனித் தனியே 40

72. எரிந்த இருபத்தொன்பதாம் நாள் கூழ 56

ஏ

## மகவிலாக் காண்டம்

73. ஏந்திய காக்கரட்டான் மலர்க் கோட்டம் 16

## வியாதிக் காண்டம்

74. ஏகும் வாந்தியும் பிதற்றலும் வயிறு வலி 38

## அலகைக் காண்டம்

75. ஏகுமே பதினேழில் மண்டைப் பேய் எய்யும் 44

76. ஏற்றும் வேப்பிலைக் குமிழ இலையும் 89

77. ஏற்றிய நவமாம் திங்கள் ஏற 68

ஓ

## மகவிலாக்காண்டம்

78. ஓதியா மாமக வல்லது, நீதி உரைத்திட 1

## வியாதிக்காண்டம்

79. ஓது சங்கினுட குப்பி, பூவரசு, ஊழலாற்றி 30

80. ஓதியதோர் பிள்ளைக்குக் கணந்தான் கண்டால் 71

81. ஓடுகின்ற வரட்கணந்தான் மிகுந்த தாரை 75

82. ஓடுமண்டையிலே புண்ணாகி, உயர்காதில் 25

அலகைக் காண்டம்

83. ஓடிய பத்தோடன்றி உத்திரமாகாளி 70

க

கர்ப்ப உற்பத்திக் காண்டம்

84 கரு உற்றிடு நாள் முதல் கன்னியாம் 1

வியாதிக் காண்டம்

85. கருத்தில் எண்ணுகின்ற பேர் மருந்தில் 28

86. கண்ணு சுக்கு சிற்றரத்தையும் விட்ணு 63

87. கண்ணுடன் சிறுநாக்கு கணக்கவே 111

88. கணமென்றலிடமக்சணம் குணத்தை 85

89. கண்டங் காட்டத்திப்பூ தும்பை விட்ணு 61

90. கனவசம்பு உள்ளிச் சாரணை கடிய 69

அலகைக் காண்டம்

91. கர்ப்பந்தான் தோன்றிய தோர் திங்கள் 1

92. கழற்றுவேன் வெகுளி யென்ற பேய் 4

93. கண்ணியே முத நாளில் கஞ்சகை 17

94. கண்டு கொள் எட்டாம் நாள் திண்மை 23

95. கண்ட இருபத்தி ஆறில் சமபார அந்தி 53

96. கண்டிர் பத்தாம் கீழ் அதனின் 83

97. கருத்தில் கொள் ஒன்பதாம் நாள் 24

98. கழிந்த பன்னிரண்டாம் ஆண்டில் 100


கா

மகளிலாக் காண்டம்


99. காரிகையின் குறி, பூவினிலே இரும் 7


வியாதிக் காண்டம்


100 காய் இவையெல்லாம் அரைத்திடு 20

101. காய்ச்சலொடு கடுப்பாகி ஊதி 23

102. கால் கரங்களொடு சந்து வலி 21

103. காணு கின்ற நாயிரஞ்சி தூதளை 80


அலகைக் காண்டம்


104. காட்டுகின்றேன் பதினைந்தில் அலகன் 31

105. காணவே ஐந்தாம் மாதம் கலங்கிடும் 62

கு

வியாதிக் காண்டம்

106. குலையான எரி கணத்தின் குணத்தைச் சொல் 77

107 குறிகேள் திப்பிலி, வசம்பு உள்ளிக் கூட்டும் 53

அலைகைக் காண்டம்

108. குறியாக மூவேழில் அணந்திப் பேய் குணம் 48

109. குணத்தோடு கீழாநெல்லி கொடி பொற்றா 112

110 குடிக்கவே அஞ்சு திங்கள் பூதகாளிப்பேய் 6

111. குணமது நுணா நொச்சி. குப்பையின் மேனி 41

கூ

வாலை வாகடம்

112. கூறும் வையகந் தன்னிலே குழந்தைகள் 3

மகவிலாக் காண்டம்

113. கூறியதோர் பருத்திப் பருப்போடு இனிய 13

வியாதிக் காண்டம்

114. கூறும் வேளைக்கரு நொச்சி பூவரசு 26

115. கூட்டம் கண்டு கண்டு எழுந்திருக்கும் 123

அலகைக் காண்டம்

116. கூட்டும் வகையதாய் வழக்கு வேர்க் கொம்பு 15

117. கூவவே பத்தாம் நாள் கனவு கண்டி என்னும் 25

கே

வாலை வாகடம்

118. கேள் சுரோணிதம் சுக்கிலம் கூட்டியே

அலகைக் காண்டம்

119. கேளாய் பஞ்சவண்ண அடிசில் 94

கொ

மகவிலாக் காண்டம்

120. கொள்ளும் ஐயபதார்த்தம் 10

121. கொள்ளவே செம்பிலி தகர்கோழிமீன் 7

வியாதிக் காண்டம்

122. கொடுமையான சிரனோவினோடுசொறி 11

123. கொடிதான அந்தகனாம் கணத்தை 91

124. கொன்ன முருங்கை மாவிலங்கை 109

125. கொள்ளவே பசிக்கும் உப்பும் கொடுஞ் 113

126. கொள்ளவே மூலத்தின் கணத்தைச் சொல்வேன் 81

அலகைக் காண்டம்

127. கொள்ளவே இரண்டுதிங்கள் தன்னிறம் 2

128. கொள்ளவே தட்டினாலே கொழுக்கட்டை 66

129. கொண்டு தானுச்சிப் போதில் 72

ச

வியாதிக் காண்டம்

130. சன்ன வெற்றிலை சுக்கு ஓமம் சாற்று 1.4

131. சன்னி என்பதெல்லாம் 110

அலகைக் காண்டம்

132. சகசமாய் ஓமத்தை அரைத்துக்கொண்டு 26

133. சந்தி செய் இரண்டாம் திங்கள் 58

சா

மகவிலாக் காண்டம்

134. சாற்றிட உட்டினம் நீங்கும் இடுப்பு காண் 18

வியாதிக் காண்டம்

135. சாற்று முசு முசுக்கை கண்டங்கத்தரி 74

136. சாந்தி யென்ற தேற்றான் வேரும் 94

சீ

வாலை வாகடம்

137. சீர் நிறைந்த கருணையின் தேவனே 2

சு

வியாதிக் காண்டம்

138. சுரமும் வலிப்பும் குரல்கம்மும் சூழ்ந்த 108

139. சுரமே பிழிதும்பை உத்தாமணி துளசி 65

சூ

அலகைக் காண்டம்

140. சூட்டியே தெற்கு திக்கில் 60

செ

மகவிலாக் காண்டம்

141. செகத்தினில் இவ்வகை பலபல விதமாம் 22

### கர்ப்ப உற்பத்திக்காண்டம்

142. செனிக்கும் பேதிகளாம் வகைசெப்பி 12

### வியாதிக் காண்டம்

143. செய்ய ஊசியும் வெதுப்பி நீள் பெரிய 6
144. செய்யப்பூவரசு செங்கதாரி வேம்பாடம் 24
145. செய்வாய் வேம்பு மாவிலங்கை சிவதை 101
146. செறியநீர் முள்ளிக்கிராந்தி நாயகம் 22
147. செப்பு வெற்றிலை முசுருடன் முட்டை சிற்றரத்தை 59
148. செய்து கொடுக்கத்தீரும் வியாதி 42

### அலகைக் காண்டம்

149. செப்பிய திங்கள் ஒன்றில் அரளி 73
150. செய்யதோர் மூன்றாம் திங்கள் 59
151. செலுத்தும் மஞ்சள் மாமுனிவன் 77

## சே

### வாலை வாகடம்

152. சேர்ந்தி டென்று கிரித்தும் மகிழ்ந்தும் தான் 6

### கர்ப்ப உற்பத்திக் காண்டம்

153. சேருகின்ற கறிவகை சேர்நிலம் 19

154. சேரும் பெண்ணளிங் 86

அலகைக் காண்டம்

155. சேருமே முட்டை காண்ட 67

156. சேர்ந்து கணிந்துமூர்ச்சை 80

சொ

அலகைக் காண்டம்

157. சொல்லவே எம் பெருமான் கோவில் 7

வியாதிக் காண்டம்

158. சொல்லுகின்றேன் சிறு கீரை
பொன்னாங்காணி 98

சோ

கர்ப்ப உற்பத்திக் காண்டம்

159. சோறும் பால் பழஞ்சோறுமே 16

அலகைக் காண்டம்

160. சோறு செய் பாகற் கீரை 63

த

வியாதிக் காண்டம்

161. தனியே நவமாம் ஆண்டதனில்

162. தங்குமாதி நன்னாரி யொடு 14

அலகைக் காண்டம்


163. தயங்கிய தோர் பன்னிரண்டாம் நாளில் 28

164. தகவிருவகையும் சரி நான்கு நீட்கம் 38

165. தங்கிய சீநீர் சன்னிவாதங்கம் 43

166. தனியே நலமாம் ஆண்டதனில் 97


தா

வியாதிக் காண்டம்


167. தானென்ற நிலக்கடம்பு நொச்சி 86

168 தாம் இம்பூரல் தும்பை சாறெடை 126

169. தாழ்ந்து வரு மந்தார கணத்தை 89


அலகைக் காண்டம்


170. தானே தார இலுப்பை சதகுப்பையோடு 35

171. தானிதுக்கு மருந்துகேள், அத்திதோறும் 11

172. தானது மாவால் பாவை இரண்டு செய் 61


தி

அலகைக் காண்டம்


173. திசையில் உத்திராபதிபேய் 65

174. திண்ண முதலாம் ஆண்டதனில் 87

தீ

கர்ப்ப உற்பத்தி காண்டம்

175. தீண்ட வொண்ணா இவை தீங்கருவுக்கு 4

அலகைக் காண்டம்

176. தீர்ந்து போம் ஆறாம் நாள் அஞ்சி 21

177. தீரும் தான் ஏழாம் நாள் செவ்வாய் 22

தெ

வியாதிக் காண்டம்

178. தெளிக்கும் வீங்கும் உடல் எங்குமே

179. தெளிந்த தாகமும் சுரமுடன் பிதற்றலும் 66

அலகைக் காண்டம்

180. தெரிந்த மூன்றாம் திங்கள் தனில் 75

பால வாகடம்

181. தெறிக்கும் வீங்குழுடல் எங்குமே திமிர்

அலகைக் காண்டம்

182. தெளிந்த தோர் ஒன்றாம் திங்கள் 57

## தே

### மகவிலாக் காண்டம்

183. தேன் மொழியே உணர் போதினிலே தொடை 17

## தொ

### வியாதிக் கண்டாம்

184. தொலைவில் தாகடும் மயக்கமும் 58

185. தொகை வில்லா வயிறு உப்புச்சுரம் 121

186. தொடு மெய் தோலும் தளர்ந்து உரு 42

### அலகைக் காண்டம்

187. தொலையவே பத்தாம் திங்கள் 69

## தோ

### கர்ப்ப உற்பத்திக் காண்டம்

188. தோன்றும் ஐயபதார்த்தம் தண்ணீர்ப்பகை

## தை

### மகவிலாக் காண்டம்

189. தையலே எள்ளு சர்க்கரை கொள்ளு நீர் 3

## ப

### கர்ப்ப உற்பத்திக் காண்டம்

189. பலமதாம் கட்டு பால் அவரைப்
பீர்க்கங்காய் 6

### வியாதிக் காண்டம்

190. பண்ணு பூவரசம்பால் கறுப்பு நொச்சி 8

191. பறந்தே மெய்யினில் வெப்புடன்
தூக்கமும் 46

192. பறந்த முத்தக் காசுடன் மஞ்சள் பச்சை 102

193. பற்றுகின்ற நீலி, வரப் பூலா வோடு 92

### அல்கைக் காண்டம்

194. பறக்குமே ஈரெட்டில் ஐந்து வகை 33

195. பறந்த பதினாலாம் திங்கள் தனில் 76

196. பலம் தானிச பந்திரியுடனே 37

## பா

### வியாதிக் காண்டம்

197. பார் செனித்தவுடனே குழந்தை
குரலின்றி 1

198. பார்த்தால் அலகை சேரும் என்று முன் 130

199. பானங் கொடிய திருகு கள்ளியோடு 16

அலகைக் காண்டம்

200. பார் செனித் தொரு நாழிகையில் சிறு 12

பி

வியாதிக் காண்டம்

201. பிடிக்குள்ளே மிக அடங்கிடாமல் இள 5

202. பிள்ளை நோய் அனந்த மூன்று பெருகிய 129

அலகைக் காண்டம்

203. பிரிந்த இருபத்தைஞ்சு இரட்சகன் 52

பு

வியாதிக் காண்டம்

204. புகலுகின்ற கணத்து நிதானந்தான் சொல் 99

205. புகலுகிறேன் செண்பகமோடு ஏலம் சுக்கு 96

206. புகட்டு நெய்யுடன் நல்லெண்ணெய் 4

போ

அலகைக் காண்டம்

207. போடுமே பதினோராம் மாதம் 84

208. போகுமே மூன்றாம் நாள் வறளைப் பேய்தான் 3

209. போடவே பதிமூன்றாம் நாளில் வந்து 29

210. போது பதினாலாம் நாள் 30

பூ

வியாதிக் காண்டம்

211. பூசலாய் சுரமடித்து உடல் கரைந்து போம் 56

212. பூச்சு மாம்பழத்தின் எண்ணெய் புளி
யவாசார 116

அலகைக் காண்டம்

213. பூவும் சூட்டிச் சந்தனமும் பொரியும் 93

பெ

கர்ப்ப உற்பத்திக் காண்டம்

214. பெருகும் கொ... பிருங்கு பெருங்கம்பு 8

போ

வியாதிக் காண்டம்

215. போகுமே வயிறு பாலெண 44

216. போமென்ற ஆமகண 87

பே

அலகைக் காண்டம்

217. பேய் தான் சேர்ந்துக் கனவாகப்
பிதற்றும் 101

## போ

### வியாதிக் காண்டம்


218. போகுமே வயிறு பாலெனக் கழிந்திடும் பொருமும் 44

219. போமென்ற ஆம கண குணத்தைக் கேளாய் 87


### அலகைக் காண்டம்


220. போகுமே மூன்றாம் திங்கள் வரளைப் பேய் 3

721. போடும் பதினோரம் மாதம் 84

222. போது பதினாலாம் நாள் செம்மண்டை 30


## ம

### மகவிலாக் காண்டம்


223. மங்கையராகிலும் ஆடவராகிலும் மாவினையால் 10


### வியாதிக் காண்டம்


224. மங்கை கீல்வலிகள் கள்ளிப் பூவென 29

225. மருந்துண்டுநீகருநொச்சி யொடு நிதம்வளர் 12

22 . மயக்கும் தும்பையும் வேளையும் உத்தாமணி 35

அலகைக் காண்டம்

227. மருந்துகேள். கோட்டம் வல்லிருசீரகம் 34

மா

மகவிலாக் காண்டம்

228. மாது நல்லாயிது மந்திர செப
தபம்வைத்திட 21

வியாதிக் காண்டம்

229. மாறு மாறென வடித்த வாயென உடற்
குள்ளே 19

230. மாந்தம் என்பது கண்டிடில் வயிறுகள்
உப்பி 34

231. மாது சுக்கு சிற்றரத்தை வெள்ளுள்ளி 55

232. மாதேகேள் குண்டியக்கர குணத்தின் 97

233. மாலை சேர் முடக் கொத்தான் நீர் 114

234. மானே கேள் சடாமாஞ்சில் வேர்க்கொம்பு 43

அலகைக் காண்டம்

235. மாதே கேள் இருபத்தி இரண்டாம் நாள் 49

236. மால் சிறந்த முவொன்பான் நாளில் 54

## மி

### வாலைக் காண்டம்

237. மின்னு நூண்ணிடை மென் கொடி
வஞ்சியே 9

### கார்ப்ப உற்பத்திக் காண்டம்

238 மிகுந்த வாளை விராட்டு மீன் கெண்டை
மீன் 9

239. மிஞ்சுகின்ற அந்தி வேளையில் 18

## மு

### கர்ப்ப உற்பத்திக் காண்டம்

240. முளைத்த பின் அன்னை முதிர்ந்தோனாய் 5

241. முற்றுகின்ற பழத்தின் விரையோடு 13

### வியாதிக் காண்டம்

242. முன் உத்தாமணி சுக்குதிப்பிலி 57

243. முதிர் கொட்டாவியும் தாகமும் உடம்
பெங்கும் வலியும் 26

அலகைக் காண்டம்

244. முறுக்கி மெய் கறுக்கும் காயம் 64

மூ

வியாதிக் காண்டம்

245. முட்டு சந்துகள் தலைவலி வியர்வை கொட்டாவி 36

246. முட்டுவாய் வசை பத்திரி கழுதைலத்தி 18

மெ

வாலைக் காண்டம்

247. மெய்யதாய் நின்ற வேத முதற் பொருள் 10

மகலிலாக் காண்டம்

248. மெல்லிதழ் பூவினில் வல்வலி உட்புண 4

வியாதிக் காண்டம்

249. மெய் கொள்பால் பாலாய் கழிந்திடும் 48

250. மெலிந்து வரும் அழிக்கணத்தின் பெருமை 79

மே

மகலிலாக் காண்டம்

251. மேலினி மங்கையர் மாதலிடாய் எனும் விலகிய 12

வியாதிக் காண்டம்

252. மேலும் நெஞ்சுகள் அடைத்து வீங்கி
உயர் 7

253. மேவு மாவிலங்கைத் தோல் இலைக்கள்ளி 10

254. மேனி உப்பிரண்டுமே கசக்கிக் கோடக
சாற்றில் 67

ந

வாலைக் காண்டம்

255. நண்பனே குழந்தைப்பிணி நாடியே 11

வியாதிக் காண்டம்

256. நயமான காட்டுமல்லி கடுக்காயோடு நல்ல 88

அல்கைக் காண்டம்

257 நடக்கும் இருபது நாளில் சனி என்னும் 47

258. நல்லாய் இரண்டில் ஓதிய வகை 74

நா

வியாதிக் காண்டம்

259. நாடியே சுரமடித்து மெய் வெளுத்து 52

260. நாட்டு நிலக் கடம்பு குட்டி விளா 76

அலகைக் காண்டம்

261. நாட்டவே பதினெட்டில் தேனாக்கி 45

நி

வியாதிக் காண்டம்

262. நின்ற வயிறு பொருமிப் போம் நெற்றி நரம்பு 105

அலகைக் காண்டம்

263, நிபமதாய் இருபத்தி ஏழு நாள் தான் 10

நீ

264. நீயறி மாமலர் தானதில் வாய் உரின் 2

நூ

265. நூலிடையாள் குறியா நிறமதாகவும் 8

வ

கர்ப்ப உற்பத்திக் காண்டம்

266. வளரும் கர்ப்பத்தில் வாய்த்த 14

அலகைக் காண்டம்

267. வழக்கமுடன் இருபத்து மூன்றாம் நாளில்

268. வகுக்கிறேன் ஆழாக்கரிசி கண்டு சீனி 5

269. வகை செல்லியத் தோடு வளர் திப்பிலி 36

270. வகையாம் ஏழில் எமதூதி என்பார் 9

271. வளங்கள் பதினொன்றாம் நாள்கவடி 27

272. வந்து பலமாம் விதங்கள் செய்யும் 81

273. வந்து பலமாம் லிதங்கள் செய்யும் 82

வா

மகவிலாக் காண்டம்

274 வானநீ யோனியிலே மலர் மீதினில் இன்பம் 6

வியாதிக் காண்டம்

275 வார்த்தையும் குன்றி மெத்தவே அமுது 33

276. வாது சிற்றரத்தை திப்பிலி வளைந்த பேய்மிரட்டி 122

வா

277. வார் செறி விலாவில் மார்பில் வந்திடும் கோழை 125

278. வாறு கோரோசனை மூன்று நீட்கம் 78

279. வாரான கணச்சுரந்தான் பெருமை மெத்த 93

அலகைக் காண்டம்

280. வாய் இருவத் தெட்டினிலே முகத்தீயன்
என்னும் 55

281 வாங்கும் அஞ்சாம் நாள் தனிலே 20

வி

வாலைக் காண்டம்

282. விளைந்த பேய்கள் புள்தோடம்
மெய்யிலே 4

கர்ப்ப உற்பத்திக் காண்டம்

283. வியம்புகிறேன் திங்கள் மூன்றினில்
வெவ்வியே 2

வியாதிக் காண்டம்

284. விடத்தின் நேர் விழியாய் சுக்கு வசம்பு
வெள்ளுள்ளி 39

285. வித்தையுடன் முக்கரட்டையூர்னு
நாவுங்கள் 84

அலகைக் காண்டம்

2.6. விளம்புகிறேன் நிற்குதீ என்ற வகை
சேரும் 8

வெ

வியாதிக் காண்டம்

287. வெளுத்தொரு பருத்தி வித்து பொடே
தலை 72

### வே

#### மகவிலாக் காண்டம்

288. வேதன் விதித்த இலிங்கமும் நீள
மிகுந்திடில் 9

### வை

#### மகவிலாக் காண்டம்

289. வைத்திடவே சதை தீர்ந்திடவும்
பெண்ணே 15

#### அலகைக் காண்டம்

290. வைந்த ஈறாறு திங்கள் மருவுசேர் 71

291. வைப்பீர் பன்னிரண்டாம் மாதம் 85

292. வைக்கவே நாலா நாள் கோமண்டி 19

#### வாலைக் காண்டம்

293. வையகந்தன்னில் வாலையின் வாகடம் 1

# மகளிர் மருத்துவம்

**பூப்புக் கோளாறுகள்**

1. போலிச் சூதகத்தடை

2. மெய்ச் சூதகத்தடை

   அ) மங்கைப் பருவத்திற்கு முன்

   ஆ) சூல் காலங்களில்

   இ) பாலூட்டும் காலங்களில்

   ஈ) பூப்பு முடிவுக்குப்பின்

3. மெய்ச் சூதகத்தடை

   அ) பிறவிக் குறை

   ஆ) உள்ளிடை சுரப்பிக் கோளாறுகள்

   இ) பிறப்பு உறுப்புகளின் அழிவுகள்

1. சிறப்பு நோய்கள் 3. எக்ஸ்ரே கிரணங்கள்

2. அறுவை 4. பொது நோய்கள்

(மகளிர் மருத்துவம் பக்கம் 31 பு மா. வேணு கோபால், தமிழ்நாடு அரசு சித்த மருத்துவ வாரியம், 1984)

**பெரும்பாடு**

1. சாதாரண பெரும்பாடு
2. அசாதாரண பெரும்பாடு
3. ஒழுங்கற்ற பெரும்பாடு
    1. வாதப் பெரும்பாடு
    2. பித்தப் பெரும்படடு
    3. சேட்மப் பெரும்பாடு
4. தொந்தப் பெரும்பாடு (யூகிமுனிவர்)

**மலடு**

1) சுத்தமலடு 3) காகமலடு

2) கதலிமலடு 4) கன்மமலடு

**யோனிக்கசிவு**

1. சீழ் கலந்த மஞ்சள் நிறக்கசிவு
2. சளி கலத்த மஞ்சள் நிறக்கசிவு
3. மிகுவெள்ளை யோனிக்கசிவு
4. குருதிக் கலப்புற்ற கசிவு

**தாபிதம்**

1. அகல் தாபிதம்
2. யோனித்தாபிதம்

**பெண்குறி ரோகப்படலம்**

1. வாத யோனி குணம்
2. பித்த யோனி குணம்
3. கப யோனி குணம்
4. குருதி யோனி குணம்
5. வலி யோனி குணம்
6. குருதி யோனி குணம்
7. கொதிப்பு யோனி குணம்
8. சூலை யோனி குணம்
9. சுட்க யோனி குணம்
10. கோழை யோனி குணம்
11. சிவப்பு யோனி குணம்
12. வடி யோனி குணம்
13. மகா யோனி குணம்

14. நபோஜக யோனி குணம்

15. அதிசரண யோனி குணம்

16. தூலித யோனி குணம்

17. பூப்புகால யோனி குணம்

18. கிருமி யோனி குணம்

19. தாமரக் காய் யோனி குணம்

10. விபரீத யோனி குணம்

(யூகிமுனி - மகளிர் மருத்துவம். பு.மா. வேணு கோபால், சித்த மருத்துவ வாரியம், 1984).

**சூலை**

1. நிதம்ப சூலை

2. கர்ப்ப சூலை

3. தூர சூலை

4. கர்ப்பக் கிராணி

5. சூல் மகோதரம்

6. மாமிச மகோதரம்

**கழலைகள்**

1. கருப்பைதசைக் கழலை
2. சினைப்பை கழலை
3. காம்புக் கழலை

## கரு உற்பத்தி

1-ஆம் நாள் — கடுகு போல் இருத்தல்

2-ஆம் நாள் — கொத்தமல்லி போல் இருத்தல்

3-ஆம் நாள் — மிளகு போல் இருத்தல்

4-ஆம் நாள் — அவரை போல் இருத்தல்

5-ஆம் நாள் — குமிழி போல் இருத்தல்

6-ஆம் நாள் — நெல்லி போல் இருத்தல்

7-ஆம் நாள் — புன்னை போல் இருத்தல்

8-ஆம் நாள் — வண்ணம் உண்டாதல்

9-ஆம் நாள் — காக்கை முட்டைபோல்இருத்தல்

10முதல் 15வரை — கோழி முட்டை போல் இருத்தல்

1-ஆம் மாதம் — தலை உண்டதால்

2-ஆம் மாதம் — கழுத்து, முதுகு உண்டாதல்

3-ஆம் மாதம் — இடுப்பு, கால், கை உண்டாதல்

4-ஆம் மாதம் — வாய், நாக்கு, மூக்கு, உண்டாதல்

5-ஆம் மாதம் — செவி உண்டாதல்

6-ஆம் மாதம் — மலசல துளைகள் நகங்கள்

7-ஆம் மாதம் — நரம்புகள் முழுமையடைதல்

8-ஆம் மாதம் — மயிர் உண்டதால்

9-ஆம் மாதம் — உயிர் உண்டதால்

10-ஆம் மாதம் — குழந்தை பிறத்தல்

(அடிப்படை - அகத்தியர் வல்லாதி 600)

## " பிள்ளைப்பிணி வாகடத்தில் " உள்ள பிணிகள்

| | | நாள் | மாதம் | ஆண்டு |
|---|---|---|---|---|
| 1. | கண்டி | முதல் நாள் | முதல் மாதம் | முதல் ஆண்டு |
| 2. | துடரி | 2 நாள் | 2 மாதம் | 2 ஆண்டு |
| 3. | பேனாக்காடி | 3 நாள் | 3 மாதம் | 3 ஆண்டு |
| 4. | மாமுனி | 4 நாள் | 4 மாதம் | 4 ஆண்டு |
| 5. | மாமுண்டி | 5 நாள் | 5 மாதம் | 5 ஆண்டு |
| 6. | கொடி | 6 நாள் | 6 மாதம் | 6 ஆண்டு |
| 7. | எரிண்டி | 7 நாள் | 7 மாதம் | 7 ஆண்டு |
| 8. | பிரங்காள முனி | 8 நாள் | 8 மாதம் | 8 ஆண்டு |
| 9. | மாகாளி | 9 நாள் | 9 மாதம் | 9 ஆண்டு |
| 10. | அர்த்த நாரி | 10 நாள் | 10 மாதம் | 10 ஆண்டு |
| 11. | கண்டி | 11 நாள் | 11 மாதம் | 11 ஆண்டு |
| 12. | அக்கினு | 12 நாள் | 12 மாதம் | 12 ஆண்டு |

**அடிப்படை நூல் :** பிள்ளைப்பிணி வாகடம்

**எம். துரைசாமி அய்யங்கார்**

கீழ்த்திசை சுவடி நூலகம், சென்னை 1952

## குழந்தை வைத்தியத்தில் உள்ள பிணிகள்

| | | நாள் | மாதம் | ஆண்டு |
|---|---|---|---|---|
| 1. | மோகனாங்கி | முதல் நாள் | முதல் மாதம் | முதல் ஆண்டு |
| 2. | வைத்திநீலகண்டி | 2 நாள் | 2 மாதம் | 2 ஆண்டு |
| 3. | விரோதன சன்னி | 3 நாள் | 3 மாதம் | 3 ஆண்டு |
| 4. | உத்திர காலாக்கினி பைரவி | 4 நாள் | 4 மாதம் | 4 ஆண்டு |
| 6. | ஆகாச பாதிர சின்னு | 5 நாள் | 5 மாதம் | 5 ஆண்டு |
| 6. | வைத்திரி என்ற கன்னி | 6 நாள் | 6 மாதம் | 6 ஆண்டு |
| 7. | உருத்திர கௌரி மாரியம்மை | 7 நாள் | 7 மாதம் | 7 ஆண்டு |
| 8. | சுப்புரமாதங்கி என்ற பகவதி | 8 நாள் | 8 மாதம் | 8 ஆண்டு |
| 9. | குணத்தி வாயக்னி குடோரி | 9 நாள் | 9 மாதம் | 9 ஆண்டு |
| 10. | கஞ்சி காலாக்கினிருத்திரி | 10 நாள் | 10 மாதம் | 10 ஆண்டு |
| 11. | பஞ்சமி பாதிரி மாகாளி | 11 நாள் | 11 மாதம் | 11 ஆண்டு |
| 12. | அரக்கி உச்சங்கி | 12 நாள் | 12 மாதம் | 12 ஆண்டு |
| 13. | உச்சங்கி என்ற பிடாரி | 13 நாள் | 13 மாதம் | 13 ஆண்டு |
| 14. | மாடன் என்ற உக்கிரவீரன் | 14 நாள் | 14 மாதம் | 14 ஆண்டு |
| 15. | பேச்சியம்மன் என்ற யோனருத்திரி | 15 நாள் | 15 மாதம் | 15 ஆண்டு |
| 16. | தெய்வகன்னி என்ற மாலைமோகினி | 16 நாள் | 16 மாதம் | 16 ஆண்டு |

**அடிப்படை நூல்:**


1. குழந்தை வைத்தியம் **மே. சி. சுப்ரமணியம்** தாமரை நூலகம் 1987
2. 16 வருஷத்திய பால கிரகதோஷம் **ஆர். ஜி. பதி கம்பெனி**
**வாகீஸ்வரி அச்சகம்**, சென்னை-1 1987

## வாலை வாகடத்தில் உள்ள பிணிகள்

| மாதம் | நோயின் பெயர் |
| --- | --- |
| 1-ஆம் மாதம் | சிவலி |
| 2-ஆம் மாதம் | கிரந்தி |
| 3-ஆம் மாதம் | வரளை |
| 4-ஆம் மாதம் | இவடி |
| 5-ஆம் மாதம் | பூதகாளி |
| 6-ஆம் மாதம் | |
| 7-ஆம் மாதம் | நீர்குதி |
| 8-ஆம் மாதம் | முண்டி |
| 9-ஆம் மாதம் | வளம் |
| 10-ஆம் மாதம் | சூலை வாதம் |
| குழந்தை பிறந்தவுடன் — | வெகுளி |

| நாள் | நோயின்பெயர் |
| --- | --- |
| 1-ஆம் நாள் | கஞ்சகை |
| 2-ஆம் நாள் | பச்சை |
| 3-ஆம் நாள் | அறுசனி |

| | |
|---|---|
| 4-ஆம் நாள் | கோமண்டி |
| 5-ஆம் நாள் | அஞ்சலி |
| 6-ஆம் நாள் | அஞ்சி |
| 7-ஆம் நாள் | செவ்வாய் |
| 8 ஆம் நாள் | திண்மை |
| 9-ஆம் நாள் | தடி |
| 10-ஆம் நாள் | கனவு கண்டி |
| 11-ஆம் நாள் | கவடி |
| 12-ஆம் நாள் | சண்டி |
| 13-ஆம் நாள் | சந்தி |
| 14 ஆம் நாள் | செம்மண்டை |
| 15-ஆம் நாள் | அலகன் |
| 16-ஆம் நாள் | ஐவகை |
| 17-ஆம் நாள் | மண்டை |
| 18-ஆம் நாள் | தேனாக்கி |
| 19-ஆம் நாள் | கண்ணா |
| 20-ஆம் நாள் | சனி |
| 21-ஆம் நாள் | அனந்தி |
| 22-ஆம் நாள் | கஞ்சி |

| | |
|---|---|
| 23-ஆம் நாள் | மகாபாலன் |
| 24-ஆம் நாள் | இரத்தம் |
| 25-ஆம் நாள் | இரட்சகன் |
| 26-ஆம் நாள் | சமபார அந்தி |
| 27-ஆம் நாள் | சோதி |
| 28-ஆம் நாள் | முகதீயன் |
| 29-ஆம் நாள் | சகுடன் |

| மாதம் | நோயின்பெயர் |
|---|---|
| 1-ஆம் மாதம் | காபாலி. அரளி |
| 2-ஆம் மாதம் | அரக்கி |
| 3-ஆம் மாதம் | வனப்படச் சுருக்கி |
| 4-ஆம் மாதம் | திவாதி |
| 5-ஆம் மாதம் | |
| 6-ஆம் மாதம் | |
| 7-ஆம் மாதம் | உத்திராபதி, இருளன். |
| 8-ஆம் மாதம் | அழகி, நாமம் |
| 9-ஆம் மாதம் | சங்கபாலி, மகாமுனி |

| | |
|---|---|
| 10-ஆம் மாதம் | நாற்சங்கி, ஆதிபாலன் |
| 11-ஆம் மாதம் | உத்தமகாளிப்பேய் விதி |
| 12-ஆம் மாதம் | முறுக்கி,வீரன் |
| 14-ஆம் மாதம் | மாமுனிவன் |

| **ஆண்டு** | **நோயின் பெயர்** |
|---|---|
| 1-ஆம் ஆண்டு | அலகன் |
| 2- " | சருவன் |
| 3 " | சோமக்கண்ணி |
| 4 " | பத்திரகாளி |
| 5 " | இவுளி |
| 6 " | |
| 7 " | எமதூதீ |
| 8 " | திருதுமன் |
| 9 " | காளி |
| 10 " | பவனகன் |
| 11 " | திருவி |
| 1 "2 | அற்பசி |

**கர்ப்ப நோய்கள்**

1. அகால பிரசவம்
2. வெள்ளை ஒழுக்கு
3. கருப்பை வீக்கம்
4. கருப்பைக் கட்டி
5. மாதவிலக்குத் தடைபடுதல்
6. மாதவிலக்கின் போக்கு

**குழந்தை செய்திகள்**

1. குருத்துக் குழந்தை
2. அறைக் குழந்தை
3. முலை உண் குழந்தை
4. கைக் குழந்தை
5. விளையாட்டுக் குழந்தை
6. வயதுக் குழந்தை
7. பச்சைக் குழந்தை
8. சப்பாணிக் குழந்தை
9. தேரைக் குழந்தை
10. இரட்டைக் குழந்தை

11. சவலைக் குழந்தை
12. அழிக்குழந்தை
13. சாக் குழந்தை
14. தோடக் குழந்தை
15. பேய்க் குழந்தை
16. கன்னிக் குழந்தை
17. தலைச்சன் குழந்தை
18. இடைச்சன் குழந்தை
19. பூரண குழந்தை
20. வயிற்றுக் குழந்தை
21. அதீதக் குழந்தை
22. அலிக் குழந்தை
23. ஆண் குழந்தை
24. பெண் குழந்தை
25. மாணிடக் குழந்தை
26. ரிசிக் குழந்தை
27. உருப்படாக் குழந்தை
28. திருட்டுக் குழந்தை
29. அனாதைக் குழந்தை

**குழந்தைத் தோடம்**

1. நாய் முள்
2. எச்சில்
3. குளி
4. மாதவிலக்கு
5. சையோக ஆண்
6. சையோக பெண்
7. குளித்தவள்
8. தேரை
9. பாலகிரகம்
10. குளிசம்
11. அலி
12. கண்
13. குழி

**நோய்கள்**

1. வலிப்பு
2. நரிமிரட்டல்
3. உள்வலி
4. நாபி இரணம்
5. வீறிடல்
6. மூச்சுத்திணறல்
7. சல தோடல்
8. பல் முளைத்தல்

9. அண்ணம் வெடித்தல்

10. கண் பொங்குதல்

11. கிரந்தி

12. அட்சரம்

13. மூத்திர எரிவு

14. சவலை

15. கரப்பான்

16. கக்குவான்

17. மூத்திரக்குண்டி

18. குழிதோடம்

19. குழந்தை சன்னி

20. மாந்தம்

21. நாக்கு எழாமை

22. இளம்பிள்ளை வாதம்

23. அடி தள்ளல்

24. கிரகதோடம்

25. பட்சி தோடம்

அடிப்படை: T. V. சாம்பசிவம் பிள்ளை
அகராதி II-ஆம் பாகம்

# கர்ப்பம் பற்றிய செய்திகள்

**கணம்**

1. மாந்தகணம்
2. முக்கு கணம்
3. ஊது கணம்
4. சுழிக் கணம்
5. சூலைக்கணம்
6. ஆமக் கணம்
7. மூலக்கணம்
8. சூட்டுக் கணம்
9. வாதக்கணம்
10. பித்தக்கணம்
11. சிலேட்டுமக்கணம்
12. நீர்க்கணம்
13. பிரளிக்கணம்
14. வரட்கணம்
15. கொதிப்புக்கணம்
16. பிறவிக்கணம்
17. மகாக்கணம்
18. வீக்கக்கணம்
19. போர்க்கணம்
20. இரத்தக்கணம்
21. எரிக்கணம்
22. மந்தாரக்கணம்
23. அந்தகக்கணம்
24. ஊதுமாந்தக்கணம்
25. விடமாந்தக்கணம்
26. தேரைக்கணம்

**அடிப்படை:**

**சா. சி.** அ. பக்கம் 1011, II பாகம்

| | |
|---|---|
| கண்ணவி | கண் திருட்டி |
| கண்ணால் சுடுதல் | கண்ணேறுபட நோக்குதல் |
| கருச்சிதைவை | கரு அழித்தல் |
| கருச்சீலை | கருமருந்து தடவிய சீலை மாதவிடாய் சீலை |
| கருநீர் | பனிக்குட நீர் |
| கருநாள் | கருதரிக்கும் நாள் |
| கர்ப்பகாலம் | கர்ப்ப காலப்பொழுது; பொதுவாக 10 மாதங்களாக இருந்தாலும், சில சமயங்களில் 11 அல்லது 12 மாதங்கள் வரை கூட இருக்கும் |
| கருப்பம் கொள்ளல் | கர்ப்பிணி ஆதல் |
| கருப்ப சன்னி | மகப்பேறு கால சுரம். இது மகப்பேற்றுக்குப் பின் ஏற்படும். இரத்தம் கெடுதலால் உண்டாகும் அபாயகரமான சுரம் |
| கர்பபச்சிதைவு | 5 அல்லது 6 மாதத்தில் பிண்டம் பலவீனம் அடையும் போது காணும் கர்ப்பக் கரைவு |

| | |
|---|---|
| கர்ப்பச் சிராலம் | கருப்பை கோளாறால் ஏற்படு வதுஒவ்வொருதடவையும் கர்ப்ப மடைந்த சில மாதத்திற்குப் பிறகு ஏற்படும் கர்ப்ப அழிவு |
| கர்ப்பச் சிலேட்டுமம் | கர்ப்பத்திற்கு கெடுதல் செய்யும் ஒரு வகை சிலேட்டும நோய் |
| கர்ப்ப சின்னம் | மசக்கை, சூதகத்தடை, மார்பு பெருத்தல், மார்புக் காம்பு கறுமை அடைதல், வயிறு பருத் தல், குழந்தை அசைதல் குணம், நடத்தை, பாவனை என்பன மாறுதல் |
| கர்ப்ப சூலை | கருப்பையில் ஏற்படும் குத்தல் நோய். தினால் கருப்பையின் குற்றத் ஏற்படும் வயிற்று வலி |
| கர்ப்ப சூனியம் | கருப்பை இன்மை |
| கர்ப்ப சூடு | குழந்தைகள் கருப்பையில் இருக்கும் பொழுது ஏற்பட்டு உடலை அடுத்திருக்கும் தேகச் சூடு |

| | |
|---|---|
| கருபஞ்ச பூதம் | உடலின் ஐவிதமான கழிவுகள் 1. வாய்நீர், முலைப்பால், அமுரி, விந்து, சுரோணிதம். 2. மலம், சிறுநீர், இரத்தம், வாய் நீர், விந்து. |
| கருப்பதீட்சை | மந்திர சக்தியினால் பெண்களின் கருப்பைக்கோளாறுகளிலிருந்துசுத்தியடையச் செய்யும் கருமம். |
| கர்ப்பத்துளை | கருப்பையில் உள்ள ஓட்டை |
| கர்ப்பநாடி | தொப்புள்கொடி, கர்ப்பத்தைக் கண்டறியும் நாடி |
| கருப்பநாள் | குழந்தை பிறந்த ஒன்பதாம்நாள் |
| கருப்பநீர் | பனிக்குடநீர் |
| கருப்பநோக்காடு | கருப்பவலி |
| கருப்பம் தங்கல் | கரும்பம் கொள்ளல் |
| கருப்பம் பரிசம் | கருப்பம் கொள்ளல் |
| கருப்பபலிதம் | கரும்பம் கொள்ளல் |
| கருப்பப்பூச்சி | கர்ப்பப்புழு |
| கருப்பப்பை | கருதங்கிய பை |

| | |
|---|---|
| கருப்ப மலடு | வயிற்றிலேயே பிள்ளை செத்து, மலடியாக்கும் ஒருவித நோய் |
| கருப்பம் | பிண்டம் |
| கருப்பவலிப்பு | கருப்ப தொடர்பாக பெண் களுக்குவரும் வலிப்பு நோய். |
| கருப்ப அழற்சி | கருப்பை வீக்கம். |
| கருப்ப வாகனம் | சூல் கொள்ளுதல் |
| கருப்பவிப்புருதீ | வயிற்றுப்பிண்டத்தை அழிக்கும் கட்டி |
| கருப்பவிரணம் | கருப்பைப்புண் |
| கருப்பாசய சேதனக் கிரியை | கருப்பையிலிருந்து குழந்தையை வெளியில் எடுக்க, வயிற்றைக் கீறுதல் வயிறு, கருப்பை இவற்றின் பக்கச் சுவர்களை கத்தியாலறுத்து, குழந்தையை வெளிப்படுத்துதல் |
| ருப்பாசயப் பெரும்பாடு | கருப்பையிலிருந்து வெளி யாகும் மிகுதியான இரத்தக் கசிவு |

| | |
|---|---|
| கருப்பாசயம் | கரு உள்ள இடம் |
| கருப்பாசய ரோகம் | கரு உள்ள இடத்தில் ஏற்படும் பொது வான பல நோய்கள் |
| கருப்பிணி சூல் | கருப்பிணியாக இருக்கும் போதே சூல் கொள்ளல் இரட்டைப்பிள்ளைத்தாய்ச்சி |
| கருப்பிணிய வேட்சணம் | கருப்பை நோய்கள் பற்றிய மருத்துவம் |
| கருப்பிண்ட மாற்றம் | கருப்பையில் உள்ள குழந் தையை கைவிட்டுத் திருப்புதல் |
| கருப்புள்ளிக்கோல் | வலிப்பு நோய்க்கு சூடு போடப் பயன்படுத்தும் மூன்று புள்ளிகளைஉடைய கோல் |
| கருப்பை வளைவு | மாதவிலக்கு |
| கருமலம் | குழந்தையின் முதல் மலம் |
| கருவளையல் | கருவளையல் - பூ நீரால் செய்யப்படுவது |

| | |
|---|---|
| கருவிலம் | கிருமிகளால் உண்டான கொப்புளம் |
| கருவிரிதல் | கருப்பை விரிதல் |
| கருஉயிர்த்தல் | ஈன்றல் |
| கர்ப்ப கால பரிமாணம் | கருப்பையில் பிண்டம் நிலைத்திருக்கும் காலம் |
| கர்ப்ப கால சம்பவம் | பிள்ளைப்பேற்றில் நேரும் துன்பம் |
| கர்ப்ப கோசம் | பை |
| கர்ப்பக்கோளாறு | 1. மலச்சிக்கல் |
| | 2. மூலம் |
| | 3. வெள்ளை ஒழுக்கு |
| | 4. பல்வலி |
| | 5. படை |
| | 6. அக்கி |
| | 7. தலைவலி |
| | 8. குரக்குவலி |

9. நெஞ்செரிவு

10. நெஞ்சுத்துடிப்பு

11. சோர்வு

12. கை, கால் வீக்கம்

13. தூக்கமின்மை

14. அசீரண பேதி

15. அதிக வாந்தி

16. நரம்பு வலி

17. பொய் வலி

18. நீர் இறக்கம்

| | |
|---|---|
| கர்ப்ப சங்கு | பிண்டத்தை வெளியாக்கப் பயன்படும் ஒருவகை கருவி |

**கருப்ப வகைகள்**

1. அடிவயிற்றுக் கருப்பம்

2. பொய்க் கருப்பம்

3. இரட்டைக்கருப்பம்

4. வெளிக் கருப்பம்

5. நாள கருப்பம்

6. ஊது கருப்பம்

7. உள், வெளி கருப்பம்

8. தூதகக் கருப்பம்

9. கோச கருப்பம்

10. சவ்வு கருப்பம்

11. அடுக்குக்கருப்பம்

12. நாதாசய கருப்பம்

13. நாத தாரை கருப்பம்

14. அறியா கருப்பம்

15. நாத சண்டப்பை கருப்பம்

16. சண்டப்பை உதர கருப்பம்

17. பன்மை கருப்பம்

**கருங்கிரந்தி:**

1. இது குழந்தை பிறந்த 3 மாதத்திற்குள் உடல் முழுவதும் அல்லது உள்ளங்கை உள்ளங்கால் முழங்கை முழங்கால் உதடு முதுகு முதலிய இடங்களில் கறுத்து குரல் கம்மி, உடல் வெதும்பி, முலை உண்ணாது சீறி சீறி அழுது மேல் மூர்ச்சையும் இருமலும் கண்டு துன்புறுத்தும் ஓர் நோய்.

2. உடல் முழுவதும் எரிச்சலும், நமைச்சலும் கண்டு, சிவப்பாய் தடித்து அதனின்று முளை போல் தோன்றி நீர்கட்டி, வெடித்துப் புண்ணாகி உதிரும் ஒரு சரும நோய்.

(பக்கம் 1140 - சாம்ப சிவம் பிள்ளை அகராதி 2-ஆம் பாகம்)

**ஆண்பிள்ளைப் பருவம்**

காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம் வருகை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர்.

**பெண்பிள்ளைப் பருவம்**

கழங்கு, அம்மானை, ஊசல்.

(சைவ சித்தாந்தக் கழக அகராதி)

**கர்ப்பம் தரிக்கும் காலம்**

1 முதல் 3 நாட்கள் மாதலிலக்கு நாட்கள்

| | |
|---|---|
| 4 முதல் 15 நாட்கள் | கருத்தரிக்கும் நாட்கள் |
| 16 முதல் 28 நாட்கள் | கருத்தரிக்காத நாட்கள் |

— தொல்காப்பியம்

| | |
|---|---|
| 1 முதல் 3 நாட்கள் | பூப்புக்காலம் |
| 4 முதல் 8 நாட்கள் | கருத்தரியா காலம் |
| 9 முதல் 20 நாட்கள் | கருத்தரிக்கும் காலம் |

— திருமூலர்

| | |
|---|---|
| 1 முதல் 3 நாட்கள் | பூப்புக்காலம் |
| 4 முதல் 10 நாட்கள்<br>19 முதல் 28 நாட்கள் | கருத்தரியா காலம் |
| 11 முதல் 18 நாட்கள் | கருத்தரிக்கும் காலம் |

— ஆங்கில மருத்துவம்

களவு கால வரை - 2 மாதம்

— இறையனார் களவியல்

**கர்ப்போபநிஷத்**

| | |
|---|---|
| 7 இரவுகள் | நீர்க்குமிழி |
| 15 நாட்கள் | பிண்டம் |
| 1 மாதம் | கடினம் |
| 2 மாதம் | தலை |
| 3 மாதம் | பாதம் |
| 4 மாதம் | மணிக்கட்டு |
| 5 மதாம் | முதுகு |
| 6 மாதம் | கண், மூக்கு, வாய் |

| | | |
|---|---|---|
| 7 | மாதம் | உயிர் |
| 8 | மாதம் | முழு உருவம் |
| | தந்தை வீரியம் | ஆண் |
| | தாய் வீரியம் | பெண் |

பிள்ளைப்பேறு இல்லாதவர்களை காப்பான இடத்திற்கு போக அனுமதித்தல்

- முது குடுமிப் பெருவழுதி.

"ஆவு மானியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை ஈரும் பேணி"

புறம் 9-1

முதல் சூல் கொண்ட மகளிர் இடுக்கண் இன்றி மகவைப் பெற, இறைவனை வேண்டுதல்.

(மதுரை 609)

மகளிர் பிள்ளை பெற்றால் வளையல் அணியார்

(மலை 253)

தாய் வயிற்றிலிருந்து தாயம் எய்தி

(பொருந)

**தாய்**

தாய், ஊட்டுத்தாய், முலைத்தாய், கைத்தாய், செவிலித்தாய் - திவாகரம்

**புறநானூறு**

'சிறப்பில் சிதடு, உறுப்பில் பிண்டம்
கூனும், குறளும் ஊமுஞ் செவிடும்
மாவும் மருளும் உளப்பட வாழ்நர்'

— முது கண்ணன் சாத்தன்

(சிதடு - குருட்டுத்தன்மை, பிண்டம் - தசைக்
மா - விலங்கு வடிவம், மருள் - மூளை வளர்ச்சி
யற்றல்)

குழவி.... ஊன் தடி பிறப்பினும்

- கணைக்கால் இரும்பொறை

"நோன்மையும் பெருமையும் மெய்கொள அருவி
பன்னல் சான்ற வாயிலொடு பொருந்தி
தன்னினாய தகுதி"

—(தன்னினாய மெய் - மகப்பேறு)

## ஆண் பருவங்கள்

| | | |
|---|---|---|
| 1. பாலன் | - | 1 முதல் 7 வயது வரை |
| 2. மீளி | - | 8 முதல் 10 வயது வரை |
| 3. மறவோன் | - | 11 முதல் 14 வயது வரை |
| 4. திறவோன் | - | 15 முதல் வயது வரை |
| 5. காளை | - | 16 வயது வரை |
| 6. விடலை | - | 17 முதல் 30 வயது வரை |
| 7. முதுமகன் | - | 30 வயது முதல் |

## பெண்ணின் பருவம்

| | | |
|---|---|---|
| 1. பேதை | 7 | வயது வரை |
| 2. பெதும்பை | 11 | வயது வரை |
| 3. மங்கை | 12 | வயது வரை |
| 4. மடந்தை | 19 | வயது வரை |
| 5. அரிவை | 25 | வயது வரை |
| 6. தெரிவை | 31 | வயது வரை |
| 7. பேரிளம் பெண் | 42 | வயது வரை |

— **பன்னிருபாட்டியல்**